20 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan

DENTAL SURGEON

DENTAL OFFICE

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351 Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2010

# வடக்கு கிழக்குக்கான வெளிநாட்டு உதவிகள் நேரடியா கிடைக்க வேண்டும்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில், சுயாட்சிக் கட்டமைப்பின் அடிப்படையில் போதிய அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

புதிய தொழிற்துறைகளை உருவாக்குவதற்கும் தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தக்கூடிய வகையில் வடக்கு - கிழக்கில் நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவருவதற்கும் ஏற்ற அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ் பேசும் முஸ்லீம்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நிலம், சட்டம் போன்ற விடயங்களிலும் சுகாதாரம், கல்வி, வளங்கள் மற்றும் நிதி முகாமைத்துவம் போன்ற சமூகப் பொருளாதார மேம்பாட்டு விடயங்களிலும் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படவேண்டும் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களதும் தமிழர்களதும் வரலாற்று ரீதியான தாயகம் எனக் கூறும் கூட்டமைப்பின் 12 பக்க அறிக்கை, சிங்களவர்களுடனும் நாட்டின் ஏனைய இனங்களுடனும் இணைந்து வாழ்ந்துவரும் தமிழர்கள் தமக்கெனத் தனித்துவமான தேசியத்தினைக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கிறது.

போரின் விளைவாக தங்களது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்திருக்கும் தமிழர்கள் விரைவாக மீள்குடியேற்றப்பட வேண்டும், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு வடக்குக் கிழக்கில் இராணுவ மயப்படுத்தல் முழுமையாக இல்லாது செய்யப் பட வேண்டும், போரின்போது உயிரிழந்தவர்களது குடும்பங்களுக்கும் படுகாயமடைந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும், இன நல்லிணக்கத்தின் ஆரம்ப முனைப்பாக, எந்தவிதக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாமல் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும் ஏனையவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்றும் தனது உடனடிக் கோரிக்கைகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

இதேசமயம், தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைச் சிதைத்துச் சீர்குலைத்து எதிர்காலத்தில் தங்களது எந்தவொரு அரசியல் கோரிக்கைக்காகவும் வலுவான முறையில் குரல் கொடுக்க முடியாதவர்களாக அவர்களை வைத்திருப்பதற்கான ஒரு சதி முயற்சிக்கு துணைபோவதற்காகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுத் தேர்தலில் பெருவாரியான அரசியல் குழுக்களும் சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டிருக்கின்றன என்பதை அந்த மக்கள் தற்போது புரிந்து கொள்ள ஆரம்பித்திருப்பதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்த நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் கொண்டிருக்கக்கூடிய பிரதிநிதித்துவத்தின் கனதியையும் கட்டுக்கோப்பையும் பொறுத்தே அவர்களின் எதிர்கால அரசியல் பாதை அமையும் என்பதில் சந்தேகமில்லை. போரின் முடிவுக்குப் பிறகு அரசியல் வெற்றிடத்தில் விடப்பட்டிருக்கின்ற தமிழ் மக்கள் தங்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயமொன்றை உருவாக்குவதற்கான வாய்ப்பாக நாடாளுமன்றத் தேர்தலை நிதானத்துடனும் விவேகத்துடனும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

இலங்கைத் தமிழ் மக்கள் அவர்களின் நியாய பூர்வமான அரசியல் அபிலாசைகளுக் காக உறுதிப்பாட்டுடன் குரல் கொடுக்கக்கூடிய அரசியல் தலைமைத்துவம் அற்றவர் களாக இருக்கின்ற நிலை தொடர வேண்டுமென்பதே பேரினவாத சக்திகளின் விருப்பமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த நோக்கத்திற்காக அச்சக்திகள் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளையும் விலை போகக்கூடிய கல்விமான்கள், புத்திஜீவிகள் எனப்படுவோரையும் பயன்படுத்த ஆரம்பித்திருக்கின்றன என்பதை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப் பட்டிருக்கும் விசமத்தனமான பிரசாரங்களின் மூலம் தெளிவாக உணரக் கூடியதாக இருப்பதாகவும் அவதானிகள் கூறியிருக்கிறார்கள்.



கல்விமான்கள் என்றும் எழுத்தாளர்கள் என்றும் புத்திஜீவிகள் என்றும் தங்களைக் கூறிக் கொள்ளும் சிலரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாகத் தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார்கள். இக்குழுவின் வேட்பாளர்களில் ஒருவர் தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் இறுதித் தினத்தன்று யாழ்ப்பாணக் கச்சேரியில் இடதுசாரி அரசியல் பிரமுகர் ஒருவருடன் கலந்துரையாடுகையில் "நாங்கள் தேர்தலில் போட்டியிடுவது ஒரு பம்பலுக்கு" என்று கூறினாராம். மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரின் விளைவான அவலங்களில் இருந்து மீளமுடியாமல் தமிழ் மக்கள் அல்லாடிக் கொண்டு இருக்கும்போது படித்தவர்கள் என்ற தங்களைக் காட்டிக் கொள்வோர் "பம்பலுக்கு" தேர்தலில் நிற்கிறார்கள். இதேசமயம் "கொள்கையில் உறுதியாக நிற்கும் தமிழ் மக்கள் அசைக்க முடியாத தீர்ப்பை வழங்குவார்கள்" என்று

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

GSF Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554

நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.

» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More.........

355 Admiral Blvd. Unit 5
Mississauga, ON, L5T 2N1
Tel: (905) 565 6555
Fax: (905) 565 8655

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs

• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

RBC Royal Bank

Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region

Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

Sales & LEASING

MARKVILLE

KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
HomeLife Higher Standards
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை

• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

MONEY TRANSFER

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3
416.267.8221

3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...

HomeLife Higher Standards

ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# சைவசமயமும் சாமியார்களும்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச்சொன்னாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெரிவதுதான் அறிவுடமையாகும் என்று இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வள்ளுவர் கூறியிருந்தார். இந்த அறிவுரை எல்லோருக்கும் எக்காலத்திற்கும் ஏற்றதாகும். சைவசமயத்தில் எத்தனையோ முனிவர்கள், நாயன்மார்கள், துறவிகள் காலத்திற்கு காலம் தோன்றி பல அறிவுரைகளையும் சமய பிரசங்கங்களையும் மக்களுக்கு, குறிப்பாக பாமரமக்களுக்கு இலகு மொழியில் விளங்கப்படுத்தி வந்திருக்கிறார்கள். மதங்களுக்கு இருப்பதுபோல் ஒரு பிரத்தியேகமான சமய நூலோ ஒரு வரையறுக்கப்பட்ட வழிபாட்டு முறையோ இல்லாமல் இருப்பது தான் சைவசமயத்திற்கு உரிய சிறப்பு. ஒருவர், தான் விரும்பிய நேரம், தான் விரும்பிய மாதிரி, தான் விரும்பிய இடத்தில் இறைவனை வழிபடலாம். கோயிலுக்கு போகாவிட்டால் பாவம் என்றில்லை. ஒரு சைவசமய குருமாரும் உங்கள் வீட்டிற்கு வந்து நீங்கள் ஏன் கோவிலுக்கு வரவில்லை என்று கேட்கமாட்டார்கள். சைவசமயமும் அதற்குரிய தத்துவங்கள் மற்றும் புத்தகங்கள் எல்லாம் கடலை விட பெரியது. அதைப் படிக்க விரும்பிய எவரும் படித்து தமது அறிவுக்கு ஏற்ற மாதிரி விளங்கிக் கொள்ளலாம், விளங்கப்படுத்திக் கொள்ளலாம். அவர்களது விளக்கத்தை சரி என்றோ தவறு என்று கூற ஒரு சமயகுருவோ அல்லது ஒரு சமய நிறுவனமோ இல்லை.

ஒன்ராரியோ மாகாண அரசின் சுலோகம் ஆன "Yours to Discover" என்ற வாசகம் சரியாக சைவசமயத்திற்கு பொருந்தும். Saivam is yours to discover. சைவ சமயத்தில் முப்பது முக்கோடி தேவர்களும், பலநூற்றுக்கு மேற்பட்ட இறைவன் வடிவங்களும், ஆயிரக்கணக்கான புராணங்கள், கதைகளும் எந்த மதத்திலும் இல்லாத அளவிற்கு உண்டு. இவை எல்லாவற்றையும் கற்று அறிந்தவர் என்று நிச்சயம் ஒருவரும் இருக்க முடியாது. ஏனெனில் ஒருவரின் வாழ்நாள் இவற்றை எல்லாம் படிப்பதற்கு போதாது. இதனாலேயே சைவசமயத்தின் ஒருபகுதி தத்துவங்களை தமது நேரத்தை ஒதுக்கி படித்தவர்கள் தமக்கு விளங்கிய மாதிரி பிரசங்கங்கள் செய்வதும் அவ்வாறு படிக்க இயலாதவர்கள், படிக்க நேரம் கிடைக்காதவர்கள் அத்தத்துவங்களை எடுத்துரைக்கும் அப்பிரசங்கங்களை கேட்பதும் சைவசமயத்தில் மலிந்து இருக்கின்றன.

இவ்வாறு தமது வாழ்நாளில் பெரும் பகுதியை சமயத்தை பற்றி அறிய செலவிட்டு பின்னர் தாம் அறிந்தவற்றை மக்களிற்கு கூறுமாறு வெளிக்கிட்டவர்களை எந்த ஒரு நிறுவனமும் பரீட்சை வைத்து "துறவி" அல்லது "சாமியார்" என தராதரப்பத்திரம் வழங்கவும் இல்லை. அவ்வாறு வழங்குவதற்கு ஒரு நிறுவனமும் சைவசமயத்தில் இல்லை. இவ்வாறு தங்களை தாங்களே துறவி என்றோ சாமியார் என்றோ கூறுபவர்களுக்கு அவர்களது நடத்தையும் அவர்களை பின்பற்றுபவர்களது எண்ணிக்கையும் தான் சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு அந்தஸ்தை கொடுத்து வைத்திருக்கின்றன. இவர்களில் நிச்சயமாக நல்லவர்கள், நல்ல நோக்கம் உடையவர்கள் இருக்கிறார்கள். அதேபோல் தீயவர்களும் தீயநோக்கம் அல்லது பணம் சம்பாதிக்கும் நோக்கம் உடையவர்களும் இருக்கிறார்கள்.

நிறுவனம் ஒன்று பரீட்சை வைத்து, அதற்கும் மேலாக வருடாவருடம் அவர்களது நடத்தை (Ethics), கல்வித்தகைமைகளை மீள் பரிசோதனை செய்து அனுமதிப்பத்திரம் வழங்கி கண்காணித்து வரும் வைத்தியர், ஆசிரியர் துறைகளில் சில தீயவர்கள் மற்றும் சமுதாயத்தை சீரழிப்பவர்கள் இருக்கிறார்கள். ஒரு பரீட்சையோ வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்கும் நிறுவனமோ இல்லாத "துறவி" அல்லது "சாமியார்" களில் ஒரு சில தீயவர்கள் இருப்பது முற்றிலும் இயற்கையே. அவர்களை அடையாளங்கண்டு தகுந்த தண்டனை வழங்கவேண்டும். தங்களைத் தாங்களே "துறவி" அல்லது "சாமியார்கள்" எனக் கூறிக்கொண்டு மக்களுக்கு சேவை செய்பவர்கள் எல்லோரும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர் கள்தான் இயற்கைக்கு மாறானவர்கள்.

சமயங்கள் சிலவற்றிற்கு சமயத்தலைவராக வருபவருக்கு பரீட்சை மற்றும் அனுமதிப் பத்திரம் வழங்கும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவ்வாறு இருந்தும் இவர்களில் எத்தனையோ சமயத் தலைவர்கள் சமுதாயத்தையும் இளந்தலை முறையினரையும் சீரழித்ததற்காக அவர்களது மதத்தலைமையும் சில சந்தர்ப்பங்களில் அரசாங்கமும் மன்னிப்பு கோரியதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு கட்டியதும் நடைபெற்றுள்ளது. இதை நீங்கள் அடிக்கடி ஊடகங்கள் மூலம் அறிந்திருப்பீர்கள்.

இதனால் சைவசமயத்திலும் அதுவும் பரீட்சைகளோ, அனுமதிப்பத்திரம் வழங்குவதோ இல்லாத நிலையில், ஒரு சில துறவிகள் (சாமியார்கள்) கெட்டவர்களாக இருப்பது இயற்கை. அது மதத்தின் தவறு அல்ல.

ஒரு சில சாமியார்களின் துர்நடத்தையை சாட்டாக வைத்து சைவசமயத்தையே பிழை என்று கூறும் தங்களை தாங்களே பகுத்தறிவுவாதிகள் என்று அழைக்கும் போலிகளிடமிருந்து ஏமாறாமல் அவதான-மாக இருக்க வேண்டும். இவ்வாறு தம்மைத் தாமே "பகுத்தறிவுவாதிகள்" என்று கூறுவோரும் ஒரு பரீட்சையில் சித்தி அடைந்தோ அல்லது ஒரு நிறுவனத்தால் அனுமதிப்பத்திரம் பெற்று வந்தவர்கள் அல்ல. அவர்களில் சிலர் சமுதாயக் கட்டுபாடுகளை மீறி துர்நடத்தையில் ஈடுபட்டு (பலதாரம், அதிக வயது வித்தியாசமான திருமணம்) அதை நியாயப்படுத்த சைவசமயத்தை பிழை என்றும் தங்களை பகுத்தறிவுவாதிகள் என்றும் கூறியவர்களாவர்.

அண்மையில் இந்திய சாமியார் ஒருவர் துர்நடத்தையில் ஈடுபட்டுள்ளதை ஒளிபரப்பிய இந்தியத்தொலைக்காட்சி ஒன்று அதன் முடிவில் கூறியது "சமயத்தையும் சாமியார்களையும் நம்பவேண்டாம்". இது எவ்வளவு மடமை. இதை எவ்வாறு "பகுத்தறிவு" என்று கூறுவது.

ஒன்ராரியோவில் அண்மையில் நடைபெற்ற சம்பவம் ஒன்றைப் பற்றிப் பார்ப்போம். உங்களில் பலருக்கு தெரிந்திருக்கும், கனடாவின் மிகப்பெரிய விமானப்படைத்தளம் Trenton இல் இருக்கின்றது. அதற்கு கடந்த வருடம் படைத்தளத்தை நிர்வகிக்கும் Commander ஆக Toronto பல்கலைக்கழக பட்டதாரியும், இராணுவப் பல்கலைக்கழகத்தின் முதுமானிப்பட்டம் பெற்றவரும், 22 வருடங்களாக கனேடிய விமானப்படையில் சேவை செய்தவருமான 46 வயது கேணல் Russell Williams நியமிக்கப்பட்டார். இவரின் நிர்வாகத் திறமை கனேடிய இராணுவத்தில் மிகவும் சிறப்பாக பேசப்பட்டது. இதனால் கனடாவின் மிகவும் முக்கியம் வாய்ந்த (உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி எந்த முக்கிய நிகழ்விற்கும் கனடாவில் இருந்து வழங்கும் பாதுகாப்பிற்கு Trenton விமானப் படைத்தளமே பொறுப்பு) இந்த விமானத்தளத்தின் நிர்வாகத்தை இவரின் கையில் கனேடிய இராணுவமும் கனேடிய அரசாங்கமும் கையளித்தது. ஆனால் அவர் எப்படிப்பட்ட நடத்தை உள்ளவர் என்று ஒரு சில மாதங்களின் பின்னர் தான் வெளியுலகுக்கு தெரியவந்தது. அவர் பாலியல் குற்றங்கள் புரிந்ததாகவும் கொலைகள் செய்ததாகவும் ஒன்ராறியோ மாகாண பொலிசாரால் அவர் ஒரு ஞாயிற்றுக்கிழமை குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டபோது கனேடிய முழு இராணுவமுமே திகைப்பில் ஆழ்ந்தது. சிலர் இதையே சாட்டாக வைத்து (எம்மிடையேயுள்ள பகுத்தறிவுவாதிகள் போல்) கனேடிய முழு இராணுவத்தையுமே பழி கூறினார்கள்.

இதை அடுத்து நடந்த நிகழ்வுகள் தான் மிகவும் முக்கியமானவை. எமது சமுதாயம் கற்றுக்கொள்ளவேண்டியது. கேணல் கைது செய்யப்பட்ட மறுநாளே கனேடிய விமானப்படைக்கு பொறுப்பான தளபதி (Major General) Yran Blondin, Trenton விமானப்படைத்தளத்திற்கு விரைந்தார். அவரைத் தொடர்ந்து கனேடிய முழு இராணுவத்திற்கும் பொறுப்பான தளபதி (General) Walten Natynczyk, Trenton விமானப்படைத்தளத்திற்கு சென்றார். இவர்கள் ஆற்றிய கனேடிய விமானப்



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 03ம் பக்கம்



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Fax: 416.282.4978
3. email: vlambaram@sympatico.ca

விளம்பரம்
VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
Jenisha Tailors & Designs
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை



416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON

# கனடாவின் கதை - 17

## மர வர்த்தகம்

தோல் வியாபாரம் கனடாவில் குறைய ஆரம்பித்தது. இதன் வெற்றிடத்தை நிரப்ப மர வியாபாரம் முக்கியத்துவம் பெற்றது. சென்.ஜோன் ஆற்றுப்பகுதி இதற்காக முதன் முதலில் பாவிக்கப்பட்டது. நீயூ பிறவுண்ஸ்விக்கின் தேடுவாரற்றுக் கிடந்த ஆற்றுப்பகுதி மரங்கள் வெட்டப்பட்டு சென்.ஜோனுக்கு கொண்டு செல்லப்பட்டு இங்கிலாந்துக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்டன. இப்பகுதி மரங்கள் தேவைக்கு குறைவாக இருந்தமையால் சென்.லோறன்ஸ் ஆற்றுப் பகுதிகளில் இருந்த மரங்கள் வெட்டப்பட்டு கியூபெக் நகரத்துக்கு அனுப்பப்பட்டன. அங்கிருந்து அவை ஐரோப்பாவுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இப்பகுதி மரங்களும் போதாமையினால் வர்த்தகம் மேற்கு பகுதிக்கு நகர்த்தப்பட்டது. குறிப்பாக ஒட்டாவா ஆற்றுப்பகுதியிலிருந்து 1845 இல் கியூபெக் நகரிலிருந்து அனுப்பப்பட்ட மரங்களில் முக்கால்வாசியைப் பெறக் கூடியதாய் இருந்தது. மர வர்த்தகம் மாபெரும் வர்த்தகமாகப் பரிணமித்தது. ஒரு கோடையின் போது 1200 கப்பல்கள் கியூபெக் நகரிலிருந்து மட்டும் மரங்களை ஏற்றிச் சென்றன.

தனிப்பட்ட குழுக்களாகச் சேர்ந்து ஆண்கள் மரங்களை வெட்டினர். 19 ஆம் நூற்றாண்டின் பெரும் பகுதிகளில் சதுரமான மரங்களே பொதுவாக ஏற்றுமதி செய்யப்பட்டன. அதாவது வெட்டப்பட்ட மரத்துண்டகளைச் சதுரமாக வெட்டிய பின்னரே கப்பல்களில் ஏற்றினர். நதிக் கரைப் பிரதேசங்களில் வெட்டப்பட்ட மரங்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்ட ஆற்றில் மிதக்க வைத்து முக்கிய துறைமுகங்களுக்கு கொண்டு சென்றனர். ஒட்டாவா ஆற்றுப் பகுதிகள் ஒடுக்கமாகவும் நீரோட்டம் அதிகமாகவும் இருந்ததால் மரங்களை சிறிய "தொட்டில்கள்" போன்று கட்டி ஆற்றில் மிதக்க விட்டனர். ஆனால் சென்.லோறன்ஸ் ஆற்றில் நீண்ட கட்டுமரங்களாக சில மூன்றிலொரு மைல் நீளமுள்ளனவாக கட்டப்பட்டு மிதக்க விடப்பட்டன. பொதுவாக வெள்ளைப்பைன் மரங்களையே வெட்டினர். இதற்கு காரணம் இவை மிகவும் இலேசாக மிதக்கக் கூடியன. ஆனால் ஓக் மரங்களுக்கே போதிய கிராக்கி இருந்தது. எனினும் இவை பாரமானவையாகவும் மிகக் கவனமாக அனுப்பப்பட வேண்டியவையாகவும் இருந்தன.



1842 பிரித்தானிய வரி, மரங்களுக்கு விதிக்கப்படவில்லை. இதனால் அத்திலாந்திக் கடல் வர்த்தகம் ஆதாயம் தருவதாய் இருந்தது. பிரித்தானியாவில் புகையிரத தண்டவாளங்களுக்கு மரங்கள் அதிகம் தேவைப்பட்டன. கப்பல்களுக்கும் புதிய தொழினுட்பத் தேவைகளுக்கும், குறிப்பாக நீராவிக்கப்பல்களுக்கும் மரங்கள் அதிகம் தேவைப்பட்டன. இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் மரவர்த்தகத்தில் சரிவு ஏற்பட ஆரம்பித்தது. ஏனெனில் மரப்பலகைகளுக்கும், கடதாசி தயாரிப்பதற்கும் மரங்கள் பயன்படுத்தப்பட்டன.

மரவர்த்தகத்தின் பக்கவிளைவுகளுள் ஒன்றாக பிரித்தானிய வட அமெரிக்காவில் குடியேற்றம் அதிகரித்தது. மரம் அதிக இடத்தை பிடித்ததுடன் ஒரு முக்கியமான சரக்குப் பொருளாக இருக்கவில்லை. ஒரு பிரித்தானியக் கப்பல் கொண்டு சென்ற பொருட்களுக்குச் சமமான விலை மதிப்புள்ளவற்றை ஈடு செய்வதற்கு 12 கப்பல்களில் மரங்களை ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தது. எனவே கனடாவிலிருந்து மரங்களை ஏற்றிச் சென்ற கப்பல்களுக்கு பிரித்தானியாவிலிருந்து கொண்டு வருவதற்குப் போதிய பொருட்கள் இருக்கவில்லை. சில கப்பல்கள் உப்பு, செங்கல் முதலியனவற்றைக் கொண்டு வந்தன. ஆனால் பெரும்பாலானவை பாரச்சுமைகளைக் கொண்டு வர நேர்ந்தது. மேலும் கனடாவின் சனத்தொகை மிகக் குறைவாகவும் போதிய பணப்புழக்கம் இல்லாததாலும் பிரித்தானியப் பொருட்களுக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

ஆனால் கப்பல்காரர் திரும்பி வரும் போது பிரித்தானியாவிலிருந்து குடியேற்றக்காரரை கொண்டு வர ஆரம்பித்தனர். இதனால் கப்பலில் ஏற்பட்ட வெற்றிடங்களை புதிய குடிவரவாளர்களால் நிரப்பினர். மரங்களை இறக்கிய பின்னர் வட அமெரிக்காவில் குடியேற விரும்பும் மக்களைத் தமது கப்பல்களில் ஏற்றினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலங்களில் வரி விதிக்கப்பட்டபோது கப்பல்களின் நிலைமை மிகமோசமாக இருந்தது. ஆனால் இவற்றில் பிரயாணஞ் செய்வதற்கு மிகவும் குறைவான கட்டணமே அறவிடப்பட்டது. மேலும் மர வியாபாரம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, ஐரோப்பாவில் நெப்போலியப்போர் ஆரம்பமாகியது, இதனால் பெரும்பாலான மக்கள் இம்மலிவான கட்டணங்களைப் பயன்படுத்திப் பயணத்தை மேற்கொண்டனர். பல ஆண்டுகள் சென்ற பின்னர் வரிவிலக்கப்பட்டதோடு கப்பல் சொந்தக்காரருக்கிடையே போட்டி மனப்பான்மை ஏற்பட்டதனால், கப்பல்களின் நிலைமையும் பாதுகாப்பும் அதிகரித்தன. மேலும் பயணிகள் தமது தேவையான உணவு, படுக்கை ஆகியனவற்றோடு வந்தமையால் கப்பல் பிரயாணம் நடத்துவது சுலபமாக இருந்தது. எனவே ஐரிஷ் பத்திரிகைகளில் விளம்பரங்களைப்போட்டு கப்பலின் அடித்தளத்தில் தட்டுப்படுக்கைகளைப் பல கப்பல்காரர்கள் அமைத்தனர். ஒருமரமேற்றும் கப்பல் ஏறக்குறைய 200 பயணிகளை ஏற்றிச்செல்லக் கூடியதாய் இருந்தது. இதனால் புதிய குடிவரவாளரின் தொகை எதிர்பாராத அளவில் அதிகரிக்க ஆரம்பித்தது.

**- துறையூரான் -**

## சைவசமயமும்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

படைத்தளத்தின் வீரர்களைத் தேற்றும் (Counselling) உரைகள் நிச்சயமாக இங்கு குறிக்கப்படவேண்டியவை. இவர்கள் உரையாற்றும் போது கூறிய விடயங்கள்; 'நடந்தது ஒரு தனிமனிதனின் செயல். இதற்காக கனேடிய இராணுவத்தையோ அல்லது அவரது இனத்தையோ பழித்தல் கூடாது. நாங்கள் எல்லோரும் அதிர்ச்சியில் தான் உள்ளோம். நாங்கள் திரும்பிச் செல்ல முடியாது. முன்னோக்கித்தான் பயணிக்க வேண்டும். நான் கனேடிய இராணுவ வீரனாக இருப்பதில் மிகவும் பெருமைப்படுகின்றேன். நான் கனேடிய இராணுவ உடையை அணிந்திருப்பதில் பெருமைப்படுகின்றேன். கடந்த நூறு வருடங்களில் நாங்கள் 16 ஆயிரம் படைவீரர்களை பரீட்சை வைத்தும், நேர்முக விசாரணைகள் செய்தும் கேணல் தரத்திற்கு தரம் உயர்த்தியிருக்கின்றோம். இதில் இதுவரை ஒருவரே இந்த பாரிய குற்றச்செயலை செய்ததாக கைது செய்யப்பட்டுள்ளார். இது எமது தேர்வு முறையின் சிறப்பை காட்டுகிறதே ஒழிய தேர்வு முறையின் குறைவு அல்ல.' கனேடிய பாதுகாப்பு அமைச்சர் Mr. Peter Mckay உரையாற்றும் போது "நடைபெற்றது ஒரு அதிர்ச்சியளிக்கும் சம்பவம். ஆனால் இப்படியான தருணத்தில் நாங்கள் கனேடிய இராணுவத்தில் இருக்கும் ஒவ்வொரு ஆணிற்கும் பெண்ணிற்கும் உறுதுணையாக நிற்போம். நான் Trenton இலுள்ள ஒவ்வொரு இராணுவவீரருக்கும் சொன்னேன், நிமிர்ந்து நில்லுங்கள் பெருமையுடன் நில்லுங்கள் (I told the soldiers at Trenton to stand tall and stand proud) நாங்கள் முன்னோக்கிச் செல்வோம்."

இவ்வாறான பேச்சுக்களைத் தொடர்ந்து Trenton நகர முதல்வர் Mr. John Williams தலைமையில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் Trenton இராணுவத்தளத்தில் கூடி கனேடிய இராணுவத்திற்கு தங்களது ஆதரவைத் தெரிவித்து பதாகைகள் சுலோகங்கள் தாங்கி ஊர்வலம் நடத்தினார்கள்.

இவ்வாறான தகுந்த நடவடிக்கைகளை கனேடிய இராணுவ உயர் தலைமைப்பீடம் உடனடியாக எடுத்ததால் கேணலை கைது செய்தவுடன் பொதுமக்கள் சிலர் இராணுவ உடை அணிந்தவர்களை நோக்கி காறித்துப்பிய நிகழ்வு உடனடியாக ஒரு நாட்டுப்பற்று நிகழ்வாக மாற்றப்பட்டது.

இதையே தான் சில சாமியார்களின் தீய நடத்தையை சாட்டாக வைத்து சைவ சமயத்தையே பழிக்கும் பகுத்தறிவுவாதிகள் என்று தம்மை கூறிக்கொள்பவர்களுக்கும் கூறவேண்டும், செய்து காட்டவேண்டும். நடந்தது தனிமனிதனின் செயல். இதற்காக முழுசாமியார்களையும் (துறவிகளையும்) சைவசமயத்தையும் பழிப்பது கூடாது. நாங்கள் திரும்பிச்செல்ல முடியாது. முன்னோக்கி பயணிக்கவேண்டும். ஒரு பரீட்சையோ அனுமதிப்பத்திரமோ இல்லாமல் தன்னார்வத் தொண்டர்களாக வரும் சாமியார்களில் சிலர் தீயவர்களாக இருப்பது இயற்கை.

சைவசமயத்தவர் தாங்கள் சைவசமயத்தவர் என்பதில் பெருமைப்பட வேண்டும். அவர்கள் நிமிர்ந்து நிற்க வேண்டும். பெருமைப்படவும் வேண்டும்.

STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# படைப்பிலிருந்து படைத்தவரை நோக்கி

## உங்கள் மனிதத் தன்மை பொங்கி வழியட்டும். தெய்வீகம் அங்கே நிகழும்.



**சத்குரு வாசுதேவ்**

படைத்தவரை நீங்கள் நேசித்தால், அவரே அனைவரையும் விட மிக உயர்ந்தவர் என நீங்கள் எண்ணினால், படைப்புக்கும் மேலான நிலையில் அவரை வைத்துப் போற்றுகிறீர்கள். ஏனெனில் அவர்தான் படைத்தவர். அவரைப் பார்ப்பது, அவரோடு இருப்பது தான் மிக உயர்ந்த அனுபவமாக இருக்கும். உங்களுக்கு நம்பிக்கை இல்லாத பட்சத்தில் தான் இருப்பு, மனம் இல்லா தன்மை போன்றவை பற்றியெல்லாம் பேசுகிறீர்கள். நம்பிக்கை இல்லாத விநாடியிலிருந்து இந்த விஷயம் மிகவும் சிக்கலாகி விடுகிறது. அதற்குப் பிறகு மணிக்கணக்கில் வாதங்களில் நீங்கள் ஈடுபட வேண்டிருக்கும். ஏனென்றால், அன்பு அங்கே இல்லாமல் போகிறது. நம்பிக்கை என்றாலே நிபந்தனையில்லாத அன்பு. நீங்கள் ஒருவர் மேல் அன்பு வைத்து, யார்மேல் வைத்திருக்கிறீர்களோ அவர் பதில்வினை ஆற்றாவிட்டாலும் கூட உங்கள் நேசம் அப்படியே இருக்கிறது. நீங்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அத்தகைய நேசத்தை உணர்ந்திருக்கக் கூடும். இன்னொருவர் நேசத்தை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார், வெளிப்படுத்தி இருக்க மாட்டார். ஆனால் நீங்கள் நேசித்துக் கொண்டேயிருப்பீர்கள். ஒருமுறை ஒரு மாணவர் தன் கல்லூரியின் பேராசிரியரிடம் போய், 'உங்கள் உதவி வேண்டும்' என்றார். பேராசிரியர் 'கண்டிப்பாக உதவுகிறேன்' என்றார். அதற்கு அந்த மாணவர் 'இது கல்வி சார்ந்தது, இல்லை வேறு விஷயம்' என்றார். பேராசிரியருக்குப் புரியவில்லை. 'என்னவென்று சொல்லுங்கள்' என்றார். கல்லூரியிலேயே மிக அழகான பெண்ணின் பெயரைச் சொல்லிய அந்த மாணவர், 'நான் அந்தப் பெண்ணை நேசிக்கிறேன். எங்கள் காதல் ஐம்பது சதவீதம் வெற்றியாகி விட்டது. மீதம் ஐம்ப சதவீதம் வெற்றியாக நீங்கள் தான் உதவ வேண்டும்' என்றார். 'ஐம்பது சதம் வெற்றி என்றால் என்ன அர்த்தம்?' என்று பேராசிரியர் கேட்டார்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org

'அந்தப் பெண்ணை நான் உயிருக்குயிராக நேசிக்கிறேன். ஆனால் அவள் இன்னும் எதுவும் சொல்லவில்லை. அதைத்தான் ஐம்பது சதவீதம் வெற்றி என்று சொன்னேன்' என்றார். இந்த அளவுக்கு நேசம் வைத்திருப்பவர்கள், மற்றவர்கள் அதைத் தனக்கு வழங்க வேண்டும் என்று கூட நினைக்க மாட்டார்கள். கடவுள் நம்முடைய அன்புக்கு பதில்வினை ஆற்றாவிட்டாலும் கூட பரவாயில்லை. அவர் இருக்கிறார் என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர்கள். நாம் பெரும்பாலும் யார் அருகில் இல்லையோ அவர்களைத்தான் பெரிதும் நேசிக்கிறோம். பலரும் இறந்து போனவர்கள் மேல் மிகுந்த நேசம் வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் இங்கு இல்லை. அவர் இங்கு இருந்தபோது அவர்களின் முகத்தைப் பார்க்கக் கூட நீங்கள் விரும்பவில்லை, அவர்களுடன் பேச்சுவார்த்தை கூட கிடையாது. ஆனால் அவர் இறந்தபிறகு நேசிக்கத் தொடங்குகிறீர்கள். இங்கு இல்லாதவர்களை நீங்கள் நேசிப்பது உங்கள் பழக்கமாகி விட்டதால் தான், கடவுளிடம் கூட உங்கள் நேசம் அப்படி இருக்கிறது. அவர் இங்கேயே இருந்து, அவரோடு உங்கள் உணவையும், வாழ்க்கையையும் பகிர்ந்து கொள்ள நேரிட்டால், கடவுளோடு உங்களுக்கு நிறைய பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கும். உங்கள் அனுபவத்தில் அவர் இப்போது இங்கே இல்லை என்பதால் தான் அவரை நேசிப்பது மிக எளிதாக இருக்கிறது. அன்பு என்பது மகிழ்ச்சியானதல்ல. அது ஓர் ஆழமான அற்புதமான வலி. மிக மோசமாக காயம் ஏற்படுத்துகிற அற்புதமான வலி. உங்களுக்குள் ஒன்று கிழிந்து சின்னாபின்னமாக ஆனாலும் கூட, சொல்லப் போனால் எல்லா விஷயங்களும் கிழிந்து போகிற அளவுக்கு உங்களுக்கு வலி ஏற்படுகிற போதுதான் அன்பு என்றால் என்ன என்பதை உணருவீர்கள். மிக மகிழ்ச்சியாக இருந்தால் அது அன்பு அல்ல. அது ஒரு வசதி. ஓரளவு அன்பை அது உணரக் கூடும். ஆனால் அன்பை உணர்ந்திருப்பீர்களேயானால் அதை ஒரு வலியாக, சுகமான வலியாக உணர்ந்திருப்பீர்கள். இப்படி எல்லாவற்றைப் பற்றியும் எல்லோரைப் பற்றியும் உணரத் தொடங்கி விடுவீர்களேயானால் உங்கள் உடல், மனம் சார்ந்த எல்லைகளைக் கடந்து போகிற நிலை தானாகவே நிகழும். அதற்கென்று நீங்கள் முயற்சி எடுக்கத் தேவையில்லை. உங்கள் உடல் சார்ந்த எல்லைகளைக் கடந்து போக நீங்கள் முயற்சி எடுத்தால், நீங்கள் உங்களைக் காயப்படுத்திக் கொள்வீர்கள். ஆனால் இது அன்பின் வழியாக நிகழ்கிறபோது இயல்பாக நிகழ்கிறது. இதன் எல்லைகள் இனிமேலும் எல்லைகளாக இருப்பதில்லை. யாராவது ஒரு முனிவரோ, ஞானியோ கடவுளை நேசிப்பது பற்றி பேசியிருக்கக் கூடும். ஆனால் உங்களுக்கு இருக்கிற, சிந்திக்கிற அறிவு, தர்க்க அறிவு, சந்தேகிக்கிற அறிவு, கேள்வி கேட்கிற அறிவு கடவுளைப் பற்றி, கடவுளை நேசிப்பது பற்றிப் பேசாது. அது ஒரு பொருட்டாக இருக்காது. கடவுளைப் பற்றியோ, படைத்தவரைப் பற்றியோ நீங்கள் யோசிக்கத் தொடங்கியதன் நோக்கமே நீங்கள் படைப்பை உணர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் இந்த உலகிற்கு வருவதற்கு முன்பாகவே 'படைப்பு' என்று எதை அழைத்தீர்களோ அது இருந்திருக்கிறது. எனவே, இதை யாரோ படைத்திருக்க வேண்டும் என்று யூகித்து கொண்டு இருக்கிறீர்கள். அதன்பிறகு படைத்தவர்களுக்கு என்று சில பெயர்களைக் கொடுக்கத் தொடங்கி விட்டீர்கள். எனவே, படைத்தவரைப் பற்றிய உங்களுடைய எண்ணமே படைப்பின் மூலமாகத் தான் வந்திருக்கிறது. நீங்கள் படைப்பை வெறுத்தால், உங்கள் பக்கத்தில் இருக்கிற மனிதர் வெறுத்தால் அதன் பிறகு கடவுளின் மேல் அன்பு செலுத்துவதாகச் சொல்வதில் எந்த அர்த்தமுமில்லை. இது உங்களை எங்கேயும் கொண்டு சென்று சேர்க்காது. ஏனென்றால் நீங்கள் படைப்பை வெறுக்கத் தொடங்கி விட்டீர்களேயானால் அதைப் படைத்தவரோடு உங்களுக்கென்ன வேலை? படைப்போடு நீங்கள் ஆழமாக நேசிப்பை உருவாக்கிக் கொண்டால்தான் இதைப் படைத்தவரோடு தொடர்பை ஏற்படுத்த முடியும். எனவே, தெய்வீகத்தின் பெயரால் மனிதத் தன்மையை இழந்து விடாதீர்கள். உங்கள் மனிதத் தன்மை பொங்கி வழிகிற போது தெய்வீகம் தானாக நிகழும். 'உங்கள் பக்கத்தில் இருப்பவரை நேசியுங்கள்' என்று ஏசுநாதர் சொன்னது மிகவும் முக்கியமானது. அடுத்த வீட்டில் இருக்கும் மனிதரோடு காதல் வயப்படுமாறு அவர் சொல்லவில்லை. 'இப்போது உங்களுக்குப் பக்கத்தில் இருப்பவரை நேசியுங்கள்' என்று சொன்னார். அருகில் இருப்பவர் யாராக இருந்தாலும், எத்தகையவராக இருந்தாலும் அவரை நீங்கள் நேசிக்க வேண்டும். அவர் மனதில் எத்தனையோ தீய எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கக் கூடும். உங்களுக்குத் தெரியாது. அவர் நல்லவரா? தீயவரா? அவரை நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லையா? இதெல்லாம் பொருட்டில்லை. அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே நீங்கள் ஏற்றுக் கொண்டு அவருக்கு அன்பு செலுத்துங்கள். இதை நீங்கள் செய்தால் இந்த படைப்போடு நீங்கள் ஒன்றிவிடுவீர்கள். படைப்போடு கலந்து விடுவது தான் படைத்தவரோடு கலப்பதற்கு ஒரே வழி. அதுதான் கடவுளைச் சென்றடைவதற்கான கதவு. இந்தப் படைப்பை நிராகரித்து விட்டால் படைத்தவரைப் பற்றி எதையும் நீங்கள் தெரிந்து கொள்ள இயலாது. எனவே, கடவுளை நேசிப்பதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். உங்கள் சுவாசத்தில், நீங்கள் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியில், நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலில் அன்பைக் கொண்டு வாருங்கள். அது யாரைக் குறித்தோ, எதைக் குறித்தோ இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. உங்களை சுற்றியிருக்கிற எல்லாவற்றோடும் இரண்டறக் கலக்கிற ஏக்கத்தோடு உங்களை வளர்த்துக் கொள்ள முடிந்தால், இந்தப் படைப்பே படைத்தவருடன் உங்களைக் கொண்டு சென்று சேர்க்கும்.


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon best time to buy Real Estate

3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance

A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough Good investment for your children

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for Senior Care
Over 65 years old with Property
100 Acres Farm with Income North of Markham
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# கனடாவின் சரித்திரத்திலேயே அதிகூடிய துண்டுவிழும் தொகையை கொண்ட வரவு செலவுத்திட்டம்

கனடாவின் சரித்திரத்திலேயே அதிகூடிய துண்டுவிழும் தொகையான $53.8 பில்லியன் டொலர் துண்டுவிழும் வரவு செலவுத் திட்டத்தை கனடாவின் நிதி மந்திரி ஜிம் பிளகெற்றி மார்ச் 04, 2010 ஆம் திகதி வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இது இவருடைய ஐந்தாவது வரவு செலவுத்திட்டமாகும்.

அவர் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றுகையில் இம்முறை அதிகூடிய தொகை துண்டு விழுந்தாலும் இனிவரும் வரவு செலவுத் திட்டத்தில் இத்துண்டு விழும் தொகை குறைந்து கொண்டு செல்லும். 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் எந்தவித துண்டுவிழும் தொகையுமற்ற சமநிலைப் படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டமாக இருக்கும் என்றார்.

கனடாவின் பொருளாதார மந்தநிலை மாறி பொருளாதாரம் வளர்ச்சியுறத் தொடங்கி யுள்ளதால் கடந்தசில வருடங்களாக அரச உதவியில் செயற்பட்டு வந்த திட்டங்கள் தொடர்ந்து நடந்தாலும் புதிய அரசு உதவியில் ஆரம்பிக்கப்பட இருந்த திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இவ்வருடம் மேலதிகமாக இத்திட்டங்களுக்கு செலவழிக் கப்பட இருந்த பணம் மீதப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சிற்கு மேலதிகமாக வழங்கப்பட இருந்த நிதி கனடாவில் ஆப்கானிஸ்தானிற்கான இராணுவப்படை உதவி வழங்கல் 2011ஆம் ஆண்டுடன் முடிவடைந்ததும் வருடம் ஒன்றிற்கு $1 பில்லியன் டொலர்களால் குறைக்கப்படவுள்ளது.

கனேடிய அரசு மற்றைய நாடுகளுக்கு வழங்கும் உதவி இவ்வருடம் $354 மில்லியன் டொலரால் உயர்த்தப்பட்டு $5 பில்லியன் டொலர்களாக்கப்பட உள்ளது. இதுவே கனேடிய அரச வெளிநாடுகளுக்கு வருடம் ஒன்றுக்கு வழங்கிய உதவிதொகையின் அதிகூடிய அளவாகும். இவ்வெளி நாடுகளுக்கு கனடா வழங்கும் உதவித்தொகையான வருடம் ஒன்றிற்கு $5 பில்லியன் டொலர் இன்றும் சில வருடங்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும்.



கனேடிய பிரதமமந்திரி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மேற்சபை உறுப்பினர்கள் என்பவர்களுக்கான சம்பள உயர்வு அடுத்த மூன்று வருடங்களுக்கு வழங்கப்படமாட்டாது.

கனடா பிரதமரின் சம்பளம் $315,462
அமைச்சர்களது சம்பளம் $233,247
நாடாளுமன்ற உறுப்பினர்களது சம்பளம் $157,731
மேற்சபை உறுப்பினர்களது சம்பளம் $132,300

இவர்களது தற்போதைய சம்பளம் இவர்கள் 2000 ஆண்டு எடுத்த சம்பளத்தைவிட இரண்டு மடங்கிலும் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

கனேடிய மக்களின் கடன் $517.5 பில்லியன் டொலரிற்கு இம்முறை சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இக்கடன் 2016 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் சமநிலைப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்வரை தொடர்ந்து அதிகரித்து கொண்டு சென்று $622.1 பில்லியன் டொலர் என அதி உச்ச நிலைக்கு போகும்.

இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் தனி நபரிற்கான வருமான வரி அதிகரிக்கப்படவும் இல்லை குறைக்கப்படவும் இல்லை.

இவ்வருடம் முதல் அத்திய அவசியமற்ற மருத்துவசேவைகளுக்கான செலவுகளுக்கு வழங்கப்படும் வருமான வரிவிலக்கு நிற்பாட்டப்படுகிறது. அத்திய அவசியமற்ற மருத்துவசேவைகளில் Hair Transplant, Teeth whitening மற்றும் Liposuction என்பன அடங்கும். கடந்த வருடம் சிறப்பாக வீடு திருத்துவதற்கு வழங்கப்பட்ட வரி விலக்கு இந்தவருடம் தொடரமாட்டாது. உழைக்கும் ஒருவருக்கான வருமானவரியற்ற ஒருவருட வருமானத்தொகை இவ்வருடம் $62 டொல-ரால் அதிகரிக்கப்பட்டு $10,382 டொலராக உயர்த்தப்படுகின்றது.

நிதி நிறுவனம் ஒன்று உங்களது கணக்கில் நீங்கள் வைப்புச் செய்யும் காசோலை ஒன்றை ஏழு நாட்கள் வரை உங்கள் கணக்கில் வரவு வைக்காமல் இதுவரையும் நிற்பாட்டி வைக்கும் உரிமை உடையதாக இருந்தது. இவ்வுரிமை இம்முறை வரவு

அருந்ததி ஞா.



தொடர்ச்சி 12ம் பக்கம்





புதிய வெளிநாட்டு சான்று ஆவணங்கள் பரிந்துரை அலுவலகம் (நியூ பாரின் கிரெடென்ஷியல்ஸ் ரெபரல் ஆபிஸ்) குறித்தும், புதியவர்கள் தங்கள் பயிற்சியையும் அறிவையும் பயன்படுத்தி வேகமாக வேலை செய்ய எப்படி உதவலாம் என்பது குறித்தும் கற்றுக்கொள்ளுங்கள்.

**cic.gc.ca/new 1 800 O-Canada** (1-800-622-6232) TTY: 1-800-926-9105

பிரிட்டிஷ் கொலம்பியா, மேனிடோபா மற்றும் கியூபெக்கில் இச்சேவைகள் அந்தந்த மாகாண அரசாங்கங்களால் அளிக்கப்படுகிறது.

Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

Canada

# கனேடிய தமிழ் மக்களின் சாதனை




## விளையாட்டுத் தகவல்கள் 279

எமது தாய் மண்ணில் எமது விளையாட்டு வீரர்களின் திறமைகள் தமிழராக பிறந்தமையால் கடந்த பல வருடங்களாக மழுங்கடிக்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே?

ஆனாலும் புகலிடம் தேடிய மக்களுக்கு சகல சுதந்திரங்களும் வழங்கும் புண்ணய பூமியான கனேடிய மண்ணின் பெருமைகளை உலகில் எடுத்தியம்ப எமது தமிழர் சமுதாயம் புறப்பட்டுவிட்டது.

இவற்றிக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கனேடியமண்ணில் வசிக்கும் தமிழ் மகனான யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவனும் இலங்கையில் சிறந்த தடகள விளையாட்டு வீரருமான சின்னத்துரை தேவராஜன் (தேவா) “world Masters Indoor Champinship” தடகள போட்டியில் இரண்டு வெண்கல பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

சென்ற வாரம் கனடாவில் Kamloops நகரில் நடைபெற்ற “World Masteres” உள்ளரங்க தடகள போட்டியிலி 4.85 மீற்றர் பாய்ந்து கனேடிய நாட்டிற்கு வெண்கல பதக்கத்தை வென்றுள்ளார். முதலாவது இடத்தை Nkula Jouko பின்லாந்து நாட்டை சேர்ந்தவர் 5.68 மீற்றர் பாய்ந்தும் இரண்டாவது இடத்தை அமெரிக்க நாட்டை சேர்ந்த Bentl Kirk 5.15 மிற்றர் பாய்ந்தும் பதக்கங்களை பெற்றுளனர்.

இதே போட்டிகளில் முப்பாய்ச்சல் (Triple Jump) இத் தேவராஜன், 10.85 மீற்றர் பாய்ந்து இரண்டாவது வெண்கல பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்து கனேடிய மண்ணிற்கும் தமிழ் சமூகத்திற்கும் பெருமை தேடி தந்துள்ளார். ரொரன்ரோ நகரில் United Tamils என்ற தடகள மெய்வல்லுனர் கழகத்திலும் எமது தமிழ் வீரர்களுக்கு சிறப்பான பயிற்சிகளை அளித்து சேவையாற்றி வருகின்றமை மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

## ஆரம்பமாகும் ஐ.பி.எல் கிரிக்கெட் திருவிழா

ஐ.பி.எல். போட்டிக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதனால் ஆஸ்ரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து வீரர்கள் சிலர் தாமதமாக அணியோடு இணைந்து கொள்வார்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது. ஐ.பி.எல். போட்டியின் 1ஆவது போட்டி மும்பையில் நடக்கிறது. இரவு 8 மணிக்கு நடைபெறும் ஆரம்ப போட்டியில் ஹைதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.

ஏனைய போட்டிகள் நவி மும்பை, மும்பை, சென்னை, டில்லி, கொல்கத்தா, பெங்களூர், ஜெய்ப்பூர், மொகாலி, நாக்பூர், அகமதாபாத், தர்மசாலா, கட்டாக் ஆகிய இடங்களில் நடக்கிறது. தெலுங்கானா பிரச்சினை காரணமாக ஹைதராபாத்தில் போட்டி நடத்தப்படவில்லை.

போட்டி நடைபெறும் தினத்தில் மைதானத்தில் பாதுகாப்பு மிகவும் அதிகமாக இருப்பதோடு வீரர்கள் தங்கியுள்ள ஹொட்டலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு சாம்பியன் டெக்கான் சார்ஜர்ஸ், 2ஆவது இடத்தை பிடித்த பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. 3ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகி ஏப்ரல் 25 ஆந் திகதி வரை இந்த போட்டி நடைபெறும்.

ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா 2 முறை விளையாட வேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். ஏப்ரல் 21ஆந் திகதி முதல் அரை இறுதியும், 22ஆந் திகதி 2ஆவது அரை இறுதியும், 2ஆந் திகதி 3ஆவது இடத்துக்கான போட்டியும் நடைபெறும். இறுதி போட்டி ஏப்ரல் 25ஆம் திகதி நடக்கிறது. மொத்தம் 60 போட்டிகள் நடைபெறும்.

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. வார்னே தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் முதல் சம்பியன் பட்டம் பெற்றது. தென்ஆபிரிக்காவில் கடந்த ஆண்டு நடந்த 2ஆவது ஐ.பி.எல். போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் சம்பியன் பட்டம் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். புதிய அணிகளை வாங்குவது யார்?

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், முப்பை இந்தியன்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ், டெல்லி டேர் டெவில்ஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்றன. இந்த 8 அணிகளையும் பிரபலங்கள் கோடிக்கணக்கான பணம் கொடுத்து வாங்கின. வீரர்களும் ஏலம் முறையில் எடுக்கப்பட்டனர். ரசிகர்கள் மத்தியில் இந்த போட்டி மிகவும் பிரசித்தி பெற்றது.

2008-ம் ஆண்டு நடந்த முதல் ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் சாம்பியன் பட்டம் பெற்றது. 2-வது ஐ.பி.எல். போட்டியில் டெக்கான் சார்ஜஸ் வெற்றி பெற்றது. 3-வது ஐ.பி.எல். போட்டி வருகிற 12-ந்தேதி தொடங்கி ஏப்ரல் 25-ந் தேதி வரை நடக்கிறது. 2011-ம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் மேலும் 2 அணிகள் பங்கேற்கிறது. அகமதாபாத், நாக்பூர் ஆகிய நகரங்களை அடிப்படையாக கொண்டு இந்த புதிய அணிகள் இருக்கும்.

2 புதிய அணிகளை வாங்குவதற்கான டெண்டர் விண்ணப்பம் நடைமுறை ஏற்கனவே தொடங்கி விட்டது. புதிய அணிகளுக்கான தொகையை பூர்த்தி செய்து கொடுப்பதற்கான தேதி முடிந்து விட்டது. இதனால் புதிய 2 அணிகளை யார் வாங்குகிறார்கள் என்ற விவரம் தெரியும். இந்த அணிகளை வாங்குவதற்கான குறைந்தபட்ச தொகை ரூ.1012 கோடியாகும். இந்த தொகையை விட யார் அதிகமான தொகையை டெண்டரில் குறிப்பிட்டு இருக்கிறார்களோ அவர்கள் அணியின் உரிமை வழங்கப்படும்.

குஜராத்தை சேர்ந்த பிரபல அதானி குரூப், சகாரா நிறுவனம், இங்கிலாந்து கால்பந்து கிளப், ஜெய் பீ குரூப் உள்பட பல நிறுவனங்கள் இதற்கான போட்டியில் இருப்பதாக கூறப்படுகிறது. நடிகர் மோகன்லாலும், டைரக்டர் பிரியதர்சனும் இணைந்து ஐ.பி.எல். அணியை வாங்க திட்டமிட்டு இருந்தனர். கடைசி நேரத்தில் அவர்கள் அதில் இருந்து விலகி னார்கள். இதேபோல இங்கிலாந்தில் உள்ள எம்.சி.சி. கிளப்பும் இந்த போட்டியில் இருந்து விலகியது.

## ஐ.சி.சி தரவரிசை லட்சம் ரூபாய்களை வெல்லும் முன்னணி அணிகள்

இந்திய அணி ஐ.சி.சி தரவரிசையில் 2ஆவது இடத்தை பிடித்துள்ள இந்தியாவுக்கு ரூ.37.5 லட்சம் பரிசு கிடைத்துள்ளது. இதேவேளை தரவரிசையில் முன்னிலையில் உள்ள ஆஸ்ரேலிய அணிக்கு 87.5 லட்சம் ரூபாவும் கிடைக்க உள்ளது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒரு நாள் போட்டியின் அடிப்படையில் நாடுகளின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

(ஏப்ரல் ஒக்ரோபர் 01ஆம் திகதி வரை) இந்தியா 2ஆவது இடத்தை பிடித்துள்ளது. ஆஸ்ரேலியா - நியூசிலாந்து அணிகள் மோதிய 2ஆவது ஒருநாள் போட்டியை தொடர்ந்து ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. எஞ்சி இருக்கும் ஒருநாள் போட்டியில் ஆஸ்ரேலியா தோற்றாலும் இந்தியா முதல் இடத்தை பிடிக்க முடியாது. ஐ.சி.சி. விழாவில் இந்த பரிசு தொகை வழங்கப்படும். டெஸ்ட் தர வரிசையில் அணிகளின் உற்சாகத்தினை அதிகரிக்கவே இப்பரிசுத் தொகை வழங்கப்படுவதாகவும் ஐ.சி.சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

துடுப்பாட்ட வீரர்களில் இந்திய அணித்தலைவர் டோனி 819 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார். டெண்டுல்கார் (762 புள்ளிகள்) 4-வது இடத்திலும், ஷெவாக் (694) 11-வது இடத்திலும், யுவராஜ்சிங் (682) 13-வது இடத்திலும், சுரேஷ்ரெய்னா (659) 15-வது இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சில் முதல் 10 இடங்களில் ஒரே ஒரு இந்திய வீரர் மட்டும் இடம் பெற்றுள்ளார். ஹர்பஜன்சிங் 7-வது இடத்தில் உள்ளார். சகலதுறை வீரர் வரிசையில் யுவராஜ் 7-வது இடத்தில் உள்ளார்

## ஐ.நா. நல்லெண்ணத் தூதராக சச்சின் டெண்டுல்கர்

இந்திய கிரிக்கெட் நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் ஐக்கிய நாடுகள் பேரவையின் சுற்றுச்சூழல் திட்ட நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். சச்சின் டெண்டுல்கரின் உலகம் முழுதுமான புகழால் அவர் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்திலும் ஏற்படுத்த முடியும் என்று ஐ.நா. சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு அறிவித்துள்ளது.

“இந்த புவியின் பல இடங்களில் விளையாடி மகிழ்ந்திருக்கிறேன், தற்போது நமது வீடான இந்தப் புவியின் நன்மைக்காக ஏதாவது செய்ய நேரம் வந்துள்ளது.” என்று சச்சின் டெண்டுல்கர் இந்த கௌரவம் குறித்து பெருமிதமடைந்துள்ளார்.

எஸ். கணேஷ்



தொடர்ச்சி 12ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# 2010 இல் ஆதன வியாபாரம்

2009இன் இறுதி அரை ஆண்டில் புதிதாக கட்டப்படும் ஆதனங்களின் அதிகரிப்பு ஏற்பட்டு இருந்தது. அத்துடன் CMHC இன் அறிக்கையின்படி, 2010 ஆண்டிலும் இந்த அதிகரிப்பு தொடரும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. மேலும் 2009ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆதனம் வாங்குபவர்களிற்கு சார்பாக இருந்த சந்தை, ஏப்ரல் 2009இற்கு பிற்பாடு விற்பவர்களிற்கு சார்பாக சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. இந்த நிலைப்பாடு இன்றுவரை தொடருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு ஆதனச் சந்தையினுள் ஆதனம் வாங்க சந்தையில் உள்ளவர்களின் எண்ணிக்கையை விட குறைந்தளவு ஆதனம் சந்தையில் காணப்படுவதே காரணமாகும். இதனால் புதிதாக நிர்மாணம் செய்யப்பட இருக்கும் வீடு-மனைகளின் விலை அதிகரிப்புடன், நிர்மாணம் செய்யப்பட இருக்கும் ஆதனங்களின் எண்ணிக்கைகளும் அதிகரிக்கின்றன. இதனால் முன் அனுபவமில்லாத பல கட்டிடம் கட்டும் நிறுவனங்கள் இந்த தொழிலில் நாட்டம் கொண்டுள்ளன. கிழமைக்கு கிழமை புதிதுபுதிதாக பல நிறுவனங்கள் அடுக்குமாடிக் கட்டிடங்களில் உள்ள மனைகளை விற்பனைக்கு கொண்டுவருகின்றன. 5% முதலீட்டுடனும் விற்க எத்தனிக்கின்றன. எனவே நுகர்வோர் மிகவும் கவனத்துடன் செயல்படுவது சிறந்தது. அனுபவமும், வியாபாரத்தில் நீண்ட காலமும் இருக்கும், நிறுவனங்களால் சந்தைக்கு கொண்டு வருபவர்களிடம் உங்களது மனைகளை வாங்குவதால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் நெருக்கடிகளை ஓரளவு குறைக்கலாம்.

இந்நிலை இவ்வருடமும் தொடரலாம். ஏப்ரல் 19, 2009இல் வர இருக்கும் புதிய அடமானக்கடன் சம்பந்தமான இறுக்கங்களால், அண்ணளவாக (15-20)% ஆன முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களுக்கு அடமானக்கடன் பெறுவதில் இறுக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே சந்தையில் இருக்கும் வாங்குபவர்களின் எண்ணிக்கையில் இறக்கம் ஏற்படலாம்? அத்துடன் யூலை 01, 2010 இல் முதல் தடவையாக GST மற்றும் PST இணைந்ததாக நடைமுறைக்கு வர இருக்கும் HST (Harmonize Sales Tax) இன் பாதிப்பும், ஆதன விற்பனையில் இறுக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கலாம்.

கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் இம்மாத (பங்குனி 2010) ஆரம்பத்தின் தனது அறிக்கையில் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம், வருடக் கடைசிக்கு முன்பாக அதிகரிக்கப்படலாம் எனக் கோடிட்டு காட்டியுள்ளார். அத்துடன் இந்த மாதத்தில் வெளிவந்த தொழில் புரிவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது இதற்கு ஆதாரமாகலாம்.

இவ்வகையான எதிர்கால இறுக்கங்களை எதிர்பார்த்து இன்றைய ஆதனச் சந்தையில் அதிகமான வீடு, மனை வாங்குபவர்களைக் காணக்கூடியதாக உள்ளது. வாங்குபவர்கள் போட்டிபோட்டு வீடுகளை வாங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக, எமது நிறுவனத்தால் கடந்த வாரம் (மார்ச் 06, 2010) ஒரு தனிவீடு சந்தைக்கு கொண்டு வரப்பட்டது. சந்தைக்கு கொண்டு வரப்பட்ட வீட்டு விலை $375,000. இந்த வீடு மார்க்கம் / எல்ஸ்மெயர் சந்திக்கருகாமையில் அமைந்துள்ளது. வீடு சந்தைக்கு வந்த நாள் தொடக்கம் தொடர்ச்சியாக பல ஆதன முகவர்கள் தமது வாடிக்கையாளர்களிற்கு இதனை காட்டினார்கள். குறிப்பிட்ட சனிக்கிழமை வீட்டைச் சந்தைப்படுத்திய அனுபவமும் ஆற்றலுமிக்க எமது முகவர் பதியப்பட்ட சகல ஆதனம் வாங்கும் விற்கும் பத்திரத்தை பார்க்கத் தொடங்கினால் 10 வீட்டு முகவர்கள் தமது வாடிக்கையாளருடன் தமது வீடு விற்று வாங்கும் பத்திரங்களை கொண்டு வந்தார்கள். ஒவ்வொன்றையும் தனித்தனியாக பார்க்கப்பட்டது. கொண்டுவரப்பட்ட 10 Offer களிலும் ஆகக்கூடியதாக $419,000 பெறுமதியானது வீடு விற்பவரால் தெரிவு செய்யப்பட்டது. ஒருவித Conditions களும் இல்லாததாலும் மிகக்குறுகிய கால Closing Date மற்றும் மிகப்பெரிய முற்பணமும் உள்ளதாலும் குறிப்பிட்ட Offer தெரிவு செய்யப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் எம்மால் அவதானிக்கக்கூடியது, பல ஆதனம் வாங்குபவர்கள் - நுகர்வோர்கள் சந்தையில் உள்ளார்கள். அத்துடன் வீட்டின் சராசரி விலை $400,000 ஐ தாண்டிய போதிலும், ஆதனச் சந்தை மிகவும் ஆரோக்கியமாகவே காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இன்னுமொரு உதாரணத்தையும் எடுத்துப் பார்க்கலாம். கடந்த இரு வருடங்களாக சந்தையிலிருந்த ஒரு வீடு விற்கமுடியாமல் சந்தையிலிருந்து நீக்கப்பட்டது. வீட்டுரிமையாளர் தகுந்த சந்தர்ப்பத்தை பார்த்துக்கொண்டு இருந்தார். அண்மையில் அதே வீடு சந்தைக்கு வந்தபோது இரண்டு

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 315


**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga Tel.: 905.712.2666




**Downtown New CONDO. by Tridel**

- 300 Front St.
- 1 Bedroom
- 1 bedroom + Den
- 2 bedroom
- 2 bedroom + den

**Concord City Place - Toronto**

- Parade 2 - Condo. Special Prices

***Expect - Very soon***

- New Tridle Condos. HWY 427 / Bloor - ***West Village***
- For prices and other information - Pl. call: 416.315.9397

***Lucky Draw*** Sunday August 29, 2010 @ 2:00 pm

> First Price - BMW - 3 series > 2nd price 2 to Cuba

> 3rd price LCD TV

(இது பற்றிய மேலதிக தகவல்களுக்கு HomeLife GTA Realty ஐ தொடர்பு கொள்ளவும்)

**Condo. for Sale**

***MCLEVIN & NEILSON (Mayfair Buildings)***

- 2 Bedroom corner unit
- Laminated, ceramic floor
- Laminated floor, Ceramic floor
- 24 hours security, swimming pool, in a separate building
- Close to doctors, pharmacy, mall, ttc, highway....
- 1265 sqft
- 2 parking, 1 locker included.
- Price $184,900

***Party Rental Business for Sale***

- Brimley / Progress
- Lots Of Rental Items Meant For Variety Of Functions / Occasions.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Established Business
- Asking Price $99,000 Plus Stock

***Commercial unit for sale - Markham***

- Markham Rd. / Major Mackenzie
- 1,233 Sq.Ft.
- Prime location, visible Strip Plaza
- Suitable Uses Restaurant/Retail (Currently running as a bakery business.
- Asking $349/sqft

***Commercial/Retail for Lease***

- GTA Square Mall
- Rent $950 Gross Lease
- Great Opportunity!
- Only few units left on the mainfloor
- Underground And Surface Parking
- Don't miss this chance.

**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# காலத்தினாற் செய்த நன்றி

நாள்: 21.11.2009 சனிக்கிழமை
இடம்: வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மண்டபம், உரும்பராய்
நிகழ்வு: வன்னியிலிருந்து பாதிக்கப்பட்ட நிலையில் திரும்பிய குரும்பசிட்டி மக்களுக்கு உதவுதல்,
தரம் ஐந்து புலமைப் பரீட்சை சித்திபெற்ற மாணவருக்கும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவருக்கும் அன்பளிப்பு வழங்குதல், மீளக்குடியமர்தல் பற்றிய கலந்துரையாடல்.
ஏற்பாடு: குரும்பசிட்டிக் கிராம முன்னேற்றச் சங்கம்.
தலைமை: திரு. சி. நடராசா, தலைவர்: குரும்பசிட்டி கி.மு.ச.

ஆற்றல் வாய்ந்த தலைவர் அவர்களே!
எங்கள் ஊர்ப்பெருமக்களே!
வன்னியிலிருந்து தப்பிப்பிழைத்து வந்துள்ள அன்பர்களே!
புலமைப் பரிசில் மற்றும் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைகளில் வெற்றிபெற்ற மாணவச் செல்வங்களே!

இந்த முக்கியமான வைபவத்துக்கு எனது துணைவியாரையும் என்னையும் பிரதம விருந்தினராக அழைத்தமைக்கு முதற்கண் தலைவர் திரு. சி. நடராசா அவர்களுக்கும் திரு. வ. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் மற்றுமுள்ள குரும்பசிட்டிக் கிராம முன்னேற்றச் சங்க நிருவாகிகளுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தலைவர் அவர்கள் மக்கள் பணிகளில் மனநிறைவு காண்பவர். பல இடர்ப்பாடுகளுக் கிடையில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை உரும்பராயில் நிலைபெறச் செய்தவர். பூச்சியத்தில் ஓர் இராச்சியத்தைக் கட்டி எழுப்பியவர் என்று மக்களாற் புகழப்படுபவர். அதேபோல இல்லாத குரும்பசிட்டியையும் இருக்கவைத்துக் கொண்டிருப்பவர். அதற்கு உதாரணமாக, குரும்பசிட்டிக் கிராம முன்னேற்றச் சங்கம் இன்றும் அவரது தலைமையில் இயங்கிக் கொண்டிருப்பதைக் கூறலாம். அதேபோல திரு. வ. கிருஷ்ணசாமி, திரு. கு. இராசநாயம் போன்றவர்களின் முயற்சியால் வளர்மதி சனசமூக நிலையமும் இயங்கிக் கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சன்மார்க்க சபையும் இடம்பெயர்ந்த பின்னரும் சிலகாலம் இயங்கிவந்ததை நான் நன்கு அறிவேன்.

மிகுந்த இடர்ப்பாடுகளுக்கிடையிற் படித்துப் பரீட்சைகளிலே சித்திபெற்று இன்று பரிசில்கள் பெறவுள்ள குரும்பசிட்டி மாணவ மாணவிகளை யும் பாராட்டுகின்றேன். அக்காலத்தில் கல்வித்துறையில் யாழ்ப்பாணம் முழுவதற்கும் வழிகாட்டியாக இருந்த கிராமம் எமது குரும்ப சிட்டி. அயற்பகுதிகளிலிருந்தும் தூரவுள்ள இடங்களிலிருந்தும் வந்து பலர் குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலையில் கல்விகற்ற வரலாறுகளும் உள்ளன. குரும்பசிட்டியின் கல்விப் பாரம்பரியத்தை குரும்சிட்டி மாணவர்கள் தொடர்ந்து நிலைநாட்டிவருவது குறித்து நாம் எல்லோருமே பெருமைப்படல் வேண்டும், அன்பர்களே!

இன்றெல்லாம் புலம்பெயர்ந்த தமிழீழம் கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்ற தமிழர் மத்தியில் அதிகம் பேசப்படும் ஒரு நாடாக விளங்குகின்றது. ஆனால் அதற்கு முன்னதாகவே புலம்பெயர்ந்த ஒரு குரும்பசிட்டியை நீங்கள் வளர்த்துவருவது குரும்பசிட்டியில் நீங்கள் கொண்டிருக்கின்ற தணியாத தாகத்தைக் காட்டுகின்றது. வெளிநாடுகளிலும் குரும்பசிட்டியின் பெயரால் பல அமைப்புகள் அதன் புகழை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றன.

குரும்பசிட்டி கொடிகட்டிப் பறந்த காலத்தைப் போலவே கல்வியை வளர்த்த திரு. பொன் பரமானந்தர், திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை ஆகியற்றை அமைத்து நூல் மற்றும் பாட புத்தக வெளியீட்டுத் துறையிற் சாதனை படைத்த ஈழகேசரி நா. பொன்னையா, தற்கால இலக்கிய விமரிசனக் கலையை வளர்த்த இரசிகமணி கனக. செந்திநாதன் போன்றவர் கள் இன்றும் பேசப்படுகின்ற பெருமக்களாக விளங்குகின்றனர். இவர்களன்றி நாடகத்துக்கு ஏ.ரி. பொன்னுத்துரை, இசைக்குச் சாரதா பாராதா, ஓவியத்துக்கு கே.கே.வி. செல்லையா, சிற்பக்கலைக்கு கலாகேசரி ஆ. தம்பித்துரை, ஆவணத்துக்கு இரா. கனகரத்தினம், தொல்பொருளுக்கு கலைஞானி அ. செல்வரத்தினம் என்று எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அந்தத் துறைக்கு ஒரு வல்லாளரை உருவாக்கி உலகத்துக்கு அளித்த பெருமையுடையது குரும்பசிட்டி.

கலைகளில் மட்டுமன்றி வர்த்தகத்துறையிலும் பலர் ஈடுபட்டுக் குரும்பசிட்டியை ஒரு செல்வச் செழிப்பு மிக்க ஊராக வாழவைத்தனர். இவ்விதம் கல்வி கலைகளாலும் பொருள் வளத்தாலும் மாடமாளிகைகளாலும் அழகுறப் பொலிவுற்று விளங்கிய குரும்பசிட்டியைக் கண்டு வியந்த வெளியூர்ப் பெருமக்கள் அதனைக் Colombo Seven என்றுகூட அழைத்தனர்.

சிலப்பதிகாரத்திலே புகார் நகரத்தைப் பதியெழு அறியாப் பழங்குடி மக்கள் வாழுகின்ற நகரென்று சிறப்பித்துக் கூறுகின்றார் இளங்கோ அடிகள். புகார் நகரத்து மக்கள் அதனைவிட்டு வேறு ஊர்களுக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்ததில்லையாம். அந்த அளவுக்கு அது செல்வம் மிகுந்ததாகவும் ஆட்சிச் சிறப்புடைய தாகவும் அல்லல்கள் எதுவுமே இல்லாத அமைதிச் சூழலைக் கொண்டதாகவும் விளங்கியது. அதனைப்போலவே செல்வச் சிறப்போடு விளங்கிய குரும்பசிட்டி மக்களும் தங்கள் பிறந்த பதியை விட்டு நீங்கி வேறிடம் செல்லாது தொன்றுதொட்டு அதில் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தனர்.

அத்தகைய பழங்குடி மக்களுக்குச் சோதனை காலம் வந்தது. வேதனையோடு அதனை விட்டு நீங்க வேண்டிய விதி வந்து சூழ்ந்துகொண்டது. குரும்பசிட்டியை இலங்கை அரசு பாதுகாப்பு வலயத்தின் ஒரு பகுதியாகப் பிரகடனப் படுத்தியதைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் மக்களை வெளியேற்றியது. வேறுவழியின்றி மக்கள் சிதறுண்டு பிற ஊர்களிற் தஞ்சம் புகுந்தனர். அவர்களில் வன்னியிற் குடியேறியவர்களுக்கு மீண்டும் யுத்தக் கொடுமைகளால் சோதனைகள் ஏற்பட்டன. உடைமைகளை இழந்தும் உறவுகளை இழந்தும் தப்பிப் பிழைத்து வந்தவர்களில் 21 பேரை இனங்கண்டு அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் இந்த நிகழ்ச்சியானது காலம் அறிந்து, தேவை யறிந்து செய்கின்ற ஓர் அவசிய உதவிச் செயற்பாடாகும்.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

என்றார் வள்ளுவர் பெருமான். இந்த உதவிசெய்ய முன்வந்த குரும்பசிட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். ஒவ்வொருவருக்கும் 5000 ரூபாய் வழங்கச் சங்கம் தீர்மானித்திருக் கின்றது. இது மிகவும் சிறிய தொகைதான். அதனை வள்ளுவர் பெருமான் கூறியிருப்பது போலப் பெரிய உதவியாக மதித்துச் சங்கத்தை நீங்களும் பாராட்டுவீர்கள் என்று நினைக்கின்றேன். சங்கமும் புலம் பெயர்ந்து இயங்கிக்கொண்டிருக்கின்ற சங்கம் என்பதை மறந்துவிடலாகாது.

தலைவர் அவர்கள் ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். அது வன்னியிலிருந்து வந்த மக்களுக்கு மட்டுமல்லாது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற செய்திதான். குரும்பசிட்டியில் மக்களை மீளக் குடியமர்த்த அவர் மேற்கொள்ளுகின்ற முயற்சி வெற்றிபெற வாழ்த்துகின்றேன். நினைவு நல்லது. ஆனால் அது கைப்படவேண்டுமே. அதற்கு எமது ஒற்றுமையும் வேண்டும்.

எங்களை எமது ஊருக்குச் செல்லவிட வேண்டும் என்று அவர் உரிய அதிகாரிகளைக் கேட்கின்ற கூட்டம் ஒன்று வருகின்ற திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது. அந்தக் கூட்டத்துக்கு நீங்கள் எல்லோரும் தவறாது செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இது குறித்து வலி வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக் குழுச் செயலாளர் திரு. தர்மநாயகம் வெளியிட்டிருக்கும் அறிவித்தற் பிரசுரத்தையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிதறுண்டு திக்குத்திக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்ற வலி வடக்கு மக்கள் ஒன்றாகக்கூட வேண்டிய ஒரு தேவை - அவசிய தேவை இப்பொழுது ஏற்பட்டிருக் கிறது. எங்கள் ஒற்றுமையை நாங்கள் தவறாது காட்ட வேண்டிய காலம் இது.

எங்களிடத்திலே இருக்கின்ற ஒரு பெரிய குறைபாடு ஒற்றுமையின்மை.

ஒற்றுமை எங்கே ஒற்றுமை எங்கே
ஒற்றுமை விட்டவர் கெட்டார்
கற்றது மென்ன கற்றதுமென்ன
கண்டதைக் கொண்டிட வாமோ

என்று இன்றல்ல நேற்றல்ல, அறுபது களிலிருந்தே இக்குறைபாட்டை எனது எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் சுட்டிக் காட்டிவந்திருக்கின்றேன்.

ஒருவகையில் ஒற்றுமையீனம் தமிழர்களின் பரம்பரைச் சொத்து என்றுகூடச் சொல்லாம். பண்டைய காலத்திலிருந்தே தமிழர் தங்களுக்குள்ளேயே சண்டைபோட்டுக் கொண்டதை விடாத கொள்கை யுடையவராகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.
சேரரும் சேரரும் பாண்டியரும்
பாண்டியரும் சோழரும்
சோழரும் சோழரும்



**கவிஞர் வி. கந்தவனம்**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
● EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
● 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✔
● 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✔
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
DIPLOMA முடித்தவர்கள்
ACCOUNTS CLERK — COST CLERK
AUDIT CLERK — PAYROLL CLERK
ACCOUNTS RECEIVABLE — ACCOUNTS PAYABLE
ACCOUNTS ASSISTANT — BOOK KEEPER
போன்ற பதவிகளைப் பெற்று
உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்
INSTRUCTORS
★ PUSHPA ★ SP ★ RAM
CERTIFICATE COURSES
Buy One Get One Free
WINDOWS, WORD, EXCEL, POWER POINT, ACCESS, OUTLOOK
PHOTO SHOP, QUICK BOOKS, SIMPLY ACCOUNTING, ACCPAC
DAY, EVENING, WEEK ENDS
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# இன்றைய செயல்களை நாளைய கனவுகளுடன் ஒருங்கிணையுங்கள்

கனவுகள்! யாருக்குத் தான் இல்லை!
அடைந்தவர் சிலர்! ஏமாற்றம் அடைந்தவர் பலர்!
ஏன்? ஏனிந்த வித்தியாசம்?
அடைந்தவர்க்கும், அடையாதவர்க்கும் இடையில் இருப்பது என்ன?

ஒரு சிறு இடைவெளி, அந்த இடைவெளியே பல சமயங்களில் கனவின் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமாகின்றது. என்னுடைய நண்பர் ஒருவர் காரில் அமெரிக்காவைச் சுற்றிப் பார்க்க விரும்பினார். CAA என்று சொல்லப்படும் The Canadian Automobile Association உடன் தொடர்பு கொண்டார். தான் செல்ல இருக்கும் இடங்களைக் குறிப்பிட்டு கண்ணுக்கு இனிய சிறந்த பாதையைக் கூறக் கேட்டார். அவர்களும் அப்படியே செய்தனர்.

மற்றொரு நண்பர், GPS ஐ காரில் பொருத்திக் கொண்டார். செல்ல வேண்டிய இடத்திற்கு அது வழி காட்டியது. மூன்றாமவர் மனம் போன போக்கில் போனார். தேவைப்பட்டால் இடை இடையே நிறுத்தி விசாரித்துக் கொண்டார். இவர்கள் மூவருக்கும் எங்கு செல்ல வேண்டும் என்பது தெரிந்திருந்தது. எப்படிச் செல்ல வேண்டும் என்பதில் தான் சற்றே வித்தியாசம் இருந்தது இல்லையா? ஒழுங்கு, கட்டுபாடு, நிதானம், திட்டமிடல் இவற்றோடு பயணிப்பவர் செல்ல வேண்டிய இடத்தை சென்றடைவார். பயணமும் மகிழ்வாக இருக்கும் என்று நான் சொல்லவும் வேண்டுமா?

நிஜவாழ்வில் நிகழும் சில சம்பவங்களுடன் முன் குறிப்பிட்டவற்றை ஒப்பிட்டுப் பார்ப்போம். வாழ்வில் பொருள் சேர்க்க வேண்டும். சுயமுயற்சியில், நேர்மையான முறையில் பொருள் சேர்க்க வேண்டும். இதுவே செல்ல வேண்டிய இடம்.

இந்த இடத்தை அடையச் செல்லும் விதத்தில் பல பாதைகள் தென்படலாம். சரியான பாதைகளும் ஒன்றுக்கு மேல் இருக்கலாம். அவற்றில் ஒன்றை ஒருவர் எவ்வாறு பொருளைச் சேர்த்தார் என்பதை இங்கு பார்ப்போம்.

1. முதலில் என்ன செலவு செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்து, பிறகு வரவுக்கு ஏற்ப செலவுகளைச் செய்தார்.

2. ஒவ்வொரு செலவையும், சிறிதோ, பெரிதோ தேவையா என்று தன்னைத் தானே கேள்வி கேட்டு செலவு செய்தார். மதிய உணவுக்கு 4 டொலர்கள், செலவு, வீட்டிலிருந்து உணவைக் கொண்டு செல்வதால், மாதம் 100 டொலர் வரை மிச்சம். இப்படி ஒவ்வொன்றிலும் கணக்கும், மிச்சமும்.

3. கிரிடிட் கார்ட் இருக்கிறது என்பதற்காக எந்தப் பொருளையும் வாங்குவதில்லை. காசிருந்தால் எந்தப் பொருளை வாங்குவோமோ, அதே கட்டுப்பாட்டுடன் கிரிடிட் கார்டிலும் பொருள்களை வாங்கினார். கிரிடிட் கார்டுக்கு ஆன தொகையை முழுவதும் தவணைத் தேதிக்கு முன்னரே கட்டி விடுகிறார். இல்லையேல் வட்டி குட்டி போட ஆரம்பித்து விடும்.

4. ஒவ்வொரு மாதமும் வரும் உபரி எவ்வளவு, அந்த உபரியை சேமிக்கும் முறை, நன்கு தெரியும். சிறுதுளி பெருவெள்ளம், காலப்போக்கில் இம்முறையைக் கையாண்டார். தன்னுடைய ஓய்வு காலத்துக்குத் தேவையான செல்வம் போதுமான அளவு இருக்கக் கண்டார். ஒவ்வொருவரின் தேவைகளும், வருமானமும், ஆசைகளும் கூட மாறுபடுகின்றன. அதற்கேற்ப சேமிப்புத்தொகையும் மாறுபடும். தொகை எதுவானாலும் ஒழுங்கோடும், நிதானத்தோடும் செயல்படும் போது அது அந்த நபரின் வாழ்க்கையை பின்னாளில் அமைதியான சௌகரியமான முறையில் தொடரப் போதுமானதாக இருக்கும்.

3. கேள்விகளுக்குள்ளும், அதற்கான பதில்களுக்குள்ளும் மேற்குறிப்பிட்ட சம்பவம் அமைந்திருப்பது என்று சொல்லலாம். இல்லையா? அந்தக் கேள்விகள்

## - துறவி -

1. எங்கு இருக்கிறோம்?
2. எங்கு செல்ல வேண்டும்?
3. எப்படிச் செல்ல வேண்டும்?

ஒழுங்கு, கட்டுப்பாடு, நிதானம், திட்டமிடல் எல்லாம் இருந்தது இல்லையா?

புதிதாக ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் குடியேறியிருந்தார். நாட்டுக்குப் புதியவர். குடும்பஸ்தர். வேலை கிடைக்கவில்லை. நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்து வேலைக்கு முயன்று கொண்டிருந்தார். அப்போது ஒரு இன்சூரன்ஸ் கம்பனி அவருக்கு வேலை தர முன்வந்தது. என்ன வேலை? பல்பொருள் விற்பனை அங்காடி என்று சொல்லப்படும் Mall இல் நின்று கொண்டு, போவோர், வருவோரிடம் எல்லாம் பேசி அவர்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் வாங்க வேண்டும். இவ்வாறு அவர் வாங்கும் ஒவ்வொரு பெயருக்கும், 1 டொலர் ஊதியம். எளிய வேலையா? நம்பிக்கையோடு வேலையைத் தொடங்கினார். தினம் காலையில் சென்று விடுவார். எதையும் பொருட்படுத்தாமல் தன் பணியைத் தொடர்வார். வருவாய் வரத் தொடங்கியது. நாளாக, நாளாக வருவாய் கூடியது. பிறகு அவரே நேரடியாக இன்சூரன்ஸ் விற்கத் தலைப்பட்டர். இன்றைக்கு அவர், மில்லியன் டொலர் விற்பனையாளர். எங்கோ படித்தது.

திரும்ப இங்கு நிகழ்ந்தது என்ன? மூன்று கேள்விகளும் அவற்றிற்கான விடையில் வரும் ஒழுங்கு, கட்டுப்பாடு, நிதானம், திட்டமிடல் போன்றவையே. இல்லையா?

இன்னும் ஒரு உதாரணம். ஒருவர் பெரிய எழுத்தாளர் ஆக விரும்பினார். நாளடைவில் அவருடைய நூல்கள் பல பிரசுரம் ஆகின. அவர் எப்படி ஆனார் என்பதற்கு அவர் கூறும் பதில் இதோ. தினம் மற்ற குடும்ப உறுப்பினர்கள் எழுமுன் எழுந்து ஒருமணி நேரம் ஏறத்தாழ பேப்பிரில் நான் எழுத விரும்புவற்றைத் தொடர்ந்து எழுதி வந்தேன். வாரத்துக்கு ஏழு மணி நேரம் வருடத்துக்கு 365 மணி நேரம் எழுதினேன். ஒருநாளும் இந்தப் பணிக்கு ஓய்வு கொடுத்து கிடையாது. நாளடைவில் நான் எழுதியவற்றின் அளவும், தரமும் அதிகரித்தது. புத்தகங்கள் வெளிவரத் தொடங்கின. திரும்ப இங்கு நடந்தது என்ன? மூன்று கேள்விகள். எங்கு இருக்கிறோம்? எங்கு செல்ல வேண்டும்? எப்படிச் செல்ல வேண்டும்? என்பதில் ஒரு தெளிவு. அதைச் செயல் படுத்துவதில் ஒழுங்கு, நிதானம், கட்டுப்பாடு, திட்டமிடல் போன்றவையே. இல்லையா? நாளைய கனவுகள் நனவாவது இன்று நீங்கள் செய்யும் செயல்களிலேயே தொடங்குகின்றது. தொடர்ந்து செயல்படுங்கள். ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் செயல்படுங்கள். வெற்றி கிடைக்கவில்லை என்றால் மாத்திரம் யோசியுங்கள். மீண்டும் தொடர்ந்து செயல்படுங்கள், ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் செயல்படுங்கள்.

# 2010 இல்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

Offerகள் ஒரே நாளில் வந்து, கேட்கப்பட்ட விலையைவிட $15,000 மேலதிகமாக விற்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில் ஒன்றுமட்டும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆதனச் சந்தையில் அதிகளவு வாடிக்கையாளர்கள், ஆதனம் வாங்குவதற்கு உள்ளார்கள். இதனால் இப்பொழுது வீடு, மனை விற்பவர்களின் பக்கத்தில் காற்று தீவிரமாகவே வீசுகின்றது.

காற்றின் திசை மாற எவ்வளவு காலம் எடுக்கும்?

**ஆதனத் தகவல்கள்**
GTA பகுதியில் February 2009 இல் விற்கப்பட்ட வீடுகள் - 7291. இந்த பெறுமதி முந்திய ஆண்டு, மாதத்தைவிட 77% அதிகரிப்பு.
GTA பகுதியில் பெப்ரவரி 2010 இல் சராசரி வீட்டு விலை $431,509. இது முந்தய வருடத்தை விட 19% அதிகரிப்பு.

***CMHC* இன் எதிர்வு கூறல்?**
- 2010 இல் ரொறொன்ரோ பகுதியில் புதியதாக நிர்மாணம் செய்யப்படும் வீடுகளின் விலை அதிகரிப்பு 30%.
- 2010 இல் வாழ்கின்ற வீடுகளின் விலை அதிகரிப்பு 2.5%.




OUR EXPERIENCE AND EFFICIENCY GUARANTEES RESULTS!
Have You Been Injured?
Services in Hindi, Punjabi, Urdu, Telugu, Mandarin, Malayalam, Farsi, Cantonese, Tagalog, Tamil, Portuguese, Italian and Spanish.
24 hr. Hotline: 416 471 6634
Carlos Murillo
- MOTOR VEHICLE ACCIDENTS
- SLIP AND FALLS
- WORKERS' COMPENSATION
- TRAFFIC TICKETS
- CRIMINAL CHARGES
- MEDIATIONS & ARBITRATIONS
PLEASE CALL US FOR A FREE CONSULTATION AT OUR OFFICES OR YOUR HOME
905-803-9596 / 1-877-803-9596
165 Dundas St. West, Suite 700, Mississauga, ON L5B 2N6
416-663-5316
1280 Finch Ave. West, Suite 203, North York, ON M3J 3K6
905-595-0805
49 Kennedy Road South, Unit 7, Brampton, ON L6W 4P4
www.icsinjury.com
ICS Injury Claims Services
LICENSED PARALEGALS
LSUC MEMBERS

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

சப்த தாதுக்களினால் ஆன எமது தேகத்ததில் நீடித்த நோய்களில் மிகக் கொடுமையான உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய நோய்களில் நீரழிவு நோயும் ஒன்றாகும். இந்நீரழிவு நோயினைப் பிரமேகம், சலரோகம், மதுமேகம், சர்க்கரை வியாதி எனவும் அழைப்பதுண்டு. இந்நோயினால் பீடிக்கப்பட்ட மனிதரின் உடல் நாளுக்கு நாள் நலிவடைந்து உருவம் மாறுபட்டு வருவதை நன்கு அறிவோம். ஒவ்வொரு நோய்க்கும் பல காரணங்கள் இருக்கும். இதனால், பல அறிகுறிகள் எமக்குத் தென்படும். இருந்தும் முக்கியமான நோயின் அறிகுறி பார்வைப் பரீட்சையுடனும், இரத்தம், சிறுநீர் (Blood & Urine) பரிசோதனைகள் மூலமும் இலகுவில் கண்டு நோயை நன்கு நிர்ணயிக்க முடியும்.

நீரழிவு என்கிற நோயானது சிறியோர் தொடக்கம் முதியோர் வரை ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்படும். நோய் ஏற்பட்டவரின் தாய், தந்தையருக்கும் இந்நோய் இருக்குமாயின் திடமாகப் பிள்ளைகளுக்கும், சந்ததியாகத் தொடர்ந்து வருவதற்கும் இடம் உண்டு எனவும் அறியக் கிடைக்கின்றது. ஆனால், பரம்பரையாக இந்நோய் இல்லாவிட்டாலும் மற்றோருக்கும் இவ்வியாதி வராது எனக்கூற முடியாது. எனவே, இந்நிலைப்பட்டோர் நோய் வந்து எம்மைப் பற்றிக் கொள்ளாதபடி முன்கூட்டியே எம்மைப் பாதுகாத்துக் கொள்வதினால் தாக்கத்தில் இருந்து ஓரளவு தவற முடியும். இதற்கு தங்கள் வைத்தியரிடம் சென்று சகல வழியிலும் பரீட்சித்துக் கொள்வது மிக நன்று.

நீரழிவு என்று அழைக்கப்படும் சலரோக வியாதியானது எமது உறுப்புக்களில் ஒன்றான கணையத்துடன் (Pancreas) தொடர்புடைய தாகும். நாம் உண்ணும் உணவின் சீரணத்திற்குத் தேவைப்படும் எம்சைம்களை சிறுகுடலுக்கு கொடுப்பதோடு இன்சுலின் (Insulin) என்ற திரவத்தைச் சுரந்து இரத்தத்தில் நேரடியாகக் கலக்கும்படி செயலாற்றுகின்றது. நமது உடம்பிற்குத் தேவையான சக்தி (Energy) அளிக்கக்கூடிய குளுக்கோசை அளவுடன் வைத்திருப்பதுடன் அளவிற்கு மிஞ்சிய குளுக்கோசை கிளைக்கோசனாக (Glycogen) மாற்றி கல்லீரல் (Liver) மற்றும் தசைகளில் சேமித்து வைத்திருக்க உதவியாக இருக்கின்றது. இக்கணையம் கல்லீரலின் பின்புறமாக சிறுநீரகத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இவ்வுறுப்பு கிருமித் தொற்றினால் பாதிக்கப்பட்டாலும் அல்லது கட்டிகள் (Tumor) ஏற்பட்டாலோ இந்நோய் ஏற்பட ஏதுவாகும் எனவும் கூறப்படுகின்றது. அத்துடன் நின்றுவிடாமல் ஆஸ்மா, இரத்த அழுத்தம் போன்ற வியாதினால் பாதிக்கப் பட்டிருந்தாலும் இவ்வியாதி வருவதற்கு வழியுண்டு எனவும் அறிய முடிகின்றது.

இன்சுலின் சுரப்பதில் பழுதுநிலை ஏற்பட்டால் இரத்தத்தில் சர்க்கரையின் தன்மையால் ஏற்படும் சக்தி (Energy) குறைந்து அவை கழிவுப் பொருளாக சிறுநீருடன் (Urine) வெளியேறத் தொடங்கிவிடும். இதனால், உடல் நிலை சக்தி கெட்டு சோர்வு, களைப்பு, இளைப்பு ஏற்படும்.

நீரழிவு நோயில் மூன்று தன்மைகள் உள்ளன எனவும் அறியமுடிகின்றது. அவையாவன:

1. Iddm. இது Tape1
இந்நிலை 20 வயதிற்குள் வரக்கூடியதாகும். கணைய உறுப்பு பழுதுபட்டாலோ அன்றிக் கிருமித் தொற்று ஏற்பட்டு அதன் விளைவாலோ ஏற்படலாம். இதனை Young Diabetes என அழைக்கப்படுகின்றது.

2. Niddm. இது Tape 2 ஆகும்.
இந்நிலை பெரும்பாலும் 40, 45 வயதிற்கு மேற்பட்டோருக்கு வருவதாக அறிய முடிகின்றது. இவர்களை பார்வை இடும்போது எடை அதிகரித்து காணப்படும். அத்துடன் கொழுப்பு பொருள் மிஞ்சிக் காணப்படும். இதற்கு உணவுக் கட்டுப்பாடு உறுதுணை அளிக்கும்.

3. Middm. இது Tape 3 ஆகும்.
இது வெப்பம் காரணமாக உறுப்புகள்

# நீரிழிவும் உணவும்
# Diabetes & Food

தாக்கப்பட்டு கணையத்தில் கற்கள் காணப்படும். சிறு வயதில் புரதச்சத்து உணவு குறைவாக இருந்தால் இந்நிலை வரும் எனவும் கூறப்படுகின்றது. இதற்கு சமசீர் உணவில் வயதிற்கு ஏற்ப இடையிடையே உழுந்து, பயறு, துவரை, இறைச்சி, மீன், முட்டை என்பவற்றை பாவித்து வருவதினால் இந்நோயில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும் எனவும் கூற முடிகின்றதுடன் அறியவும் கிடைக்கின்றது.

குடலில் இருந்து சீரணிக்கப்பட்ட சத்துள்ள உணவு வகைகள் இரத்தத்துடன் கலந்து கொள்ளுகின்றன. எனவே, இரத்தத்தில் சர்க்கரைப் பொருள்கள் இரண்டறக் கலந்திருப்பதினால் நாம் சுறுசுறுப்பாகவும் திடமுடன் நல்ல ஆரோக்கியமாகவும் இருக்கப் பெரும் உதவியாக இருக்கின்றது. நமது உடம்பில் செறிந்து ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தில் எப்பொழுதும் 5 கிறாம் சர்க்கரைப் பொருள் காணப்பட வேண்டும். இந்த அளவில் குறைந்தாலோ அன்றிக் கூடினாலோ எமது ஆரோக்கிய நிலை குன்றத் தொடங்கிவிடும். எவ்வேளையும் இரத்தத்திற்குரிய 5 கிறாம் சர்க்கரைப் பொருள் போக மிகுதியாகவுள்ள சர்க்கரைப் பொருளை கிளைக்கோசனாக மாற்றி ஈரல் (Liver) பகுதியில் சேர்த்து வைத்துக் கொள்கின்றன. மேலும், இரத்தத்தில் உள்ள சர்க்கரை குறைவடையும்போது ஈரலில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த கிளைக்கோஜன் சர்க்கரைப் பொருளாக மாற்றி மீண்டும் இரத்தத்தில் சேர்த்துக் கொள்ளுகின்றன. இத்தன்மை பொருந்திய ஈரல் பகுதியை நாம் உணவு முறையாலும் மற்றும் பாவனைப் பொருட்களாலும் தீங்கு ஏற்படாதபடி காப்பாற்றிக் கொள்வது எமது முக்கிய கடமையாகும்.

ஈரல் ஆனாது அவ்வேலையைச் செய்யாதுவிட்டால் புதிதாக வரும் காபோகைதிரேட் கொழுப்பு மிக்கப்பொருட்கள் நமது உடம்பிற்கு பயனற்றுப்போகும் எனவும் அறிய முடிகின்றது. மேலும், ஈரலில் உள்ள கிளைக்கோஜன் குறையும்போது "கிட்டோன்" என ஒரு வகை சத்துப்பொருள் உற்பத்தியாகின்றது எனவும் கூறப்படுகின்றது. இது சர்க்கரையின் சக்திக்குச் சமன் எனவும் கூறப்படுகின்றது. இந்த கிட்டோன் ஆனது அளவுடன் ஈரலில் இருந்தால் நன்மையுள்ளது என்றும் இது அதிகரித்தால் உரியவருக்கு மயக்க நிலையுடன் தடுமாற்றமும் புத்திக்கூர்மை குன்றியும் காணப்படும் என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். எனவே, இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை நன்கு கவனித்து வருதல் வேண்டும். சராசரி 80 - 110 மி.கிராம் இருக்க வேண்டும் என்றும் அதற்கு மேற்படின் சர்க்கரை சிறுநீருடன் (Urine) கழியும் எனவும் அறிய முடிகின்றது. எதற்கும் தங்கள் வைத்தியரிடம் சென்று வரும்போது சிறுநீர், இரத்தம் பரிசோதனைகளைச் செய்து சுகத்துடன் வாழ வழியமைத்துக் கொள்ளுங்கள்.

மேலும், சிறுநீரில் சர்க்கரைப் பொருள் கலந்திருப்பதை இனிப்பு நீரழிவு (Sugar Diabetes) எனவும், சிறுநீரில் சர்க்கரைப் பொருள் கலவாததை சுவையற்ற நீரழிவு என்றும் சிலர் கூறுவதும் உண்டு. இந்நீரழிவு நோய்க்குப் பொதுவான காரணத்தை




ஆராயும்போது தேக உழைப்பின்றி இருப்போருக்கும் சர்க்கரைப் பொருட்களை அளவு மீறி உண்போருக்கும் அளவக்கு மிஞ்சிய மதுபானம் அருந்துவோருக்கும், தேகப் பருமன் கூடி எடை அதிகரித்து இருப்போருக்கும், நரம்பு இரத்தக் குழாய்கள் சேதப்பட்டோருக்கும், மூளை வேலை அதிகமாக செயல்படுவர்களும் அதாவது வக்கீல், லிகிதர், எழுத்தாளர் போன்றோருக்கும் மன நிம்மதி அற்று வேதனையுடன் இருப்போருக்கும், மித மிஞ்சிய தாம்பத்திய உறவு கொள்பவர்களுக்கும் மற்றும் நோயினால் உறுப்புக்கள் கிருமிகளினால் தாக்கம் அடைந்து ஈரல் பகுதி பாதிக்கப்பட்டுப் போனாலும் இந்நீரழிவு நோய் என்னும் மதுமேகம் அதாவது சலரோகம் எமக்கு வருவதற்கு பெரும் வழியாக அமைகின்றது என்பதை மறந்து விடாதீர்கள்.

மேலும், கூறுவோமானால் சில இரசாயன மருந்துகளை தொடர்ந்து பாவிப்பதினாலும் வர இடம் உண்டு எனவும் அறிய முடிகின்றது. நாள்பட்ட சில வியாதிகள், கொழுப்புச்சத்து உணவு அதிகரித்தாலும், எண்ணெய் கரியல் பொரியல் உணவாலும், உடல் நிலைக்கும் வயதிற்கும் ஏற்ற உடற்பயிற்சியின்மையாலும் ஏற்பட வழியுண்டு. உடற்பயிற்சி செய்வது சிரமாக இருப்பின் நடைப்பயிற்சி, துவிச்சக்கரம் ஓடுதல் எல்லாம் நன்மை பயக்கக்கூடியவையாகும். எதைக் கைப்பற்றினாலும் உடல் நிலைக்கு ஏற்றதாக குறிக்கப்பட்ட நேரம் செய்து கொள்ளுதல் வேண்டும். நடையானது சாதாரண நடையிலும் பார்க்க ஓரளவு விரைவுடன் நடக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் உடல் நிலைக்கு ஏற்ற பயிற்சியும் நடையும், ஓட்டமும் குறிக்கப்பட்ட நேரத்தில் நிறுத்தி விடுவது மிக நன்று.

தொடரும்


வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013





தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN

## SCHOLARSHIP FOR C$1000

The Tamil Literary Garden will offer an annual scholarship to an undergraduate full-time student enrolled in a Tamil language or Tamil Studies course offered by a university in Canada. The conditions of the scholarship are as follows:

All full-time undergraduates currently (2009-2010) enrolled in a Tamil language or Tamil studies course offered by a university in Canada are eligible. All students wanting to participate should submit an essay on the topic given below by 30 April 2010.

**Topic.** "Canadian Multiculturalism - A Tamil Perspective." The essay should not exceed 3000 words. It should be double spaced, and a hard copy should be sent to Scholarship Essay, c/o Chelva Kanaganayakam, Trinity College, 6 Hoskin Avenue, University of Toronto, Toronto, Ontario, M5S 1H8 together with an electronic version to appatlg@gmail.com. The essay should be an original contribution, written for the purpose of competing for this scholarship and should not have been published elsewhere.

**Scholarship:** The award of C$1000 will be given to the student who wrote the best essay. The award ceremony of Tamil Literary Garden will be held in July 2010 and the essay published in Kalam magazine.

# அமெரிக்கப் பயணம் - 3

## குகையின் வரலாறு

இது ஆகஸ்ட் 13, 1878 இல் ஐந்து உள்ளூர்வாசிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களுள் முக்கியமானவர்கள் அண்றூ கம்பல் (தகர வேலைக்காரர்) குயின்ற் (அவரது 13 வயது மருமகன்), பென்ரன் ஸ்தெபின்ஸ் (புகைப்படக்காரர்). இவர்களின் கவனத்தைக் கவர்ந்தது, மேலே கிளம்பி நின்ற சுண்ணாம்புக்கல் உருவம். இதன் பக்கத்திலே இருந்த ஒரு குழியிலிருந்து குளிர் காற்று வந்து கொண்டிருந்தது. எனவே இவர்கள் கீழே குகை

**- துறையூரான் -**

இருக்காலாமென ஊகித்து வெட்டத் தொடங்கினர். நான்கு மணித்தியாலத்தின் பின் மெல்லிய ஆள் நுழையக்கூடிய ஓட்டையொன்றை ஏற்படுத்தினர். அண்றூவும் குயின்ரும் ஒரு கயிற்றைப் பிடித்துக்கொண்டு கீழே நழுவிச்சென்று, மெழுகுதிரியின் வெளிச்சத்தில் குகைக்குள் பல்வேறு வடிவங்கள் இருப்பதைக் கண்டு மலைத்துப்போயினர். இவர்கள் கண்ட முதல் தூணுக்கு வோஷிங்டன் தூண் என முதலாவது அமெரிக்க ஜனாதிபதியின் ஞாப-கமாகப் பெயர் வைத்தனர். மேலும் எலும்புக்கூட்டுக் குகையில் பல எலும்புக்கூடுகள், கரி, நெருப்புக்கல் போன்ற பல மனிதர் வாழ்ந்ததற்கான அடையாளங்களைக் கண்டனர். ஒரு அமெரிக்கப் பழங்குடி சிறுமியின் எலும்புக்கூடு உருவ அமைப்புக்களுக்கு மத்தியில் கிடப்பதைக் கண்டனர். இதனை ஆராய்ந்த ஆய்வாளர் இது 500 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சிறுமி என்பதைக் கண்டறிந்தனர்.

இக்குகை உள்ள நிலத்தின் சொந்தக்கார-ரான சாம் பியூறேக்கருக்கு விஷயத்தைக் கூறாமல் கண்டு பிடித்த மூவரும், அந்த நிலத்தை வாங்கினர். ஆனால் விஷயமறிந்த சாம் பின்னால் வழக்குத் தொடர்ந்து இரண்டாண்டுகளின் பின் மீளப்பெற்று வில்லியம் பியட்லெர் என்பவருக்கு விற்றார். பின் பலரது கைமாற்றத்தின் பின் 1893 இல் லூறே குகை கம்பனி விலைக்கு வாங்கியது. அன்று முதல் இற்றை வரைக்கு இக்குகை உலகப் பிரசித்திபெற்ற உல்லாசப் பயணிகளின் இடமாகப் விளங்குகின்றது. தற்போது மின்சார விளக்குகளும் நவீன சாதனங்களும் பொருத்தப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகின்றது. பார்வையாளர் ஒவ்வொருவருக்கும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஒலி நாடா கொண்ட பதிகருவியும், காதில் பொருத்தும் கருவியும் தரப்படுகின்றது. ஒவ்வொரு பகுதியும் இலக்கமிடப்பட்டுள்ளது. இலக்கத்தின் படி ஒலிநாடா அப்பகுதிக்கான விளக்கத்தைத் தரும். வழிகாட்டிகள் இல்லாமலே ஒவ்வொருவரும் அக்குகையை வலம் வரலாம். உள்ளே 1½ மைல் தூரத்துக்கு நடக்கவேண்டும். பல அடுக்குகள் கொண்ட இடங்களும் ஏற்ற இறக்கங்களும் உள்ளன. தனியொரு உலகத்தில் இருப்பது போன்று இருக்கும். ஒவ்வொரு இடத்தையும் உன்னிப்பாகக் கவனித்து முழு இடங்களையும் பார்ப்பதற்கு இரண்டு மணித்தியலமாவது தேவைப்படும்.

இயற்கையின் வனப்பை குகையில் காண வேண்டுமாயின் ஒரு முறை சென்று வாருங்கள். எமது அடுத்த பயணம் உலகப் பிரசித்தி பெற்ற ஜியோஜியாவிலுள்ள கடல் நீர்வாழ் விலங்கினங்களைக் கொண்ட மாபெரும் தொட்டி (Aquarium) பற்றியது. அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.




15 Years of EXPERIENCE

Maths - Science English

Classes in Progress

For All Grades

K.G, Gr.1 to Gr 12

Scarborough / Markham





Mr & Mrs Sharma - 416-666-5515 / 416.724.9996

# கனேடிய தமிழ்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

“புவியைக் காப்பாற்றும் பெருமுயற்சி என்ற சவாலில் ஐ.நா.வுடன் இணைந்து பணியாற்ற தயாராயிருக் கிறேன், நான் நல்லக்குழுவுடன் இணைந்துள்ளேன், அனைவரும் இணைந்து இதனைத் திறம்படச் செய்ய முடியும் என்று நம்புகிறேன்.” என்று சச்சின் டெண்டுல்கர் மேலும் கூறுகையில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சுற்றுச்சூழல் அமைப்பின் செயல் இயக்குனர் அகிம் ஸ்டெய்னர், “சச்சினின் குணம், நேர்மை, அவரது அறிவு மற்றும் அர்ப்பணிப்பு, பரவலான சுற்றுச்சூழல் செயல்பாட்டிற்கு தூண்டுகோலாக அமையும்.” என்றார். ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தின் “நல்லெண்ணத் தூதராக” சச்சின் தன் முதல் கடமையை ஐ.பி.எல். தொடக்கத்தில் நிகழ்த்துகிறார். அதாவது புவியைக் காப்பாற்றும் பசுமை உறுதிமொழியை சச்சின் டெண்டுல்கர் தலைமையேற்று நடத்துகிறார். ஏற்கனவே யூனிசெப் அமைப்பின் குழந்தைகள் நிதியத்திற்காக சச்சின் டெண்டுல்கர் குரல் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல். தொடக்க விழாவில் சச்சின் டெண்டுல்கரின் இந்த புதிய பொறுப்பை அறிமுகம் செய்யும் விதமாக மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலான பெரிய அளவு பூமி உருண்டை ஒன்றை உருவாக்கி அதில் ஐ.பி.எல். அணித்தலைவர்கள் கையெழுத்திடுகின்றனர்.

## நியூசீலாந்தை வீழ்த்தி அவுஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றியது

ஆக்லாந்தில் நடைபெற்ற 4-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், மழை காரணமாக 34 ஓவர்களில் 200 ரன்கள் என்று வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட, அதனை அவுஸ்திரேலியா 32-வது ஓவரில் எடுத்து முடித்து நியூஸீலாந்தை வீழ்த்தி தொடரை 3-1 என்று கைப்பற்றியது. முதலில் பேட் செய்ய அழைக்கப்பட்ட நியூஸீலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களை முழுதும் ஆடாமல் 45-வது ஓவரில் 238 ரன்களுக்குச் சுருண்டது. தொடர்ந்து மழை பெய்ததால் அவுஸ்திரேலியா தாமதமாகக் களமிறங்கியது. இதனால் ஓவர்கள் 34 ஆகக் குறைக்கப்பட்டு டக்வொர்த் லூயிஸ் முறைப்படி 200 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பிராட் ஹேடின், ஷேன் பாண்ட் வீசிய முதல் ஓவரின் 3-வது பந்தில் ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். ஆனால் அதன் பிறகு களமிறங்கிய ரிக்கி பாண்டிங் அதிரடி முறையைக் கடைபிடித்தார். இதற்கு நியூஸீலாந்து வீரர் சவுதீ இடம் கொடுத்தார். தொடர்ந்து ஷாட் பிட்சாக வீசி பாண்டிங்கிற்கு போட்டுக் கொடுத்தனர். அவரும் அதனை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்.

டேரல் டஃபியின் ஒரு பந்தை மேலேறி வந்து நேராக சிக்சருக்குத் தூக்கினார் பாண்டிங். அது தவிர வாட்சனும், பாண்டிங்கும் பவுண்டரிகளாக விளாசித் தள்ளினர். இருவரும் இணைந்து 2-வது விக்கெட்டுக்காக 12 ஓவர்களில் 82 ரன்கள் சேர்த்தனர். வாட்சன் 6 பவுண்டரிகளுடன் 41 பந்துகளில் 32 ரன்கள் எடுத்தார். ரிக்கி பாண்டிங் 34 பந்துகளில் 8 பவுண்டரிகள் ஒரு சிக்சர் சகிதம் 50 ரன்களை எடுத்தார். அப்போது சிறு திருப்பம் ஏற்பட்டது. டேனியல் வெட்டோரி அடுத்தடுத்து வாட்சனையும் பாண்டிங்கையும் வீழ்த்த அவுஸ்திரேலியா 85/3 என்று ஆனது. சற்றே நம்பிக்கை வரும் வேளையில் நியூஸீலாந்து பந்து வீச்சு பலவீனம் வெளிப்பட்டது. ஆடம் வோஜஸும், கேமரூம் ஒயிட்டும் இணைந்து அடுத்த 69 பந்துகளில் 65 ரன்களைச் சேர்க்க ஸ்கோர் 26-வது ஓவரில் 150 ரன்களை எட்டியது. 8 ஓவர்களில் 50 ரன்கள் என்ற வெற்றி இலக்கு எளிதாக மாறிவிட்ட நிலையில் 36 பந்துகளில் 3 பவுண்டரி 1 சிக்சர் அடித்து 34 ரன்களில் வோஜஸ் ஆட்டமிழந்தார். ஆனால் கேமரூன் ஒயிட் (57 பந்துகள் 50 ரன்கள் 5 பவுண்டரி ஒரு சிக்சர்), மைக் ஹஸ்சி இணைந்து வெற்றிக்கனியை 32-வது ஓவரில் பறித்தனர். கேமரூன் ஒயிட் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

# கனடாவின் சரித்திரத்திலேயே...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

செலவுத்திட்டத்தில் நாலு நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது. இதைவிட இந்த வைப்பில் இடப்பட்ட காசோலையில் இருந்து 24 மணித்தியாலங்களிற்கு பிறகு $100 டொலர்வரை பணமாக பெறும் உரிமையும் கணக்கு வைத்திருப்பவருக்கு கொடுக்கிறது.

நிதி நிறுவனங்கள் இதுவரைகாலமும் ‘நீங்கள் வேண்டாம் என்று கூறாவிட்டால் உங்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட (உ+ம் காப்புறுதி) சேவைக்காக இனிமேல் பணம் அறவிடப்படும்’ என்று கடிதம் ஒன்றை அனுப்பிவிட்டு எதிர்மறையான தெரிவை தனது வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யாவிட்டால் அவர்களிடமிருந்து ஒரு புதிய சேவைக்கான பணத்தை அறவிட்டு வந்தது. இவ்வுரிமையையும் நிதி நிறுவனங்கள் இந்த வரவு செலவுத்திட்டத்துடன் இழக்கின்றன. இனிமேல் வாடிக்கையாளர்கள் ஒத்துக் கொண்டால் மட்டுமே நிதி நிறுவனங்கள் புதியசேவை ஒன்றிற்கான பணத்தை தனது வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடமுடியும். (Negative option billing is prohibited)

ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்கள் பெற்றவர்கள் ‘ஏறி நிற்கும் மேடையை சொந்தமாக்குங்கள்’ (Own the podium) என்ற பெயரில் ஒலிம்பிக் போட்டிக்கு பங்குபெற விரும்பும் தகுதியுள்ள வீரர்களையும், வீராங்கனைகளையும் பயிற்சி அளிப்பதற்காக அரசாங்கம் கடந்த சில வருடங்களாக மக்களின் வரிப்பணத்தில் $66 மில்லியன் டொலர் செலவிட்டது. இதன் பிரதிபலனாகவே கனடா இம்முறை வன்கூவரில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் உலகில் எந்த ஒரு நாடும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டில் பொறாத அளவு அதிகூடிய 14 தங்கப்பதக்கங்களை கனடா பெற்று சாதனையை நிலை நாட்டியது.

இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த அரசாங்கம் இனிவரும் ஒலிம்பிக்கில் பங்கு பற்ற இருக்கும் தகுதியுள்ள வீரர்களையும் வீராங்கனைகளையும் பயிற்சியளிப்பதற்காக செலவிட இருக்கும் பணத்தை இம்முறை வரவு செலவுத்திட்டம் மூலம் வருடத்திற்கு $22 மில்லியன் டொலர்களால் அடுத்து இரண்டு வருடங்களுக்கு அதிகரித்துள்ளது. இது கடந்த சில வருடங்கள் வழங்கப்பட்ட உதவித் தொகையின் இருமடங்காகும்.

இவற்றைவிட விஞ்ஞான ஆராய்ச்சி செய்வதற்காகவும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு $619 மில்லியன் டொலர் இவ்வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதி கனேடிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (Canadian Space Agency) அடுத்த சந்ததி சற்றலைட்டுக்களை (Next Generation Satellites) கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிக்கு செலவிடப்படும்.

# காலத்தினாற் செய்த...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

பாண்டியரும் பாண்டியரும் சேரரும் என்று போர்செய்த வரலாறுகள் பற்றிக் கேள்விப்படுகின்றோம். இதனாலேயே தமிழருக்கென்று இன்றும் ஒரு தனிநாடு இல்லாமல் இருக்கின்றது.

இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்திலே இலங்கைக்கும் கிடைப்பதற்கு நல்ல வாய்ப்பு ஒன்று இருந்தது. அதனைச் செவ்வனே எமது அன்றைய தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. பயன்படுத்த வேண்டும் என்று உணர்த்துவது போல முன் உதாரணம் ஒன்றும் நடந்திருக்கின்றது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்கின்ற சமயத்தில் ஜின்னா பாக்கிஸ்தானைப் பிரித்துத்தரவேண்டும் என்று வலியுறுத்தி அதனை இந்தியாவிலிருந்து பிரித்து எடுப்பதில் வெற்றியும் கண்டார். அந்த முறையைப் பின்பற்றி தமிழீழத்தை வேறு நாடாக்க வேண்டும் என்று ஏனோ நமது அன்றைய தலைவர்கள் நினைக்கவுமில்லை, செயற்படுத்தவுமில்லை.

இசுலாமியருக்கென்று இன்று உலகத்திற் பல நாடுகள் இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய ஒற்றுமையும் அவர்களின் தலைவர்களின் தொலைநோக்கப் பார்வையுந்தான். பாக்கிஸ்தான் தலைவர் ஜின்னாவுக்கு இருந்த தீர்க்கதரிசனம் எமது தலைவர்களுக்கு அன்று இருந்திருந்தால் இன்று எமது இளைஞர்கள் தங்கள் வாழ்கையைப் பணயம் வைத்து தமிழீழப் போராட்டத்தில் இறங்கியிருக்கமாட்டார்கள் அல்லவா? துணிந்து போராட்டத்தில் இறங்கியவருக்கும் தமிழர் முழுமையான ஆதரவை வழங்கவில்லை என்பதும் நாம் கண்டுகொண்ட உண்மையாகும்.

இந்த நிலையில் விதியே விதியே தமிழனை என்செய நினைத்தாய் என்று நொந்து கொண்டு மேலும் கண்களை அகல விரித்து ஆகாயத்தைப் பார்த்துத் தலையைச் சொறிந்து கொள்வதில் எந்தப் பலனும் இல்லை.

ஆக்கபூர்வமான அலுவல்கள் நடைபெற வேண்டுமென்றால் எம்மிடத்தில் இனவாரியான ஒற்றுமை உணர்வு வளரவேண்டும். ஒரு நடராசாவோ ஒரு கிருஷ்ணசாமியோ எங்கள் அலுவல்களைச் செய்து தருவார்கள் என்று வாளாவிராது அவர்களது முயற்சிகளுக்கு நீங்களும் உங்களாலான ஒத்துழைப்பை வழங்குவீர்களானால் இழந்த எமது ஊரைத் திரும்பப் பெறாலாம் என்று கூறி அமைகின்றேன், வணக்கம்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



### *Personal Prayer To The Holy Spirit*

Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - R.R



Our Mother of Perpetual Help

# விலை மதிக்க முடியாத சொத்து

## ஓடும் நீர் உறைவதில்லை 97

சொத்து என்றவுடன் எமக்கு தோன்றுவதெல்லாம் காணி, வீடு, வாகனம், வங்கிஇருப்பு போன்றனவாகும். சொத்துக்கள் கணக்கியல் (Accounting) அடிப்படையில் நடைமுறைச்சொத்துக்கள், நீண்டகாலச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. நீண்டகாலச் சொத்துக்கள் என்பன ஒன்றுக்கு மேற்பட்ட வருடத்திற்கான வாழ்காலத் தன்மையைக் கொண்டிருப்பதுடன் வருமானத்தை உருவாக்குவதற்கான அடிப்படை களாகவும் அமைகின்றன. நடைமுறைச் சொத்துக்களும் நீண்டகாலச் சொத்துக்களும் ஒரு நிறுவனத்தின் பொறுப்புக்களுக்கு (Liabilities) சமமாக அமையும். இந்தச் சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் வரவு - செலவு எனும் நடவடிக்கைகள் சமமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்தத் தாக்கங்கள் சொத்தையும் பொறுப்பையும் அதிகரிப்பதாக அல்லது குறைப்பதாக அமையும். அதாவது வரவு - செலவு எனும் நடவடிக்கைகள் சமமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்தத் தாக்கங்கள் சொத்தையும் பொறுப்பையும் அதிகரிப்பதாக அல்லது குறைப்பதாக அமையும். அதாவது வரவு செலவு எனும் நடவடிக்கைகள் சொத்தில் அல்லது பொறுப்பில் ஒரே வகையான மாற்றத்தையே ஏற்படுத்தும். சொத்தைக் கூட்டினால் பொறுப்பையும் கூட்டும். அதேபோல் சொத்தைக் குறைத்தால் பொறுப்பைக் குறைக்கும்.

வாழ்க்கையும் ஒரு வரவு செலவுதான். இந்த வரவும் செலவும் எவை என்பதை இலகுபடுத்துவதற்காகப் பிறப்பு வரவாகவும் இறப்பு செலவாகவும் கூறிக்கொள்கின்றோம். ஆனால் இந்தப் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெறும் நடவடிக்கைகள் அதாவது வரவுகளும் செலவுகளும் எவை என்பதை நாம் திட்டவட்டமாக வகைப்படுத்தமுடியாது. ஏனெனில் ஒவ்வொருவரது நடவடிக்கைகளும் மற்றவர்களில் இருந்து வேறுபடுவதுடன் ஒவ்வொருவரது வாழ்வியல் நோக்கமும் வேறுபட்டிருப்தாகும். இவ்வாறு ஒவ்வொரு மனிதனதும் நடவடிக்கைகள் வேறுபடுவதால் அந்த நடவடிக்கைளால் வெளிப்படுத்தப்படும் பெறுபேறுகளான - சொத்துக்களும் பொறுப்புக்களும் வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றன.

வாழ்க்கை ஒரு வியாபாரம். அதில் ஜனனம் - பிறப்பு என்பது வரவு என்றும் மரணம் என்பது செலவு என்றும் அறிந்துள்ளோம். ஆனால் வியாபாரம் என்பது இலாபத்தை அடிப்படையாக வைத்து இயக்கப்படுவது. அதுமட்டுமன்றி இந்த இயக்கத்தில் இலாபத்தை அடைவதற்கு அத்திவாரமாக அமைவது சொத்துக்கள். ஏனெனில் ஒரு

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> நன்றியுடன் KG Master

வியாபாரத்தில் நீண்டகாலப் பயன்தரும் நிலையான சொத்துக்கள் அதன் பயன்பாட்டுத் திறனைப் பொறுத்து அந்த வியாபாரத்தின் அடிப்படை நோக்கமான இலாபத்தை தீர்மானிக்கின்றன. இன்னும் சிறிது விளக்கமாகக் கூறுவதாயின் ஒரு வியாபார நிறுவனத்தின் பௌதீக சொத்துக்கள் அதன் இலாபத்தை அடைவதற்கு அத்திவாராமாக அமைகின்றன. நமது வாழ்க்கையும் ஒரு வியாபாரமாதலால் அதன் அடிப்படை நோக்கமும் வாழுகின்ற காலப்பகுதிக்குள் உச்ச பலனை அடையவேண்டும் என்பதாக அமைகின்றது. இந்த உச்சமான பயன் என்பது ஒவ்வொருவரதும் வாழ்வியல் நோக்கத்தை சார்ந்திருப்பது அந்த நோக்கத்தை அடைவதற்கு அவரவர் மேற்கொள்ளும் முயற்சிகளை சார்ந்ததாக அமைந்திருப்பதும் இயல்பானதே. ஆனாலும் ஒரு வியாபார நிறுவனம் தனது இலக்கை அடைவதற்குச் சொத்துக்கள் அடிப்படை-களாக அமைவது போல் நமது வாழ்க்கை எனும் வியாபாரமும் அதன் இலக்கை அடை-வதற்குச் சொத்துக்கள் அடிப்பகைளாக அமைகின்றன என்பது மறக்கவோ அல்லது மறுக்கவோ முடியதாதாகும்.


> நமது வாழ்க்கையில் எம்மால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தீர்மானமும் நமது எதிர்பார்ப்புக்கேற்ப பெறுபேறுகளைத் தருவதில்லை. பெறுபேறுகள் சாதகமாக அமைவதற்கு நமது தீர்மானங்கள் சரியானதாக அமையவேண்டும். சரியான தீர்மானங்களுக்கு அடிப்படையாக அமைபவை சரியான அனுபவங்கள். சரியான அனுபவங்களைத் தருபவை தோல்விகள். தோல்விகளுக்கு அடிப்படை யாக அமைபவை தவறான தீர்மானங்கள். இவற்றினூடாக நாம் விலைமதிக்க முடியாத சொத்துக்களின் சொந்தக்காரராகி விடுகிறோம்.


**KG Master-*kgmaster@rogers.com***

வாழ்க்கை எனும் வியாபாரத்தில் நாம் அடைய விரும்பும் இலக்கை நமது வியாபார (வாழ்) காலத்தில் நாம் சேர்த்துக் கொள்ளும் - உரிமையாக்கிக் கொள்ளும் சொத்துக்களின் பயன்பாடுகள் நெறிப்படுத்துகின்றன. ஆனால் இந்தச் சொத்துக்கள் பௌதீகத் தன்மை கொண்டவையல்ல. அதாவது இச்சொத்துக் களுக்கு உருவம் கிடையாது. இந்த உருவமற்ற சொத்துக்களின் இருப்பானது அவரவரால் மட்டுமே இனங்காணப்படமுடியும். அதாவது இங்கு நான் "எனது சொத்துக்கள்" என குறப்பிடுபவை அனைத்தும் என்னைத் தவிர வேறு எவராலும் அதன் இருப்புத் தன்மையையும் இயல்பையும் உணர்ந்து கொள்ளமுடியாது. அதேபோன்றே உங்களது சொத்துக்களும் உங்களைத்தவிர வேறு எவராலும் அதன் இருப்புத் தன்மையையும் இயல்பையும் புரிந்து கொள்ள முடியாது. அதுமட்டுமல்ல அந்த அளவுக்கு அவை தனித்துவமானவையும் கூட.

நமது வாழ்வியல் வியாபாரத்தில் இடம்பெறும் வரவுகளும் செலவுகளும் நமது நாளாந்த நடவடிக்கையின் விளைவுகளே. இந்த விளைவுகள் ஒவ்வொன்றும் அதற்கான பெறுபேறுகளைத் தருகின்றன. இந்தப் பெறுபேறுகளில் எம்மால் இனங்காணப்படுவையும் இனங்காணப்படாதவைகளும் அடங்குகின்றன. எவையெவையெல்லாம் எம்மால் இனங்காணப்படக் கூடியதாக அமைகின்றனவோ அவையே நமது வாழ்வியல் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் என நாம் ஏற்றுக்கொள்கிறோம். இவ்வாறு நாம் இனங்கண்டு ஏற்றுக்கொள்ளும் விடயங்களில் மிகச் சில சொத்துக்களாக அமைந்து விடுகின்றன. இந்தச் சொத்துக்களே விலை மதிக்கமுடியாத சொத்துக்களாகின்றன.

நமது வாழ்க்கையில் எம்மால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தீர்மானமும் நமது எதிர்பார்ப்புக்கேற்ப பெறுபேறுகளைத் தருவதில்லை. பெறுபேறுகள் சாதகமாக அமைவதற்கு நமது தீர்மானங்கள் சரியானதாக அமைய வேண்டும். சரியான தீர்மானங்களுக்கு அடிப்படையாக அமைபவை சரியான அனுபவங்கள். சரியான அனுபவங்களைத் தருபவை தோல்விகள். தோல்விகளுக்கு அடிப்படையாக அமைபவை தவறான தீர்மானங்கள். இவற்றினூடாக நாம் விலைமதிக்க முடியாத சொத்துக்களின் சொந்தக்காராகி விடுகிறோம்.

சொத்துக்கள் எனப்படுபவை நீண்டகாலப் பயனுடையவையாகவும், எதிர்காலத்தில் அவற்றினால் வருமானத்தை உருவாக்குவதற்கு வழிவகுப்பவையாகவும் அமைகின்றன என்பதை நாம் அறிந்துள்ளோம். இவ்வாறான சொத்துக்கள் பௌதீகத் தன்மையுடையவையாக அமைவதும் ஒரு வியாபார நிறுவனத்தில் பொதுவானதே. ஆனால் இங்கு நான் குறிப்பிடும் சொத்து என்பது பௌதீகத் தன்மையற்றது மட்டுமன்றி பிறரால் அந்தச் சொத்தை முழுமையாக அளவிடமுடியாது என்பதும் அதன் சிறப்பியல்பு என அறியப்படல் வேண்டும். மற்றவர்களால் அளவிடமுடியாத சொத்துக்கள் எவை?

மற்றவர்களால் அளவிடமுடியாததும் அறிய முடியாததும் ஆனால் எம்மால் மட்டுமே அறியக்கூடியதும் அளவிடக்கூடியதுமான அந்தச் சொத்துக்கள் நாம் கடந்த காலங்களில் எதிர்கொண்ட தோல்விகள் தான். தோல்விகள் எப்படி சொத்துக்களாக முடியும்? வெற்றியல்லவா சொத்துக்களாக முடியும் என நீங்கள் எண்ணுவது தப்பு அல்ல. ஆனால் அது தவறு. ஏனெனில் வெற்றிக்கு அடிப்படையாக அமைவது சரியான தீர்மானங்கள் என்பதும், சரியான தீர்மானத்திற்கு அடிப்படையாக அமைவது சரியான அனுபவங்கள் என்பதும், சரியான அனுபவங்களைத் தருவது தோல்விகள் என்பதும் தோல்விக்கு அடிப்படையாக அமைவது தவறான தீர்மானங்கள் என்பதும் முன்னரும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை நாம் அவதானமாக அவதானிக்கும் போது தோல்விகள் வெற்றிக்கான அடிப்படைகளாக அமைவது புலனாகின்றது. அதுமட்டுமன்றி அவையே முன்னோக்கிய வாழ்வியல் திருப்பத்திற்கும் அடிப்படைகளாகின்றன. ஒரு வியாபாரத்தின் நோக்கம் அதன் சொத்துக்களை பயன்படுத்தி அதன் இலாபத்தன்மையை அதிகரிப்பதுபோல் நமது வாழ்க்கை எனும் வியாபாரத்தில் சரியான அனுபவங்களையும் அதன் மூலம் சரியான தீர்மானங்களையும் அதன் மூலம் வெற்றியையும் அடைவதற்கு அடிப்படையாக அமைகின்ற தோல்விகள் எனும் சொத்துக்கள் விலை மதிக்க முடியாத சொத்துக்களாகும்.

நடைமுறையில் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரும் செல்வமாக கல்வியானது அறிவியலுடன் தொடர்புபடுத்தப்பட்டுக் கருதப்படுகின்றது. துரதிஷ்டவசமாக இந்தக் கல்விச் செல்வம் எனப்படுவது புத்தகக் கல்வி எனவும் கொள்ளப்படுகின்றது. அதாவது நூலறிவு சிறப்பாக இருப்பின் வாழ்க்கை சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் வாழ்க்கைக் கல்வியே ஒருவரது வாழ்வின் சிறப்பை நிர்ணயிக்கின்றது. இந்த வாழ்க்கைக் கல்வி என்பது அனுபவக்கல்வி மட்டுமே. இந்த அனுபவக்கல்வியே ஒருவருக்கு வழங்கப்படும் மிகப் பெரும் சொத்தாகும். இந்த அனுபவக் கல்விக்கு அடிப்படையாக அமைவது நாம் கடந்த காலங்களில் எதிர்நோக்கிய தோல்விகளின் பாடங்களே. இதனால் தான் தோல்விகள் முன்னோக்கிய வாழ்வியல் நகர்வுக்கான அடிப்படைகளாகின்றன.

### ஆம் வாசகர்களே!

செல்வம் என்பது சொத்துக்களின் வெளிப்பாடே. ஒருவர் பெரிய செல்வந்தர் என நாம் சாதாரணமாகச் குறிப்பிடும்போது அவரது சொத்துக்களின் பெறுமதியை அடிப்படையாக வைத்தே குறிப்பிடுகின்றோம். எனவே சொத்து இல்லாமல் செல்வம் இல்லை. அதுமட்டுமன்றி நீண்டகாலத்திற்கு நிலையான வருமானத்தை தருவதற்கும் அடிப்படையாக அமைபவை சொத்துக்களே. இதனால் தான் ஒவ்வொரு வியாபார நிறுவனமும் அவற்றின் சொத்துக்களை அதிகரிப்பதில் முழுமையான முயற்சியை மேற்கொள்கின்றன. ஒரு வியாபார நிறுவனத்தின் பெறுமதியென்பது அதன் சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையிலான வித்தியாசமே. இந்த வித்தியாச மானது அதாவது தேறிய பெறுமதியானது அந்த நிறுவனத்தின் உண்மையான நிலையையும் எதிர்கால வளர்ச்சியையும் நிர்ணயிக்கும். வியாபார நிறுவனம் போன்றே நமது பெறுமதியும் நாம் முன்னெடுக்கும் முயற்சியின் வெற்றியும் நமது தீர்மானங்களின் சிறப்பால் அளவிடப்படுகின்றது. சிறந்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு, சிறந்த அனுபவம் வேண்டும். அதற்கு அடிப்படையாக அமைவது தவறான தீர்மானங்களால் நாம் அடைந்த தோல்விகளின் பாடங்களே. ஒரு தீர்மானம் தோல்வியில் முடியுமாயின் அது புதிய தீர்மானத்தை மேலும் தரமாக மேற் கொள்ளவதற்கு அடிப்படையாக அமைகின்றது. எனவே தோல்விகள் முடிவுகள் அல்ல. புதிய ஒன்றின் ஆரம்பம் மட்டுமே. அதனால்தான் தோல்விகள் நமது சொத்துகளாகின்றன. அல்லது சொத்துக்களாக்கப்படல் வேண்டும். ஏனெனில் இந்தச் சொத்துக்களின் சிறப்பான பெறுபேறுகள் எமது கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக அமைவது மட்டுமன்றி மற்றவர்களது முன்னேற்றத்திற்கான படிக்கற்களாகவும் அமையும்.


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

மஹராஜியின் உரைகள்

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3221 | Bell Express vu Channel - 219 |



# வீட்டு வாடகைப்பணம் செலுத்தமுடியாத நிலைமையிலிருப்போருக்கு கைகொடுக்கும் அரசின் திட்டம்

## கனடிய தகவல் தொடர் 121

### *Provincial Rental Bank Program*

வாடகைக்கு குடியிருக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கு கனடாவில் சில நேரங்களில் சில பிரச்சனைகள் எழலாம்.

கடந்த ஒன்று அல்லது இரண்டு மாத வாடகைப் பணம் செலுத்தாத காரணத்தினால் தாம் குடியிருக்கும் குடியிருப்பு மனையினை விட்டு இடம் பெயர வேண்டிய ஒரு இக்கட்டான நிலைமை என்பது உருவாகலாம். இப்படியொரு பரிதாபகரமான நிலைமையிலிருப்பவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு மாத வாடகை பணத்தினை மட்டும் வட்டியில்லாத ஒரு கடனாக வழங்கி அதனை பகுதி பகுதியாக திருப்பிச் செலுத்தும் ஒரு திட்டத்தினை ஒன்ராரியோ மாகாண அரசு உருவாக்கி மாகாணத்திலுள்ள சுமார் 47 நகர-சபை நிர்வாக பிரிவினூடாக நிறைவேற்றி வருகின்றது என்பதனை அறிந்து கொண்டீர்களா?

ஒன்ராரியோ மாகாண அரசின் 'நகரசபை விவகாரம் மற்றும் வீடுகள், விவகார அமைச்சு' (Ontario Ministry of Municipal Affair & Housing)

'மாகாண வாடகை வங்கி திட்டம்' (Provincial Rental Bank Program) என்னும் பெயரில் இதனை அறிமுகப்படுத்தி நடைமுறைபடுத்தியுள்ளது. இக்குறுகிய கால குடியிருப்பு வாடகை செலுத்த (Short Term Rental Arrears) முடியாத நிலைமையிலிருப்போர் இவ் உதவியினை கேட்டு விண்ணப்பிக்கும் போது, இவ்விண்ணப்பத்திற்கு உரியவர்கள் உண்மையில் இதனை பெறுவதற்கு தகுதியானவரா? என்பதனை அவர்கள் குடியிருந்து விண்ணப்பிக்கும் நகரசபை அதிகார பிரிவினர் (Municipality Authorities) வெவ்வேறு அம்சங்களின் அடிப்படையில் தீர்மானிக்கின்றனர்.

ஆனால் பொதுவாக இப்பண உதவிகளை பெற விரும்புவோர் பின்வரும் தகுதி நிலைமைக்குள் இருத்தல் வேண்டும்.

- வருமானம் குறைந்த மாகாண வாசிகள் (Low Income Ontarians)
- சமூக உதவி பணம் பெறுவோர் (Social Assistance Recipients)
- வாடகை செலுத்தாத காரணத்தினால் இடம்பெயரும் ஆபத்து நிலையில் இருப்போர். (Due to short term rental arrears and facing eviction)
- வங்கியில் எதுவித பணமோ அல்லது சொத்துக்கள் எதுவும் அந்த நேரம் கையில் இல்லாதவர்கள்

இப்படி சில அம்சங்களை வைத்து இவ் அவசர பண உதவியினை பெற தகுதியுடையவர்களா? என்பதனை அவரவர் குடியிருக்கும் நகரசபை நிர்வாக பிரிவினர் தீர்மானிப்பார்கள். ஒவ்வொரு நகரசபைக்கும் இவ் ஒழுங்கு விதிகள் அடிப்படையில் ஒன்றாக இருந்தாலும் சில சில விதிகளில் மாறுபட்டும் இருக்கலாம். ஏனெனில் ஒன்ராரியோ மாகாணத்திலுள்ள சில நகரசபை நிர்வாகத்தினர் இதனை திருப்பி செலுத்த தேவையில்லாத உதவிப்பணமாக (Grant) இத்தகைய அவசரமான பரிதாபகர நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இத்திட்டத்திலிருந்து உதவி பெறத்தகுதியுள்ளவர்கள் ஒவ்வொரு இரு வருடங்களுக்கு ஒருமுறை விண்ணப்பிக்கலாம். நேரடியாக இவ் அவசரஉதவி பணம் குடியிருப்பு உரிமையாளருக்கு (Land Lord) வழங்கி வாடகை குடியிருப்பிலிருந்து துரத்தும் நிலைமையிலிருந்து பாதுகாக்குமே தவிர நேரடியாக சிக்கலில் இருக்கும் குடியிருப்பாளரின் கைகளுக்கு இந்நகரசபை நிர்வாகத்தினர் இப்பண காசோலையினை வழங்கமாட்டார்கள்.

### இதற்கு எப்படி விண்ணப்பித்து இவ் அவசர உதவியினை பெறுவது?

ஒவ்வொரு நகரசபை பிரிவிலும் நகரசபை சேவை மனேஜர் (Municipal Service Manager) அல்லது 'வாடகை வங்கி சேவையாளர்' (Rent Bank Provider) என இருப்பார்கள். அவர்களின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தினை நிரப்பிக் கொடுத்தல் வேண்டும்.

ஒன்றிணைக்கப்பட்ட ரொறொன்ரோ நகரசபையின் வாடகை வங்கி மத்திய அலுவலகத்திற்கு (Rental Bank Programme - (Central Office) 416.924.3862 என்னும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல்களை பெறலாம்.

ரொறொன்ரோவில் இத்தகைய நிலையில் உள்ளவர்களின் அலுவலகங்கள் பின்வரும் முகவரியில் உள்ளது.

***SHELTER, SUPPORT & HOUSING ADMINISTRATION DIVISION***
***SOCIAL HOUSING UNIT***
***365, BLOOR ST. EAST, 15THE FLOOR***
***TORONTO, ONTARIO M4W 3L4***
தொலைபேசி - 416.338.8342
தொலைநகல் - 416.338.8228

***AFFORDABLE HOUSING OFFICE***
***55, JOHN ST, 7TH FLOOR***
***TORONTO, ONTARIO M5V 3C6***
தொலைபேசி - 416.397.4169
தொலைநகல் - 416.392.4219

ரொறோன்ரோ நகரில் இருந்து இவ் உதவியினை பெற விரும்புவர்கள் நகரத்தின் தகவல் பிரிவு தொலைபேசி இலக்கம் 311 என்ற இலக்கத்திற்கு அழைத்தாலும், தகவல்களை தந்து உதவுவார்கள். இத் தகவல் பிரிவுக்கு அழைக்கும் போது ஆங்கிலமொழியில் பேசும் திறமை இல்லா விட்டாலும் தமிழ் மொழியில் தகவல்களை தந்து வழிகாட்ட தமிழ் உத்தியோகத்தர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மார்க்கம் நகரம் உட்பட்ட யோர்க் பிராந்தியத்தில் உள்ளவர்கள் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

***• REGINAL MUNICIPALITY OF YORK COMMUNITY***
***& HEALTH SERVICE DEPARTMENT***
***HOUSING & LONG TERM CARE***
***17250, YONGE STREET***
***NEWMARKET, ONTARIO L3Y 6Z1***
தொலைபேசி - 905.830.4444
தொலைநகல் - 905.895.2189

'மாகாண வாடகை வங்கி திட்டம்' (Provincial Rental Bank Program' என்பதற்கு எப்படி விண்ணப்பிப்பது? எப்படி விண்ணப்பிப்பதனை முன் எடுப்பது? என உதவி கேட்டால் இந்நிர்வாக உத்தியோகத்தர்கள் வழிகாட்டுவார்கள்.

www.mah.gov.on.ca என்னும் மாகாண அரசின் கீழ் இயங்கும் நகரசபை வீடு விவகார அமைச்சின் (Ontario Ministry of Municipal Affairs & Housing) இணையதளத்தினுள் போய் 'Provincial Rent Bank Program'

'வாடகை வங்கி திட்டம்' என்னும் சொற்றொடரை பதிவு செய்யும்போது இத்தகவல்களை பெறலாம். ஆனால் ஒரு முக்கிய விடயம்!

குடியிருக்க ஆரம்பிப்பவர்கள் முதல்மாத, இறுதிமாத கட்டணத்தினை தந்து உதவுவார்களா? என எதிர்பார்த்தால் அதனை இத்திட்டத்திலிருந்து பெறமுடியாது. வருமானமில்லாதவர்கள் இதற்குரிய ஆரம்ப உதவி பணத்தினை சமூக உதவிபண திட்டங்களில் முயற்சி செய்யலாம்.

சமூக உதவி பணம் பெற தகுதியுடையவர்களை இரு வகையான திட்டத்தின் கீழ் சேவை வழங்குபவர்களாக பிரிப்பார்கள்.

1. வருமானம், கையில் பணம் எதுவும் இல்லாத நிலையில் சமூக உதவி பணம் அரசில் பெறுவோர். (Program Under Ontario Work)

2. உடல் இயங்க முடியாத நிலை. வேலை செய்ய முடியாத நிலையில் சமூக உதவி பணம் பெறுவோர். (Under Ontario Disability Support Program)

இவ் உடல் இயங்க முடியாத இத்திட்டத்தின் கீழ் மாதாமாதம் அரசில் பணம் எடுத்து கொண்டு இருப்பவர்களும் இவ்வாடகை வங்கி திட்டத்திலிருந்து இரு மாதவாடகைக்கு என பணம் எடுக்க முடியாது.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



வீடு, மனை, நிலம், வியாபாரம், வியாபாரக்கட்டிடம் வாங்க, விற்க அழையுங்கள்





KESH DOSANJH M.A. ECON.
Sales Representative
Cell: 416-836-9530 Office: 416 - 321-6969
Email: kdosanjh@trebnet.com
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666
*Independently owned & operated
கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது

# கருந்துளைகள் -12

எமது தாய்க் கலக்சியும் அயற்கலக்சியான அன்றோமேடா கலக்சியும் படு வேகமாக ஒன்றையொன்று நெருக்கி வருகின்றன என்றொரு குண்டினைப் போட்டிருந்தேனல்லவா! அவை ஒன்றுடன் ஒன்று மோதுமா? என்ற கேள்வி உங்களுக்குள் எழுந்திருக்கும். கூடவே எப்பொழுது அவை மோதிக் கொள்ளும்? மோதினால் என்ன நிகழும்? எமது பூமியின் கதியென்ன? உயிரினங்களுக்கு என்ன நிகழும்? இது போன்ற பல கேள்விகள் உங்களைக் குடைந்து கொண்டிருக்குமே! அவற்றிற்கான பதில்களை இன்று பார்ப்போம்.

ஆம், இரண்டு கலக்சிகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளத்தான் போகின்றன. தவிர்ப்பதற்கான ஒருவழியுமே இல்லை என்கின்றார்கள் ஆய்வாளர்கள். என்ன இந்த விஞ்ஞானிகள்! விண்கல் ஒன்று மோதி எமது பூமிக்கு ஆபத்து வர உள்ளது எனப் பயமுறுத்துகின்றார்கள்! வால்வெள்ளியினாலும் எமக்கு ஆபத்து வந்தது, இனியும் வரும் எனவும் பயமுறுத்துகின்றார்கள். இப்படியிருக்க, அடுத்த பிரச்சனையா என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறதுதான். ஆனால் இந்தப் ஆபத்தினைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இச்சம்பவம் நிகழ்வதற்கு பன்னெடுங்காலம் இருக்கின்றது என்கின்றார்கள் ஆய்வாளர்கள் அவர்களின் கணிப்புகளின்படி, இன்னமும் 500 கோடி ஆண்டுகளின் பின்னர்தான் இவை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளப்போகின்றன.

இந்த மோதலானது சடுதியில் நிகழ்ந்துவிடும் ஒன்றல்ல. இன்றில் இருந்து சுமாராக 250 கோடி ஆண்டுகளின் பின்னராக இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ள ஆரம்பிக்கும். பின்னராக முற்றாகவே அவை மோதுண்டு போவதற்கு அடுத்த 250 கோடி ஆண்டுகள் எடுக்கும் என வல்லுனர்கள் கணித்துக் கூறுகின்றார்கள். அப்படியா சங்கதி! அப்படியெனில் ஏன் இப்பொழுது எங்களைப் பயமுறுத்துகின்றாய் எனக் கேட்கின்றீர்களா? பயமுறுத்தவில்லை, விபரங்களைச் சொல்லுகின்றேன். இந்த மோதுகையின் முக்கியத்துவம் என்னவெனில், இப்படியாக கலக்சிகள் ஒன்றுடன் ஒன்று மோதுவது என்பது வான்பரப்பில் நிகழும் அரிய சம்பவமாகும். விண்வெளி விஞ்ஞானிகள் இந்த அரிய அழகிய (?) நிகழ்வினை உயர் வலுக் கொம்பியூட்டர்களில் பார்த்து மகிழ்ந்தார்கள், மகிழுகின்றார்கள். 'நான் கூறுவேனே: எங்கேயோ கேட்டேன், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று' அது போலத்தான் இதனையும் ஆய்வாளர்கள் எமக்குக் கூறுகின்றார்கள்.

எமது கதிரவன் இன்னமும் 500 கோடி ஆண்டுகளுக்குத்தான் உயிர் வாழுவான். அதன் பின்னராக உருவில் உப்பிப் போய், சிவப்பு நிறமாகி, சிவப்பு இராட்சதனாகி விடுவான். அப்பொழுதே பூமியில் உயிரினங்கள் இல்லாது போய்விடும். எனவே மனிதர்களுக்கு இந்த மோதுகையினால் ஆபத்து என்பதனைக் கருத்தில் எடுக்கத் தேவையில்லை. அல்லாமலும் கலக்சிகள்தான் ஒன்றுடன் ஒன்று மோதிப் பூமியில் மனித இனம் அழியவேண்டும் என்றில்லை. அவை மோதுவதற்கு முன்னராக நாங்களே எங்களின் முடிவுக்கு ஒருவழி செய்துவிடுவோம்.

## பேரண்டம் - 60

மில்கிவே கலக்சியும், அன்றோமேடா கலக்சியும் மோதிச் சிதறுண்டு போகப் போவதில்லை. பதிலாக ஒன்றுடன் ஒன்று இணைந்து புதியதாக, இன்னொரு பெரிய கலக்சியை உருவாக்கப் போகின்றன. தோன்றப் போகும் அந்தப் புதிய கலக்சியிற்கு புதிய பெயரையும் வைத்துவிட்டார்கள் விஞ்ஞானிகள். 'மில்கோமேடா' (Milkomeda) என்பது அப்புதிய கலக்சியின் பெயர். அன்றோமேடாவும் மில்கிவேயைப் போன்றே சுருளி வடிவிலான கலக்சிதான். எமது கலக்சியையும் விடப் பெரியது. (புதிய ஆய்வுகள் மில்கிவேயும், அன்றோமோடாவும் சம பருமனான கலக்சிகள் எனக் காட்டுகின்றன என்கின்றார்கள் சிலர்) இவையிரண்டும் இணையும் நிகழ்வின் போது, இரண்டு கலக்சிகளின் விண்மீன்களும் மீள் ஒழுங்கு செய்யப்படப் போகின்றன. அதனால் இவையிணைவதால் தோன்றப் போகும் புதிய கலக்சியானது நீள்வளைய கலக்சியாக இருக்கப் போகின்றது. இப்போது எமது மில்கிவே கலக்சியில் இருந்து சுமாராக 25 இலச்சம் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது அன்றோமேடா கலக்சி. இந்த அன்றோமேடா கலக்சியில் மாத்திரம் சுமாராக ஐயாயிரம் கோடி விண்மீன்கள் இருக்கலாம் என்கின்றார்கள். வான்பரப்பில் பெருந்தொகையில் கலக்சிகளை இனம் கண்டுள்ளார்கள். எல்லாவற்றிற்குமே பெயரிடுவதெனில் பெயர்ப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். ஏனெனில் தற்கால ஆய்வுகளின்படி, பேரண்டத்தினுள் ஐயாயிரம் கோடி கலக்சிகள் இருக்கலாம் என்பது வல்லுனர்களின் கணிப்பு. எனவே பெயர்களுக்குப் பதிலாக அடையாளங்களை இட்டு அவ்வடையாளங்களின் வழியே கலக்சிகளை இனம் கண்டு கொள்ளுகின்றார்கள், வல்லுனர்கள். அந்த வகையில் இந்த அன்றோமேடாவை M31 எனக் குறிப்பிடுவார்கள்.

இரண்டு கலக்சிகளுக்கும் மத்தியில் பெரிய கருந்துளைகள் இருக்கின்றன என்பது எமக்குத் தெரியும் கலக்சிகள் இரண்டும் இணையும்போது, கருந்துளைகளும் இணைந்து, புதியதாக பெரிய கருந்துளையை மிக்கோமேடா கலக்சியின் மத்தில் கொண்டு வரப் போகின்றன. இந்தக் கருந்துளையானது மில்கிவேயின் கருந்துளையின் பருமனையும் அன்றோமேடாவின் மத்தியில் உள்ள கருந்துளையின் பருமனையும் சேர்க்கும் பருமனைவிடப் பெரியதாக இருக்கப் போகின்றது என்கின்றார்கள்.

கருந்துளைகள் இணைவதும் கூட நேரடியான, சடுதியான நிகழ்வல்ல. கருந்துளைகள் இரண்டும் ஒன்றிணைகையில், முதலில் அவை ஒன்றையொன்று வலம் வருகின்றன. பின்னர் மெதுமெதுவாக ஒன்றை ஒன்று அண்மித்துக் கடைசியில் இரண்டும் ஒன்றாகிவிடுகின்றன. இப்புதிய கருந்துளையின் மத்தியில் திணிவு கூடியதான ஒருமம் காணப்படும். பெரிய இரண்டு கருந்துளைகள் இணைவதற்கு உதாரணமாக இந்த மில்கிவே கலக்சியினதும் அன்றோமேடா கலக்சியினதும் மோதுகையினூடான இணைவைத்தான் எதிர்காலத்தில் விஞ்ஞானிகள் காட்டப் போகின்றார்கள். அவை உண்மையில் இப்போது இணையாத போதிலும், கொம்பியூட்டரின் உதவியுடன் மாதிரி வடிவினை ஆய்வுக்காகக் காணலாம் என்கின்றார்கள், இவற்றில் வல்லவர்கள்.
இப்படியாக எதிர்காலத்தில் நிகழப் போகின்ற சம்பவங்களை அல்லது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைக் கணினியின் உதவியுடன் சரி பார்ப்பது விஞ்ஞானிகளைப் பொறுத்தவரையில் புதிய விடயமில்லை. அவர்களது உலகம் அவற்றைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளுகின்றது. எனவே சாதாரணிகளாகிய நாங்களும் அவர்களது முடிவுகளுடன் ஒத்துப் போகின்றோம்.

கருந்துளைகளின் இணைவினைக் குறிப்பிடுவதற்காகத்தான் மில்கிவே கலக்யினதும், அன்றோமேடா கலக்சியினதும் மோதுகையினைக் குறிப்பிட்டேன். அடுத்த முறையும் கருந்துளைகள் பற்றிய புதிய சுவாரசியமான விடயத்துடன் வருகின்றேன்.

- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com






கனடாவிற்கு புதியவரா? உங்கள் வெற்றிக்கு உதவும் குழந்தை கவனிப்பு தகவல்கள்,
வேலைவாய்ப்பு வளங்கள் மற்றும் பிற சேவைகள் குறித்து அறிந்துக்கொள்ளுங்கள்.

**cic.gc.ca/new 1 800 O-Canada** (1-800-622-6232) TTY: 1-800-926-9105

பிரிட்டிஷ் கொலம்பியா, மேனிடோபா மற்றும் கியூபெக்கில் இச்சேவைகள் அந்தந்த மாகாண அரசாங்கங்களால் அளிக்கப்படுகிறது.

Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

Canada

# சின்னப்பிள்ளை காதிலொரு குணுக்குட்டான்

பெண்கள்தினத்தை முன்னிட்டு யாவராலும் எடுத்தாளப்பட்ட காந்திஜீயின் வார்த்தைகள் அதிக உபயோகத்தில் வந்தன. அதாவது 'எங்கே ஒருபெண் அர்த்தஜாமத்திலும் எதுவித ஆபத்து இல்லாமலும் உலாவி வருகின்றாளோ அப்போது தான் அந்தத் தேசமே நாகரிகம் பெற்ற சமுதாயமாக விளங்கும்' என்பதாகும்.

மேல்நாடுகளுக்கு வந்தபின் எம்மிடம் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சிந்தித்துப் பார்ப்போம். வளர்முக நாடுகளில் மத்திய தர மக்களும், அடிநிலைமக்களும் தம் உழைப்பு, தம் தேவைகளுக்குமே போதுமானதோ அல்லது அரைகுறை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரியதாகவோ அமைந்திருந்ததை உணர்ந்தவர்.

பணம் தாராளமாகப் புழங்கும். புலம்பெயர் இடத்திலே நிறைவேறாத ஆசைகளைத் திருப்தி செய்வதுபோல கலியாணவீடு, கோயில்கள், மரண வீடுகளுக்குக் கூட கைநிறைய காப்புகள், சங்கிலிகள் போன்ற நகைகளால் நிரப்பி சர்வ அலங்கார பூஜிதைகளாக வலம் வருகிறார்கள்.

மரண நிகழ்வுகளில் ஊரில் கூட வெள்ளை அல்லது வெளிர்நிற சேலை மட்டும் அணிந்து பொட்டு வைக்காமல் ஓரிரு நகைகளோடு செல்வார்கள். இங்கே சிலர் மாத்திரம் மேல் நாட்டுப் பாணியில் கறுப்புடை அணிவார்கள். மற்றர் ஏன் எளிமையாக வரமுடிவதில்லை.

நிறைந்த வாசிப்பாலும் அனுபவத்தாலும் மட்டுமே பண்பட்ட நிலையான அறிவு தொழிற்படும். இதனைப் பட்டறிவு மூலம் பகரலாம்.

கிராமப் பாடசாலையில் படித்தபோது மூன்று சோடி தங்கக்காப்பு, சங்கிலி, பட்டுப்பாவாடை ஒட்டியாணம் இத்தியாதி. நற்பண்புகள் வகுப்பு முதன்மை என்பவற்றால் வகுப்புகளுக்குத் தலைமை. நண்பிகளைத் தேடிக் கொள்வதில் தோல்வி. யாவரும் எட்டவே நின்று கொள்வர். வீட்டிலோ அயல் சிறுவர்களோடு சேர முடியாது. தறுதலைக் கூட்டமாம்.

சித்தப்பாவின் மகனும் நானும் தான் சேர்ந்து விளையாடினாலும், படித்தாலும் எங்கே போனாலும்.

சுதந்திரப்போராட்டம் இந்தியாவில். மகாத்மாவின் அகிம்சையை பின்பற்றி யாழில் ஒரு வாலிபர் காங்கிரஸ். எமது அதிபரே இடையாத்து மங்களம் சூடாமணிஜயர் எனும் இந்தியத் தமிழர். கதர்தான் உடுப்பார். அவரது அழைப்பின்பேரில் மகாத்மாகாந்தியின் அகிம்சை, தீண்டாமை, சுதந்திரம் பற்றி வந்து பொதுமக்களையும் அழைத்து கூட்டங்கள் நடைபெறும். ஏதாவது எழுதித்தந்து பாடா-மாக்கி மேடையில் பேசும் சந்தர்ப்பம் அடிக்கடி கிடைக்கும். சிறுபிள்ளை பேசுகிறதே என மக்கள் தங்கள் பிள்ளைகளை எமது பாடசாலையில் சேர்த்துவிடுவர். பேசும் அன்று மட்டும் பருத்திபாவாடை, சட்டை போடப்படும். ஒட்டியாணம் கட்டுவதில்லை.

கொள்கைகள் நன்றாகப் புரிந்ததும், காப்புகளையும் கழற்றப்பிடிவாதம். தந்தையின் ஒத்தூதலோடு கழற்றினாலும் ஆச்சியில் 'மூளி' ஆகக்கிடக்கு என்று ஒருசோடி கையில் தங்கியது.

தோழிகளின் நட்பைப் பெறுவதற்காக ராஜகுமாரி மட்டத்திலிருந்து கீழிறங்கி நன்றாகப் பழகியதால் நட்புகள் கிடைத்தன.

சிறுவயதில் பாடசாலையின் முன்னால் எங்கள் வர்த்தகக் கட்டிடத்தில் ஒரு பகுதியில் ஓர் அடைவுகடை இருந்தது. உடனடித் தேவைகளுக்கு கையிலே காசு இல்லா விட்டால் தங்கள் நகையை அடைவு வைத்து காசை எடுத்து வைத்தியசாலைக்கோ எங்கோ போகலாம். காசு சேர்ந்தவுடன் திருப்பிக் கொடுத்து நகையைப் பெற்றுக்கொள்ளலாம் என எனக்குப் புரியவைக்கப்பட்டது.

பதினொரு வயதாக இருக்கும்போது வீரகேசரி பாலர் வட்டாரத்தில் 'பெண்களுக்கு ஆபரணம் அவசியமா' எனும் கட்டுரைகள் கேட்கப்பட்டிருந்தது. எட்டாம் வகுப்பு மாணவரை ஆசிரியர் எழுதவைத்தார். வகுப்பு நடுவே மறைப்புகள் இல்லை. 6ஆம் வகுப்பில் வேலைமுடித்து இருந்தவளுக்கு அதை எழுதிப்பார்க்க வேண்டும் என்ற ஆசை. எங்கள் ஆசிரியர் அதை வாங்கிப் பார்த்திட்டு ஒரு கடித உறையுள் வைத்து முகவரி எழுதி கொப்பரைக் கொண்டு முத்திரை ஒட்டித் தபாலில் சேர்த்துவிடு என்றார்.

பத்திரிகை வந்ததும் கட்டுரைகளில் இரண்டு பிரசுரமாகியிருந்தன. அவசியம் என்பது ஒன்று, அவசியமில்லை என்பது மற்றது. 'கவலைப்படாதை, நீ சின்னப்பிள்ளைதானே' எனத் தாயார் கூறவும், வழக்கத்தைவிட நீளமாக ஆசிரியர் பெட்டியடிச்சுப்போட்ட விடயத்தை வாசித்தோம். மிகவும் பாராட்டுக்குரிய கட்டுரை என எமது கட்டுரை வந்திருந்தது. ஓரளவு அவசியம் என்றெழுதப்பட்ட இக்கட்டுரையில் ஒன்றிலும் காணமுடியாத புதியவிடயம் கிடைத்தது. பணக்காரர் அல்லாதவர்களுக்கு, அவசரம் ஆபத்து நேரங்களில் அடைவு வைத்து உபயோகிக்க உதவும் என்பதே'

இந்த சுயபுராணம் நமது முதலாவது கட்டுரையே ஆபரணம் பற்றியது தான் என்பதற்கே. சாரா எனும் சரவணமுத்து, நாவற்குழியூர் நடராஜன் இருவரதும் கட்டுரைத் தொகுதிகளில் இந்தக்கட்டுரை எழுதிய ஆண்டு, பத்திரிகை என்பவற்றோடு தாம் எழுதிய கட்டுரை சேர்த்திருந்ததைக் கண்டபோது எம்மிலும் சில வருடங்கள் மூத்தவர்களான இவர்களும் பங்குபற்றி இருந்தார்கள் என அறிய நேர்ந்தது. அளவால் சிறிய அக்கட்டுரையைப் பேணிவைக்க வேண்டும் என எனக்கும் தெரியவில்லை குடும்பத்தில் யாவருக்கும் பெரிதாகப்படவில்லை.

பதின்மூன்று வயதளவில் தான் மகாத்மாகாந்தி ஜீ அறிமுகம். வயதுக்கு வந்ததும் பெண்கள் விடுதிப்பாடசாலைக்களுக்கு அனுப்பப்படுவார்கள். அல்லது வீட்டில் மறித்து விடுவார்கள். இளவாலை கன்னியர் மட இங்கிலிசுப் பாட-சாலை நிறைய மாற்றங்களை ஏற்படுத்தியது. தோடு தவிர வேறு எந்த நகையும் போடக் கூடாது. வெள்ளை சீருடை, கழுத்துப்பட்டி (Tie), வெள்ளைக்காலுறை சப்பாத்து.

முதலில் கஷ்டமாக இருந்தாலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. நடிகைகள் போல நடைஉடைபாவனைகளை நகல் பண்ணிய காலம் கழிந்து எளிமையான உடை; உறுதியான நடை; பிறர்நலம் முன்னிறுத்தி தன்னலத்தை பின்தள்ளல்; ஆங்கில செம்மொழி இலக்கியங்களில் ஈடுபாடு; தமிழ் நூல் எதுவுமே அங்கே கிடையாது. நகை ஆசையும் போய்விட்டது. உலகம் பரந்து விரிந்தது. கிறிஸ்துவ மதம் பற்றிய வரலாறு தத்துவம் என்பன ஆதியோடந்தமான அறிவு வந்து சேர்ந்தது. ஆனால் சைவம் பற்றிய தத்துவ அறிவு இல்லை. வழிபாட்டு முறையிலும் கும்பல் இடபாடு போன்ற நாகரிகத்தனமற்ற செயற்பாடுகளிலும் சீர்திருத்தம் வேண்டும் எனும் எண்ணம். விடுதி வாழ்க்கை தன்னம்பிக்கையையும் வளர்த்திருந்தது.

பள்ளிவாழ்க்கை முடிந்த பின் தமிழறிஞர்கள் நூல்கள் கரத்தெட்டின. பரந்த உலகில் மேடைகளும் வரவேற்றன. அப்போது தான் காந்தி ஜியின் கூற்றைத் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினோம். நகை அடுக்கித் திரிவது கள்வரைக்கவரும். கவர்ச்சியான உடை நடை காமுகரை ஈர்க்கும். இவற்றைத் தவிர்த்தால் ஓரளவு விடுதலை கிடைக்கும். குற்றச் செயல்களைத் தவிர்க்கலாம். அதன்பின் பேசினாலும் எழுதினாலும் தாரக மந்திரம்போல் இருவிடயங்கள் புகுத்தப்படும். ஒன்று பாரதியாரும். நாமக்கல் கவிஞரும் கூறிய அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு. அடுத்தது 'கல்லையும் உலோகங்களையும் கட்டித் தூக்கிக் கொண்டு சுமைதாங்கிளாய் உலாவந்தால் கள்வனோடு, காமுகனும், கட்டாயம் விட்டுவைக்கான். கள்ளனே காமுகனாகவும் மாறி விடுவான்.'

எண்பதுகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி படித்துக்கொண்டிருந்தபோது வீரகேசரியில் ஒரு கட்டுரை வந்தது. கவர்ச்சிகரமான தலையங்கம் ஒன்றை ஆசிரியரே இட்டிருந்தார். 'சின்னச் சின்ன மூக்குத்தியாம்'. அந்தநாட்களிலே மூக்குத்தி நாகரிகமாக வருகிறது. 18வயதுக்கு மேற்பட்டோர் எல்லோரும் மூக்கைக்குத்தி பேசரி போடத்தொடங்கியிருந்தனர். அத்தோடு காற்சங்கிலியும் பூணத் தொடங்கிவிட்டனர்.

கட்டுரை ஒரு மகளுக்குத் தாய் எழுதும் கடிதம்போல அமைந்திருந்தது. 'ஐம்பதுகளில் மூக்குக்குத்துதல் என்றால் எஜமானனுக்கு அடிமையாக்கும் மூக்கைக்குத்திப் பூட்டிய நாணயக்கயிறு எனவும் அதேபோல் காலுக்கு விலங்கிட்டு கட்டுக்கொடியில் அகப்பட்ட அடிமைகள் எனவும் கூறி இவையெல்லாம் பெண்களை அடிமைப்படுத்தும் கால் விலங்கு, கைவிலங்கெனச் சொல்லி நாம் கழற்றி எறிந்த மூக்குத்தியும் காற்சங்கிலியும் திரும்பிவர என்ன அவசியம். மீண்டும் ஆதிக்கத்துள் அமிழ்ந்து விடவா? என்று கேட்கப்பட்டிருந்தது.

மறுநாள் பேராசிரியர் சிவத்தம்பி 'என்ன எங்கடை ஆசிரியர் அறையையே உசுப்பி விட்டீர்களே! எனச் சிரித்துக் கொண்டே சொல்லிப் போனார். இன்னொரு பெண் விரிவுரையாளர், 'நேற்று முழுவதும் உங்கள் கட்டுரைதான் எல்லார் வாயிலும்' என்றார். இருநாட்களின்பின் காரைக் கொண்டு போய் நிறுத்தும் மரத்தின் அருகில் கொஞ்ச மாணவிகள் நான் இறங்கவும் எம்மைச் சூழ்ந்து கொண்டு மகிழ்ச்சியுடன் உறவாடினார்கள். பேராசிரியர் கைலாசபதி தான் தமக்குச் சொன்னவராம், 'இந்த எழுத்தாளரை இங்கேயே பார்க்கலாம். அந்த மரத்தின் கீழ்த்தான் காரை விடுவார். 2 - 3 மணிக்கு வருவார்' என்றாராம்.

காணி உறுதி பற்றிப் பேச பேராசிரியர் வித்தியானந்தன் வீட்டுக்கு சென்றபோது ஒரு சிறு சிரிப்போடு 'தமிழ்த்துறை அல்லாதவர்களும் தேடி வாசிக்கிறார்களாம். எழுத்து, நடை எல்லாவற்றிலும் ஒரு அழகு, புதுமை இருக்கிறதுதான். ஆனால் தமிழர் மரபுடை உடைத்தெறிதல் பற்றி.... கவனமாயிருக்க வேண்டும்' என்றார். ஏதோ சொல்ல வாயெடுத்தேன். 'சொல்லுங்கோ, சொல்லுங்கோ' என்றார். நான் மௌனித்து விட்டேன். 'பரவாயில்லை சொல்லும், சந்தேகம் ஏதுமாயின் தீர்க்கலாம்' என்றார். பட்டென்று கேட்டேன். 'மரபின்படி ஆண்கள் எல்லாம் ஏன் கடுக்கன் போடுவதில்லை. முன்மண்டை வழித்து உச்சியில் கொண்டை போடுவதில்லை.' சிறிது மௌனத்தின் பின் 'அதுவும் சரிதான்' என்றொரு முறுவலோடு கூறிவிட்டு போன காரியத்தைத் தொடத் தொடங்கினார். இது திருந்தாது என நினைத்தார் போலும்.

வள்ளலார் இராமலிங்க அடிகளின் சமரச சுத்த சன்மார்க்க நெறியில் ஈர்க்கப்படும்போது அடிகளாரின் கொள்கைகளுள் சில ஏற்புடையதாயின. கடவுள் ஒருவரே. அவரை ஜோதிருபமாக வழிபடவேண்டும் என்பதோடு சிறுதெய்வ வழிபாடு கூடாதென்றார். மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிய வேண்டும். காது குத்துதல், மூக்குக் குத்துதல் வேண்டாம். 'கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப் போகவேண்டும்' எனக் கூறும் அடிகளார் காது, மூக்குகளில் துளையிடுவதை விரும்பவில்லை. மனிதர்கள் காது மூக்குகளில் பொத்தல் செய்து நகை அணிய வேண்டுமானால் வேண்டிய எல்லாவற்றோடும் எம்மைப் படைத்த கடவுள் காதிலும் மூக்கிலும் இரண்டு பொதல்களோடு படைத்திருக்கமாட்டாரா' எனக் கேட்கிறார். இதுவும் நியாயமாகப்படுகிறது. மகாகவி பாரதியார் கூட காது வளர்த்தல் பற்றி ஒரு கட்டுரையே எழுதியுள்ளார்.

நகையாசையை விட்டுவிடுங்கள் எனச் சொல்வது சிறிது சிரமம் தான். எனினும் ஆசையை மட்டுப்படுத்துங்கள். அதுவே உலக சமாதானத்துக்கு வழியாகும் என Ceiling on desire சொல்லும் மகான்கள் அவதாரங்களின் வழி நில்லுங்கள்.

அப்போது பெண்கள் சுதந்திரம் எத்தகைய ஆதிக்கங்களுக்கும் அப்பாற்பட்டு மனித நேயத்தோடு செயற்படும். நிறைந்த வாசிப்பு ஒருவரைப் பூரண உயிரி ஆக்கும் என்பதை மனதில் வைத்து எடுத்த கருமத்துக்கான கருத்துக்களை உள்வாங்கி ஏற்பதை ஏற்று மற்றவற்றைத் தள்ளி ஒரே இலட்சியத்துடன் செயற்படுக.



**வள்ளிநாயகி இராமலிங்கம்**




யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்

• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# காளையார் கோயில் - யுத்தபூமி

இந்தியாவிலேயே மூன்று சிவன் சந்நிதிகள், அவர்களுக்கு மூன்று அம்பிகைகள் என்று இருக்கும் ஒரே கோயில், ஆங்கிலேயர்களை எதிர்த்து வீரமரணம் எய்திய மருது சகோதரர்கள் ஆண்ட பூமி, பதின்மூன்று மற்றும் பதினான்காம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர், சேக்கிழார், அப்பர், சுந்தரர் மற்றும் அருணகிரிநாதர் போன்றோர் ஆண்டவனைப் பாடி அருள் பெற்ற தலம், நாயன்மார்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன் காளை உருவில் தன்னைக் காட்டிய தலம் என பல பெருமைகள் கொண்டது காளையார்கோயில். நம் இம்மாத சுற்றுலா தலம்.

காரைக்குடியிலிருந்து பிள்ளையார்பட்டி செல்லும் சாலையில் சென்று, அதிலிருந்து திருப்பத்தூருக்கு பிரியும் சாலையில் சென்றால் மானகிரி என்ற ஊர் வருகிறது. அதைக் கடந்து மெயின்ரோட்டிலேயே சிறிது தூரம் சென்றால் கள்ளலுக்கு அடுத்து இடதுபுறமாய் காளையார்கோயில் என்ற தமிழக அரசு நெடுஞ்சாலைத்துறையின் காளையார் கோயில் என்ற தகவல் பலகை நம்மை வரவேற்கிறது. அங்கிருந்து பார்க்கவே, காளையார் கோயிலின் பிரமாண்டமான கோபுரம் நம் கண்ணில் படும். ஒரு காலத்தில் மிக அடர்த்தியான காடாக இருந்த இடம், இப்பொழுது வெட்ட வெளியாக விரிந்து கிடக்கிறது



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 74

## வழிப்போக்கன்

காளையார்கோயிலின் மூலவரைக் காளீசர் என்றும், அம்மனைச் சொன்னவல்லி (சொர்ணவல்லி) என்றும் அழைக்கிறார்கள். கோயிலின் உள்ளே, அருகருகே, மூன்று கருவறைகள் உள்ளன. காளீசருக்கு ஒருபக்கம் சோமேசரும், இன்னொரு பக்கம் சுந்தரேசரும் இருக்கிறார்கள். இவர்களுக்கு நாயகியாய்ச் சுந்தர நாயகியும் அங்கயற்கண்ணியும் இருக்கிறார்கள். ஆக, பழங்காலத்தில் மூன்று கோயில்களாக இருந்தது சேர்ந்து பிறகு ஒரு பெருங்கோயிலாய் மாறியிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்கள் கருத்து. இதில் சொர்ணகாளீஸ்வரர் தான் பிர-தானம். அஷ்டமாகாளிகள் காளையார்கோயிலை சுற்றி அருள்புரிவதால் காளிகளுக்கு ஈசனாய் அமர்ந்தவர் காளீஸ்வரர் ஆனார் என்கிறார்கள். ஊர் மட்டத்திலிருந்து நான்கு அடி கீழே தங்கக்கவசம் சாத்தப்பட்டு துளியூண்டு இருக்கிறார். காளையார்கோயில் காளீஷ்வரரை வணங்கினால் பிள்ளைபாக்கியம் கிட்டும் என்பது ஐதீகம்.

பிரம்மாண்டமான காளையார்கோயிலை ஆற அமர சுற்றி வர சுமார் அரை நாளாவது ஆகும். நாங்கள் செல்லும் போது, அங்குள்ள குருக்கள் மிகவும் பொறுமையாக ஒவ்வொரு சந்நிதிக்கும் நம்மை அழைத்துச்சென்று புராணம் சொல்லி, தேவாரம் பாடிக் காட்டினார். அந்த அனுபவமே இனிமை யாய் இருந்தது. உங்களுக்கும் நேரம் சிறப்பாக இருந்து, அங்கிருக்கும் குருக்களுக்கும் நேரம் இருந்தால், உங்களுக்கும் அந்த இனிமையான அனுபவம் கிட்டும்.

சிற்பக் கலை சிறந்து விளங்கும் இந்தக் கோயில் பெருமாண்டம், அனைவரும் பார்க்க வேண்டியது. இவற்றில் பெரும்பான்மையானவை பாண்டிய மன்னர்களில் ஜடாவர்மனாகிய திரிபுவனச்சக்கர வர்த்தி சுந்தரபாண்டிய தேவர், மாறவர்மன், திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவன், மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவர் ஆகியோர் காலங்களிலும், வாண அரசர்களில் சுந்தரத்தோளுடையான் மாவலி வாணராயர் காலங்களிலும் செதுக்கப்பட்டிருக்கிறது.

காளீஸ்வரர் சந்நிதி முன் உள்ள கோபுரம் மற்றும் சுந்தரேஸ்வரர் மீனாட்சி ஆலயம் வரகுண பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது. கோயிலுக்குத் தெற்கே உள்ள ஆனைமடு ஊருணி மிகவும் பெரியது. மதுரை வண்டியூர் தெப்பக்குளம் அளவிற்கு அது இருக்கும்.

காளையார்கோயிலில் இறைவன் காளை வடிவங்கொண்டு கையில் பொற்செண்டும் திருமுடியிற் சுழிதும் கொண்டு சுந்தரருக்குக் காட்சி தந்தார் என்பது நம்பிக்கை. பண்டாசுர வதத்தின் பின் காளி இங்கு வந்து காளீசுவரை வழிபட்டு கரிய உருவம் மாறி சுவர்ணவல்லியாகி இறைவனை மணந்தாள் என தல வரலாறு கூறுகிறது. நந்தியிடம் சாபம் பெற்ற ஐராவதம் இங்கு வந்து ஆனைமடு தீர்த்தத்தில் நீராடி சாபம் நீங்கப் பெற்றதாகவும் வரலாறு உண்டு.

நிகழ்காலத்திற்கு மட்டுமல்ல, பழங்கால தமிழக வரலாற்றிற்கும் காளையார்கோயிலுக்கும்கூட பெரும் சம்பந்தமுண்டு. திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும் சுந்தரர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் இத்தலத்திற்கு இருக்கின்றன. சம்பந்தரும் சுந்தரரும் அருணகிரிநாதரும் காளையார்கோயிலில் பாடியிருக்கிறார்கள். பதினோராம் திருமுறையிலும் திருவருட்பாவிலும் இக்கோயில் சொல்லப்பட்டிருக்கிறது.

காளையார்கோயில் என்ற ஊர் பெயர், சங்க காலத்தில் கானப் பேரெயில் என்று வழங்கப்பட்டிருக்கிறது. கானத்தில் இருக்கும் பெரிய கோட்டை கானப் பேர் எயில். அதாவது, சோழ நாட்டில் இருந்து, ஈழம் செல்ல ஒரு பக்கம் ஆதி சேது என்னும் கோடியக் கரை, இன்னொரு பக்கம் மதுரை வழியாய் இராமேச்சுரம் என இரண்டு வழிகள் இருந்திருக்கின்றன. இரண்டாவது வழியில், கடலாழம் அன்றைக்கு மிகவும் குறைவு, கிட்டத்தட்ட ஓராள், இரண்டாள் உயரம் தான் பல இடங்களில் இருக்கும், வெகு எளிதில் ஈழம் போய்விடலாம். மதுரையில் இருந்து இராமேச்சுரம் போக, காளையார் கோவில் கானத்தைக் கடக்க வேண்டும். கானப்பேரை ஆண்டு வந்த கோதைமார்பனை வீழ்த்தி கானப் பேரெயிலைப் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி கடந்ததாக சங்க இலக்கியம் சொல்கிறது. கானப்பேரெயிலைச் சுற்றி இருக்கும் காட்டின் அடர்த்தி தமிழக வரலாற்றில் பெரிதும் பேசப்பட்டிருக்கிறது. பேரரசுச் சோழர் காலத்தில், இந்தக் காடு பரந்து பட்டு புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் வரை இருந்திருக்க வேண்டும் என்கிறார்கள். கானத்தின் வடகிழக்கு எல்லையாய் கான் நாடு காத்தான் (இப்போது கானாடுகாத்தான்) என்னும் பெயர் கொண்ட ஊர் இருந்திருக்கிறது. இராசராசனும் இராசேந்திரனும் இன்னும் பலரும், தங்களின் பெரும்படையை கானபேரெயிலின் வழியே

தொடர்ச்சி 25ஆம் பக்கம்



# “வாழ்க்கைக்குள்ள இருந்து கதை வரணும்”

## சந்திப்பு: இயக்குநர் தாமிரா

நறுக்குத் தெறித்தாற் போன்ற மென்மையான கவிதைகளால், ஏற்கெனவே தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர், தாமிரா. எழுத்தாளர், இப்போது இயக்குநர் அவதாரமெடுத்திருக்கிறார். தமிழ் சினிமாவின் மிக முக்கியமான தூண்கள் என்று கருதப்படும் பாலசந்தர், பாரதிராஜா இருவரையும் வைத்து இவர் இயக்கிவரும் ‘ரெட்டைச் சுழி’ மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அவரை சந்தித்துப் பேசினோம்.

கேள்வி: உங்களைப் பற்றி நீங்கள் சினிமாவுக்கு வந்த பின்னணி பற்றிச் சொல்லுங்களேன்?

தாமிரா: பொதுவா, சினிமாவுக்கு நான் ஏன் வந்தேன்னு எல்லா இயக்குநர்களுமே ஒரு காரணம் சொல்லுவாங்க. எனக்கு என்ன காரணம்னு சொல்லத் தெரியல. ஆனா, அதுக்கு லேசா ஒரு பின்னணி இருக்குன்னுதான் நெனைக்கிறேன். 60-கள்ல என்னோட அப்பா, திருநெல்வேலியில இருந்தப்போ சினிமாவுல பாடகரா ஆகணும்னு முயற்சி செஞ்சுக்கிட்டு இருந்தார். என்னோட அப்பாவோட சித்தப்பா எ.ஃ.ப். நாகூர்னு ஒருத்தர் இருந்தார். அவர்தான் ‘ஜெனோவா’ படத்தோட இயக்குநர். அப்போ அப்பாவுக்கு வேண்டிய இன்னொருத்தர் கேமராமேனா இருந்தார். மஸ்தான்னு பேரு. ஆனா, அப்பாவால அவர் நெனைச்ச மாதிரி பாடகரா ஆக முடியல. அப்புறம் பாம்பே போய் செட்டில் ஆயிட்டார். அப்பா, சினிமா வேணாம்னு முடிவு செஞ்சதுக்கு அப்புறம்தான் நான் பொறந்தேன். ப்ளஸ் டூ படிக்கிறப்போவே நடிப்புலயும் எழுத்துலயும் ரொம்ப ஆர்வம் வந்துடுச்சு. என்னோட நண்பர்கள் எல்லாரும் சொல்லுவாங்க, ‘பேசாம நீ சினிமாவுக்குப் போயிடுறா!’ன்னு. நான் பி.எஸ்.சி. படிச்சேன். அப்புறம் மதுரை காமராஜ் யுனிவர்சிட்டியில எம்.ஏ. ஜர்னலிசம் படிச்சுக்கிட்டு இருந்தேன். ஆனா, உள்ள ஒரு பக்கம் எப்பிடியாவது சினிமாவுக்குப் போயிடணும்னு தோணிக்கிட்டே இருந்துச்சு. சினிமாவுக்கு வர்றவங்க, வரும்போதே, ‘இந்த டைரக்டர்கிட்ட எப்பிடியாவது அசிஸ்டெண்ட்டா சேந்துடணும்’னு ஏதாவது ஒரு டைரக்டரை மனசுல வச்சுக்கிட்டு வருவாங்க. ஆனா, நான் வரும்போதே, ஒரு படத்தை டைரக்ட் பண்ணணும்கற முடிவோட வந்தேன். அது எவ்வளவு தப்புன்னு பின்னால தெரிஞ்சுது. ஆனா, என்கிட்ட அடிப்படையா எழுத்தும் கிரியேட்டிவிட்டியும் இருந்துச்சு. ஆனா, நானும் 90-க்கு மத்தியில பலபேர்கிட்ட அசிஸ்டெண்ட்டா சேர்றதுக்கு முயற்சி பண்ணினேன். நான் நெறையா பேசுவேன். நெறை யா பேசுறவங்களை பொதுவா யாருக்கும் பிடிக்காது. ஒரு கட்டத்துல, என்னால யார்கிட்டயுமே அசிஸ்டெண்ட் டைரக்டரா சேர முடியல. சரி, நமக்கு சினிமா செட் ஆகாதுன்னு, என் அப்பா 60-கள்ல எடுத்த முடிவை 90-களின் மத்தியில நானும் எடுத்தேன். ஊருக்குப் போய் கல்யாணம் பண்ணி செட்டில் ஆயிட்டேன். விவசாயம், பால்பண்ணை, டீக்கடைன்னு என்னென்னவோ செஞ்சேன். இப்பிடியே மூணு வருஷம் போயிடுச்சு. எப்பயாவது சினிமா பாக்குறப்போ, மனசுல எதையோ எழந்துட்டோமேன்னு தோணும். ஒரு நாள், என் மனசைப் புரிஞ்சுக்கிட்ட என் நண்பன், ‘சென்னைக்குப் போயிடேன்!’னு சொன்னான். அவனோட திருமண மோதிரத்தை அடகு வச்சு, சென்னைக்குப் போறதுக்கு காசும் குடுத்தான். மத்தவங்க நம்ம மேல வச்சிருக்கற நம்பிக்கையை நாம நம்ம மேல வைக்கலைன்னா எப்பிடி? சென்னைக்கு வந்தேன்.

கேள்வி: மறுபடியும் சென்னைக்கு வந்து அசிஸ்டெண்ட் டைரக்டராகறதுக்கு முயற்சி பண்ணினீங்களா?






## நேர்காணல் - பாலு சத்யா

தாமிரா: இப்போ நான் யார்கிட்டயும் அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆகறதுக்கு முயற்சி பண்ணலை. ‘சேது’ படம் ரிலீஸ் ஆகியிருந்த நேரம். ‘குங்குமம்’ பத்திரிகைக்காக விக்ரமை ஒரு இண்டர்வியூ பண்ணினேன். அவரோட நல்ல காண்டாக்ட் ஏற்பட்டுச்சு. ஒரு நாள், அவர்கிட்ட ‘என்கிட்ட ஒரு ஸ்கிரிப்ட் இருக்கு. கேக்குறீங்களா?’ன்னேன். அவரும் கேட்டார். அவருக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அப்போ, விக்ரம், சேரன், சீமான் எல்லாரும் அடிக்கடி சந்திச்சு பேசிப்பாங்க. அப்போ, சேரன் ‘ஆட்டோகிராப்’ எடுக்கற முயற்சில இருந்தார். விக்ரம், சேரன்கிட்ட என் ஸ்கிரிப்டைப் பத்தி சொல்லியிருக்கார். நான் சேரனைப் பாத்து, ‘ஆட்டோகிரா.ஃ.ப்’ல அசிஸ்டெண்ட்டா ஒர்க் பண்றேனேன்னு கேட்டேன். சேரன் சொன்னார்: ‘நீ போய் எதுக்குப்பா அசிஸ்டெண்ட்டா ஆகணும்? போய் படம் பண்ற வழியப் பாரு! உனக்கு என்ன உதவி வேணும்னாலும் செய்யறேன்’னு சொல்லிட்டார். அதே சமயம் பாலசந்தர் சார் குங்குமத்துல வந்திருந்த என்னோட ஒரு கதையைப் படிச்சு கூப்பிட்டு விட்டார். ‘ரொம்ப நாள் கழிச்சு ஒரு நல்ல கதையைப் படிக்கிறேன். இதை சீரியலுக்கு ஸ்கிரிப்ட் பண்ணித் தர முடியுமா?’ன்னு கேட்டார். நான் ரெண்டு நாள் டைம் கேட்டேன். ஸ்கிரிப்ட் பண்றதை இவ்வளவு சாதாரணமா நெனைச்சிட்டே னேன்னு அவருக்குத் தோணியிருக்கும் போல. ‘மொத்தம் 200 நிமிஷமாவது வரணும்ப்பா’ன்னாரு. நான் சரின்னு சொல்லிட்டு வந்துட்டேன். ரெண்டு நாள் கழிச்சு ஸ்கிரிப்டை எடுத்துட்டுப் போனேன். ‘ரொம்ப நல்லா இருக்கு’ன்னு சொன்னார். ‘என்கிட்ட ஸ்கிரிப்ட் ரைட்டரா சேந்துடுறியா?’ன்னு கேட்டார். சரின்னேன். கிட்டத்தட்ட எட்டு வருஷம், அவர் பண்ணின எல்லா சீரியலுக்கு ஸ்கிரிப்ட் எழுதினேன். அவரோட ‘பொய்’ படத்துல வசனம் எழுதினேன். ஒரு கட்டத்துல இப்பிடி சீரியலுக்கு எழுதறது போதும்னு தோணிச்சு. நான் சினிமாவுக்கு வச்சிருந்த கதையை ரெடி பண்ண ஆரம்பிச்சேன். யாரைக்கேட்டாலும் ‘கதை ரொம்ப நல்லாருக்கு’ன்னு சொன்னாங்க. அப்பதான் எனக்கு பாரதிராஜா சாரையும் பாலசந்தர் சாரையும் நடிக்க வச்சா என்னன்னு தோணிச்சு. ஆனா, சரியான வாய்ப்பு கிடைக்கல. ஒரு கட்டத்துல, ‘சரி மறுபடியும் சீரியல்தான். இல்லன்னா, வேற ஸ்கிரிப்ட் பண்ணணும்’னு முடிவு எடுத்தப்போதான், இயக்குநர் ஷங்கர் கம்பெனியில இருந்து கூப்பிட்டு விட்டாங்க. ஆனா, அப்போ வரைக்கும் பாரதிராஜா சாரோ, கே.பி. சாரோ என் படத்துல நடிக்கறதுக்கு சம்மதிக்கலை. கொஞ்சம் முயற்சி செஞ்சா முடியும்னு தோணிச்சு. ஷங்கர் சார் கதை கேட்டார். அவருக்குப் பிடிச்சு போச்சு. அப்புறம் கே.பி. சார்கிட்ட சொன்னேன். ‘நீங்க நடிச்சா இது படம். இல்லன்னா, இந்தப் படமே இல்லை’ன்னேன். அவர் சம்மதிச்சாலும் பாரதிராஜா சார் சம்மதிக்கணுமே! அவர்கிட்டயும் முயற்சி பண்ணினேன். அவர் பிடி குடுத்தே பேசலை. ஒரு நாள் கவிஞர் வைரமுத்துவைப் பாத்து இந்தக் கதையைச் சொன்னேன். அவர் ‘நல்லாருக்கு. நான் பேசறேன்’னார். ஷங்கர் சார்கிட்ட, ‘இந்தக் கதையை இவர்கள் நடித்தால் வரலாறு. இல்லையென்றால், இது வெறும் திரைப்படம்’னு சொன்னார். அப்புறம் ஷங்கர் சார், பாரதிராஜா சார்கிட்ட பேசினார். அவர் மட்டுமில்ல, வைரமுத்து, இளையராஜா, அவரோட ஆத்ம நண்பர் வஸந்த பவன் ரவி, கே.பி. சார் எல்லாரும் பேசறாங்க. அவருக்கு ஒரு பக்கம் ஆச்சரியமும், இன்னொரு பக்கமும் எரிச்சலும் வந்துச்சு. ‘இது இவனோட முதல் படம். இத்தனை பேரு இவனுக்காக பேசறாங்களே!’ன்னு. அப்புறம் ஒரு வழியா நடிக்க சம்மதிச்சார். கிட்டத்தட்ட ஏழு மாச காலம் இவங்க ரெண்டு பேரையும் நடிக்க வைக்கறதுக்கே போயிடுச்சு.

கேள்வி: ‘ரெட்டைச்சுழி’யோட கதை என்ன?

தாமிரா: அறுபது வயசைத் தாண்டிட்டாலே எல்லாருமே குழந்தைகள்தான். அது மாதிரி இரண்டு பெரியவர்கள். நாற்பது வருஷப் பகையோட இருக்கற பெரியவர்கள். அவங்களுக்கு நடுவுல இருக்கற சிறுபிள்ளைத் தனமான சேட்டைகள்தான் கதை.

கேள்வி: தமிழ் சினிமாவுல இரண்டு பெரிய, முக்கியமான இயக்குநர்களோட வேலை பாக்கறது பெரிய அனுபவம். உங்களோட அனுபவம் எப்படி?

தாமிரா: ரெண்டு பேரையும், ரெண்டு ஜாம்பவான்னு நினைச்சா, உங்களால வேலை பாக்க முடியாது. தடுமாற்றம், பயம் எல்லாம் வந்துடும். கே.பி. சார்கிட்ட எட்டு வருஷம் இருந்திருக்கேன். பாரதிராஜா சார்கிட்ட ஏழு மாசமா பழகியிருக்கேன். அவங்க ரெண்டு பேருக்குமே என்னோட எழுத்து பிடிக்கும். அவங்க ரெண்டு பேர் கிட்டயும், உரிமையோட பேசற தன்மையும், நெருக்கமும் இதை சாத்தியமாக்கிடுச்சு. ஒரு நாள் ஷூட்டிங்ல பெரிய கூட்டத்தோட வேலை பாக்க வேண்டியிருந்துச்சு. அன்னிக்கி ஷூட்டிங்ல வேலை செஞ்ச முதல் ஆள், பாரதிராஜா சார். கூட்டத்தை கட்டுப்படுத்தறாரு, எல்லா வேலையையும் இழுத்துப்போட்டுக்கிட்டு செய்யறாரு. நான் அவர்கிட்ட போனேன். ‘ஏன் நீங்க வேலை பாக்கறீங்க? பேசாம கேரவன்ல போய் உக்காருங்க!’ன்னேன். ‘ஏன், நான் உன்கிட்ட அசோசியேட்டா ஒர்க் பண்ணக்கூடாதா?’ன்னார் அவர். அப்போ இளவரசு ஸ்பாட்ல இருந்தார். இதைக் கேட்டு அப்பிடியே ஷாக் ஆயிட்டார். ‘ஒரு சிங்கத்தை கூட்டிக்கிட்டு வந்துட்டே. இதைவிட வேற என்ன வேணும்?’னு சொன்னார் இளவரசு. அதே மாதிரி, கே.பி. சார் எல்லாத்தையும் இன்ச் பை இன்ச்சா பாப்பார். நான் ஒரு நாள் அவர்கிட்ட சொன்னேன்: ‘என் அப்பாவுக்குக் கூட இவ்வளவு அக்கறை இருக்காது’ன்னு. அதுக்கு அவர் ‘உங்க அப்பாவைத் தாண்டின அக்கறை எனக்குத்தான் இருக்கணும். ஏன்னா, என் நண்பன் ஜெய்க்கணும். எனக்கு அனந்துக்குப் பிறகு செட் ஆன ஒரே எழுத்தாளன் நீதான்’னு சொன்னார்.

கேள்வி: ஒரு படம் ஜெயிக்க இன்றைய தேவை என்னன்னு நினைக்கிறீங்க?

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

Sapphire place

# A Sapphire of An Opportunity

LET THIS SAPPHIRE FIRE YOU UP



Artist's concept only.

**The Sapphire Place**, a sapphire of an opportunity to implement your business ideas is coming to the high growth town of Markham, at a prime location that almost guarantees heavy traffic volume crucial to your business ideas:

- NORTH EAST SIDE OF 407/WOODBINE AVE INTERSECTION
- NEAR BIG BOX RETAIL DEVELOPMENTS
- NEXT TO TWO HOTELS WITH 210 COMBINED ROOMS

**The Sapphire Place is a well carved gem developed by Woodjane Inc.:**

- DESIGNED BY THE AWARD WINNING ARCHITECT LOUIS K. CHEUNG, OAA, MRAIC
- SPACE EFFICIENTLY DESIGNED TO APPROXIMATELY 3% GROSS-UP

The Sapphire Place brings to you this rare and precious business opportunity: outlets for stores, restaurants or professional services. With the heavy traffic volume in the area, your business venture will shine almost right away, like a gem.

## OPEN INVITATION

DATE: APRIL 3, 2010(SATURDAY)
TIME: 11a.m. - 3 p.m.
VENUE: HOMEWOOD SUITES BY HILTON TORONTO-MARKHAM
*50 BODRINGTON COURT, MARKHAM (BEHIND COSTCO)*





Construction will start in 2010, to be completed by 2011. Only a limited number of units are available. Let this Sapphire fire you up! Do not waste any time! Make this gem one of your prized possessions!
Pick up your phone and call.

***HURRY! DO NOT MISS THIS SAPPHIRE OF AN OPPORTUNITY! ACT TODAY!***

CALL NOW FOR DETAILS:
416-321-6969

EXCLUSIVE BROKERAGE
HomeLife GTA Realty Inc. Brokers Protected

# 2010 வன்கூவர் ஒலிம்பிக் போட்டிகள்



## - சங்கவை -
### தரம் 8

பல உலக நாடுகள் சேர்ந்து ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை நான்கு ஆண்டுக்கு ஒருதடவை நடத்துகின்றன. அவை குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள், கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் என இரண்டு பிரிவுகளாக நடைபெறுகின்றன. இம்முறை குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கனடாவின் வன்கூவர் நகரத்தில் நடைபெற்றன.

இந்த 21ம் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் எதிர்பார்த்தபடி மகிழ்ச்சிகரமாகத் தொடங்கவில்லை. இந்த ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க முன் ஜோர்ஜன் நாட்டின் லூஜ் விளையாட்டு வீரரான நோடார் குமாரிரஸ்விலி என்பவர் பயிற்சி எடுக்கும்போது ஓர் பயங்கரமான விபத்தில் விசிலர் சிலாஜடிங் சென்ரரில் காலமானார். இத்துக்கமான நிகழ்ச்சி எல்லோரையும் பாதித்தது. ஆனாலும் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின.

ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழா அழகாக இருந்தது. எனக்குப் பிடித்த நிகழ்ச்சிகள் பல நடந்தன. போட்டிகளில் பங்கு பற்றிய நாடுகளின் நடைபவனி அழகாக இருந்தது. எங்களுடைய தேசியக் கொடி பறக்கையில் எனக்கு பெருமையாக இருந்தது.

ஒரு வெள்ளி பதக்கத்தை முதலாவது நாளில் பெற்ற கனடா¸ போட்டிகளின் முடிவில் 14 தங்கப்பதக்கங்களையும் 7 வெள்ளிப் பதக்கங்களையும் 5 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றது. குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் வரலாற்றில் ஒரு நாடு 14 தங்கப் பதக்கங்கள் பெற்றது இதுவே முதல் தடவை ஆகும். தனது சொந்த மண்ணில் கனடா இதனைப் பெற்றுக் கொண்டது எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

மொத்தமாக 86 போட்டிகள் நடைபெற்றன. இதில் அமெரிக்கா தங்கம், வெள்ளி, வெண்கலம் மூன்றும் சேர்த்து 37 பதக்கங்கள் எடுத்து முதலாவதாக வந்தது. அதில் தங்கப் பதக்கங்கள் 9 மட்டுமே. 10 தங்கப் பதக்கங்களைக் கொண்ட 30 மொத்தப் பதக்கங்களுடன் ஜேர்மனி இரண்டாவது இடத்தில் வந்தது. மொத்தம் 26 பதக்கங்கள் பெற்று கனடா மூன்றாவதாக வந்தது. தங்கப் பதக்கத்தில் கனடாதான் முதலிடம் பெற்றது. 2014 ஆம் ஆண்டு இரசியாவில் நடக்கவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் கனடா இன்னமும் அதிகம் தங்கப் பதக்கங்களை பெறும் என்று நான் நம்புகின்றேன். அதற்கு நாங்கள் எல்லோரும் பாடுபடவேண்டும்.


REAL ESTATE
வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (*Real Estate*) வகுப்பு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: *Vanessa* - 416.321.6969





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough






# இன்னொரு...

(இக்கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே)

1.

'நீர் ஒரு விபரமும் சொல்லவேண்டாம். குறிப்பு எழுத வேண்டிய பெயர்களையும் பிறந்த தேதி நேரங்களையும் மட்டும் தாரும். மிச்சத்தை நானே பாத்து முழு விபரங்களையும் உங்களுக்குச் சொல்லுறேன்' என்றார் நீலகண்ட கணியர்.

வந்தவர் இரண்டு தாள்களைச் சட்டைப் பையில் இருந்து எடுத்துக் கொடுத்தார். பார்ப்பதற்கு இளமையாக இருந்தார். 'என்ரை அக்காவின்ரை பிள்ளையளுக்குத்தான் குறிப்பெழுத வேணும்' என்றார் அவர்.

இரண்டு தாள்களையும் வாங்கியவர், மேலோட்டமாக இரண்டினையும் ஒரு தடவை பார்த்தார். முகத்தில் ஏதோ சலனத்தைக் காட்டியவர், முதலாவது துண்டினைப் பார்த்தார் பார்த்தார். பின்னர் இரண்டாவதினைப் பார்த்தார். மீண்டும் முதலாவதினைப் பார்த்துவிட்டு இரண்டாவதினைப் பார்த்தார். இரண்டினையும் அருகருகே வைத்துப் பார்த்தார்.

சட்டென அவரது முகத்தில் மாறுதல் உண்டானது. முகத்தின் நரம்புகளில் ஏராளமான இரத்தம் பாய, முகம் சிவக்க, கோபாவேசத்துடன் ஏறிட்டுப் பார்த்தார்.

'என்ன என்னுடன் விளையாடுகின்றீரா?' என உரத்த குரலில் கேட்டபடியே அந்த இரண்டு தாள்களையும் அவற்றைக் கொண்டுவந்தவரின் முகத்தில் வீசி எறிந்தார். முதலில் கிழித்து எறியத்தான் நினைத்தார். ஏனோ தெரியாது மனம் மாறி அப்படி எறிந்து விட்டர்.

நீலகண்ட கணியர்:

குறிப்புகள் பார்ப்பதில், எழுதுவதில் மிகவும் கெட்டிக்காரன் என்ற பெயர் எடுத்தவர். இன்னதுதான் நடக்கும் எனக் குறிப்புப் பார்த்துச் சொன்னால், அது தப்பாது நடக்கும் என்று ஊரில் எல்லோருமே சொல்லிக் கொள்ளுகின்றார்கள். ஒன்றிரண்டு தவறி நடந்திருந்ததாயின் அது நீலகண்டரின் கணிப்பில் ஏற்பட்ட தவறாக இராது. கொடுக்கப்பட்ட குறிப்புகளில்தான் தப்பு இருந்திருக்கும். அதில் கொடுக்கப்பட்டிருந்த தகவல்கள்தான் பிழையானவையாக இருந்திருக்கும். அந்த அளவுக்குப் பெயரைச் சம்பாதித்து வைத்திருக்கின்றார். மூன்று தலைமுறையின் வழியாகக் குறிப்புப் பார்க்கின்றார். மூன்று தலைமுறையினருமே குறிப்புப் பார்ப்பதில் பேர் பெற்றவர்கள்.

இவர்களுக்கு இந்தியத் தொடர்பு உண்டு என ஊரில் கதைத்துக் கொள்வார்கள். அடிக்கடி இந்தியாவிற்கும் சென்று வருவார்கள். இவரின் முன்னவர்கள் இந்தியாவின் மலையாளப்பகுதியில் இருந்து வந்தவர்கள் என்று இன்னமும் ஊரில் கதை அடிபடுகின்றது. தெய்வ பக்தி நிரம்பிய குடும்பம். அதிலும் நீலகண்டர், அதி தீவிர பக்தியும், ஒழுக்கமும், சுத்தமும் நிரம்பியவர். வயதில் நாற்பதுகளின் இறுதியிலோ அல்லது ஐம்பதுகளின் ஆரம்பங்களிலோ தான் இருப்பார். எப்பொழுதும் வெள்ளை வேட்டிதான் அணிந்திருப்பார். அதன்மேல் ஒரு பழுப்பு நிறத் துண்டினைக் கட்டியிருப்பார். சுமாராக ஆறடி உயரத்தில், மெல்லிய ஆனால் உறுதி வாய்ந்த தேகக்கட்டுடன் இருக்கும் நீலகண்டரை மேற்சட்டையுடன் கண்டவர்கள் எவருமில்லை. அம்பாள் மேல் மிகுந்த ஈடுபாடுடைய நீலகண்டர், தனக்கென ஒரு சிறிய கோவிலை அமைத்து, அம்பாளை வழிபட்டுக் கொண்டு வருகின்றார்.

கோவிலை அடுத்துக் காணப்பட்ட சிறிய, இரண்டறைகள் கொண்ட ஓட்டு வீட்டில் வசித்து வருகிறார். இரண்டு

## ◇ சி.வி. நாதன் ◇

அறைகளுக்கும் முன்னால் வடக்குத் திசையில் ஒரு விறாந்தை. விறாந்தையின் முன்னால் உள்ள நீண்ட மூன்று படிக்கட்டுகளில் ஏறித்தான் நிலத்தில் இருந்து விறாந்தைக்கு வரவேண்டும். படிக்கட்டால் இறங்கி நிலத்திற்கு வந்தால், வீட்டிற்கு கிழக்குப் புறமாக, மேற்குப் பக்கம் பார்த்தபடியாக ஒரு சிறிய மண்ணினாலான அடுக்களை, இரண்டு கவடுகளில் அடுக்களைக்கு வந்து விடலாம். இரண்டு அறைகளுக்கும் பக்கவாட்டில் கிழக்குப் பக்க அறைக்குக் கிழக்காக ஒரு சிறிய அலுவலக அறை. இந்த அலுவலக அறைக்கு முன்னாக, வடக்குப் பக்கமாக, மண்குசினிக்கு தெற்காக, விறாந்தையின் கிழக்காக சிறிய வரவேற்பறை போன்ற ஒன்று. கிழக்கு நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த வரவேற்பறையின் முன்புறம் முழுவதும் திறந்திருந்தது. வரவேற்பறையின் முன், ஒரு இருபதடி தூரத்தில் கிழக்கில் வடக்குத் தெற்காக தெரு. வரவேற்பறையில் இருந்து அலுவலக அறைக்கு போவதற்கு ஒரு கதவு இருந்தது போலவே வரவேற்பறையில் இருந்து விறாந்தையிற்கும் ஒரு கதவு இருந்தது.

இன்னமும் திருமணம் செய்து கொள்ளாத நீலகண்டருக்கு அவரின் அக்காள் அகிலாண்டம்மாள்தான் வீட்டுக்கு வந்து சமைத்துக் கொடுப்பார். அக்காளும் தம்பியைப் போலவே தெய்வ பக்தி நிரம்பியவர். இரண்டு ஆண்பிள்ளைகளுக்குத் தாய். ஆனாலும் தம்பியையும் பிள்ளை போலவே கவனித்து வருகின்றார்.

என்ன இன்னமும் விடயத்திற்கு வரவில்லையே எனப் பார்க்கின்றீர்களா?

இராமலிங்கம் திகைத்துவிட்டான். அவன்தான் அந்த இரண்டு தாள்களையும் கொண்டு வந்தவன். நீலகண்டரின் கோபத்தினை எதிர்பார்க்காத இராமலிங்கம் 'ஐயோ! கோவிக்காதையுங்கோ! அந்த இரண்டும் உண்மையானவைதான். நான் ஏன் உங்களுடன் விளையாடவேண்டும்? கோவிக்காமல் நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோ' 'ஓய்! நீர் ஒண்டும் சொல்ல வேண்டாம். அதுகளை எடுத்துக் கொண்டு வெளியே போம் காணும்' நீலகண்டரின் குரலில் கோபத்தின் ஆவேசம் இன்னமும் ஒரு படி கூடியிருந்தது.

'விடியக் காலத்தாலை இதுக்கெண்டு கிளம்பிட்டினம். எத்தினை குறிப்புகளை எழுதிக் குடுத்திருக்கிறேன், ஒருத்தர் கூட இப்பிடி என்னை அவமானப்படுத்த நினைக்கேல்லை'

'ஐயா நான் சொல்லிறதைக் கொஞ்சம்' இராமலிங்கம் முடிக்கவில்லை,

செயற்கு அரிய செய்வார் பெரியர் என்பது வள்ளுவர் குறள். இதற்கு அமைய இம்மண்ணுலகில் வாழ்ந்து மறைந்த பெரியோர்களின் வரிசையில் ஒருவராகத் திகழ்கின்றார் நெடுந்தீவு அன்பர் திரு. சவிரிமுத்து அடைக்கலமுத்து அவர்கள். இவர் நல்லாசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்து மாணவர்கள், தமிழ்மக்கள் மத்தியில் நன்மதிப்பினைப் பெற்ற தமிழ் அறிஞர். இவர் நாட்டுப்பற்றும் தமிழ் மொழிப்பற்றும் சமயப்பற்றும் உடையவர். சிறப்பாக தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமையும் நுண்ணறிவும் கொண்டவர். மேலும் பேச்சுவன்மையும் எழுத்துவன்மையும் கவித்திறன் வன்மையும் நிறைவாகக் கொண்டவர். கல்வி அறிவை தக்கார் இடத்திலும் தன் அயராத முயற்சியினாலும் கற்று இன்பம் பெற்றவர். பல நூல்களைத் தேடிச் சேமித்து தம் இல்லத்தில் நூல்நிலையத்தை அமைத்த பெருமைக்குரியவர். 'கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத்தக' என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாக திகழ்ந்து 23.02.2010 ஆம் திகதி இறைவன் திருவடியைச் சேர்ந்தார். இச்சம்பவம் இலண்டன் மாநகரில் இடம்பெற்றமை நினைவு கொள்ளத்தக்கது.

'என்னை நன்றாக இறைவன் படைத்தான் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலர் வாக்கிற்கு அமைய நற்பணி செய்த உத்தமர். இப்பிறவியின் பயன் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவதே என்ற முன்னோர் வாக்கினை உள்ளத்தால் போற்றி இறுதிமூச்சு வரையும் ஒழுகிய இறை பக்தர். இவர் தன்னையே மறந்து பிறர்பணி செய்வதில் மிக்க ஆர்வமும் அக்கறையும் உடையவர். இவர் உண்மையில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியமையால் நல்ல குடிமகனாகவும் திகழ்ந்தார். தனது நற்பணியால் கிடைத்த செல்வத்தை வறுமையில் உள்ளவர்களுக்கு அளித்து ஆதரவு நல்கிய நல்லாசிரியர். தான் பெற்ற கல்வி இன்பத்தை மாணவர்களின் உலகிற்கு அளிப்பதில் மிகுந்த விழைவு கொண்டு திகழ்ந்தார். இதனால் இப்பெரியார் 'அமுது மாஸ்டர்' என்று எல்லாராலும் போற்றப்பட்டார். தமிழ் பேரறிஞர்களை போற்றுவதிலும் அவர்களின் ஆக்கபணிகளை மதிப்பதிலும் ஆர்வம் உடையவர். கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காது சிறந்த நூல்களைத் தேடிப்பெற்று முழுமையான அறிவினைப் பெற்ற நல்லாசிரியர் இவர் எனலாம். தனது நல்லாசிரியப்பணியை தெய்வப்பணியாக செய்து உள்ளத்தில் இன்பம் பெற்ற ஆசான். கல்வி அறிவுடைய சான்றோர்களுடன் கூடி மகிழ்தல் விண்ணுலக இன்பத்தைவிட மேலானது என்பது நன்கு தெளிந்து புலவர்களோடு கூடி மகிழ்ந்த பெருமை இவருக்கு உண்டு. கனடாவில் குருத்துவப்பணியில் ஈடுபட்டுள்ள ரொறொன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் திரு. சந்திரகாந்தனுடைய தந்தையார் அடை-கலமுத்து அவர்கள். தனது தந்தையாரின் நல்லாசிகளையும் அன்பினையும் முழுமையாகப் பெற்ற பெருமை மகன் சந்திரகாந்தன் அவர்களுக்கு உரியதாகும். அடைக்கலமுத்து அவர்களின் தந்தையார் சவிரிமுத்து. இவரின் இயற்பெயர் தம்பிமுத்து என்பது குறிப்பிடத்தக்கது. தம்பிமுத்து சேதுப்பிள்ளை என்னும் குடும்பத்தில் நான்கு செல்வக்குழந்தைகள். இதில் ஒருவர் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. இச்செல்வக் குழந்தைகளில் இரண்டாவது மகனான 15.09.1918 ஆம் திகதி பிறந்தவர் தான் நல்லாசிரியர் அடைக்கலமுத்து அவர்கள். நெடுந்தீவு தவத்திரு. டாக்டர். தனிநாயக அடிகளார் (1913-1980) அவர்களின் நிறைவான



தமிழ் அமுது பெரியார் திரு. ச. அடைக்கலமுத்து 23.02.2010 க்கு திகதி இறைவன் திருவடியைச் சேர்ந்தார். இதனை முன்னிட்டு கட்டுரையை வெளியிடுகின்றோம்.

அன்பிற்குரியவர் திரு.ச.அடைக்கலமுத்து அவர்கள். அவர் காட்டிய நல்வழியில் நின்று ஒழுகிய சிறப்பிற்குரியவர்.

இலண்டன் மாநகரில் 'இளவாலை தமிழ்க் கங்கை அமுது ஐயாவின் அற்புதப் படைப்புகள்' என்னும் நூல் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக அண்மையில் நடைபெற்றுள்ளது. இவ்விழாவில் தமிழறிஞர், தமிழ்ப்பெரியார் திரு. சவிரிமுத்து அடைக்கலமுத்து அவர்களும் கலந்து சிறப்பித்துள்ளார். இந்த நூல் 1200 பக்கங்களைக் கொண்டதாகும். சென்னை மணிமேகலை பிரசுரம் இந்நூலை அச்சிட்டுள்ளது. இப்பெரியார் தனது இளமைப்படிப்பினை யாழ்பாணம் சென். சாள்ஸ் கத்தோலிக்க பாடசாலையிலும் கொழும்புத்துறை சஞ்சுசையப்பா சாதனா பாடசாலையிலும் கற்று நல்லாசிரியர்களின் நன்மதிப்பினைப் பெற்றுத்திகழ்ந்தார். 1935-1938 ஆண்டுவரையும் கொழும்புத்துறை ஆசிரியப்பயிற்சிக்கல்லூரியில் கற்று ஆசிரிய தராதரப்பரீட்சையில் சித்தியும் பெற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் நல்லாசிரியர் அடைக்கலமுத்து அவர்கள் கற்று தமிழ் மொழியில் 'டிப்ளோமா' பட்டமும் 'வித்துவான்' பட்டம் பெற்ற பெருமைக்குரியவர். யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடைபெற்ற காவியப்பாடசாலையிலும் கற்று இலக்கண இலக்கியங்களில் நல்லறிவினைப் பெற்றுத் திகழ்ந்தார். கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் துரைசிங்கம் ஆகியோரிடத்தில் ஆழமான தமிழ் அறிவினைப் பெற்றுத் திகழ்ந்தார். பேராதனையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராசிரியர் ஆ. சதாசிவம் ஆகியோரிடத்திலும் கல்வியை கற்ற பெருமை இவருக்கு உண்டு. நவாலியூர் புலவர் மணி இளமுருகனார் இடத்திலும் சென்று கல்வி அறிவினைப் பெற்ற ஆசான். விழிப்புணர்ச்சியும் ஒற்றுமையும் நல்கும் கவிதைகளை இயற்றுவதிலும் இவர் சிறப்பிற்குரியவர். யாழ்ப்பாணம் முரசொலி என்னும் பத்திரிகையில் இவரின் கவிதைகள் 'அமுது' என்ற புனைப்பெயரில் வெளிவந்துள்ளது. இதனால் தமிழ்மக்கள் மத்தியில் நற்பெயரும் பெற்றுத்திகழ்ந்தார்.

கனடாவில் தமிழர்தகவல் 2006 ஆண்டு நடத்திய ஆண்டு நிறைவு மலர் விழாவில் அடைக்கலமுத்து அவர்களுக்கு தங்கப்பதக்கம் அளித்து கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெரியார் தாம் வாழும் காலத்தில் பெருமைக்குரிய கௌரவப்பட்டங்களையும் பெற்றுள்ளமை இவரின் தமிழ் புலமைக்கும், ஆக்கப்பணிக்குப் கிடைத்த நற்பரிசாகும்.

தவத்திரு. டாக்டர். தனிநாயகம் அடிகளார் அவர்களின் தந்தையார் நாகநாதன் கணபதிப்பிள்ளை அவர்கள். இவர் நெடுந்தீவை பிறப்பிடமாகக்கொண்டவர். மக்கள் இவரை 'தலைமைக்காரர்' என்று போற்றி உவகை பெறுவார்கள். இவர் கத்தோலிக்க சமயத்தை தழுவியமையால் ஹென்றி ஸ்ரனிஸ்லாஸ் என்ற பெயருடன் விளங்கினார். இவருக்கும் ஊர்காவற்துறை கரம்பொன் சிசில் இராசம்மா வஸ்தியாம்பிள்ளை அவர்களுக்கும் முதல் குழந்தையாக 02.08.1913 ஆம் திகதி பிறந்தவர் தனிநாயக அடிகளார் அவர்கள். இதனால் நெடுந்தீவு 'சான்றோர் ஊர்' என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. இவ்வூர் மேலும் சவிரிமுத்து அடைக்கலமுத்து அவர்களால் ஓங்குபுகழ் கொண்டுள்ளது. இவர் இளவாலையைச் சேர்ந்த திரேசம்மா சுவாம்பிள்ளை அவர்களைத் திருமணம் செய்து பத்துப் பிள்ளைகளுக்கு தந்தையாக திகழ்ந்துள்ளார். இவர்களின் திருமணம் பொன்விழா 1994 கண்டு இலண்டனில் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரின் புதல்வர்களில் ஒருவர் பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள் கனடாவில் எல்லோரின் மதிப்பினைப் பெற்றுள்ளார் என்பதில் ஐயமில்லை. இவர் தனது தந்தையாரைப் போல அடக்கமும், ஒழுக்கமும், இறைபக்தியும் மிக்கவர். கல்வியிலும் மிக்க புலமையைக் கொண்டவர். எல்லோரிடம் அன்பாக பழகும் தன்மையைக் கொண்டவர். தனது பெற்றோரை தெய்வமாக போற்றி ஒழுகும் நற்செல்வர். அடைக்கலமுத்து அவர்கள் திருமணத்திற்கு பிறகு 'இளவாலை அமுது' என்ற சிறப்பினை மக்கள் மத்தியில் பெற்றுத் திகழ்ந்தார். இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியில் அதிபராக கடமையாற்றி அக்கல்லூரியிலிருந்து 'ஓய்வும் பெற்றுள்ளார்'. மாணவர்களுக்கு முழுமையான கல்விச் செல்வத்தை திறம்பட வழங்குவதில் உயர்ந்து

குறிக்கோளைக் கொண்டவர். 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்ற தகுதி மாணவர்களின் உள்ளத்தில் ஆழமாக பதியச் செய்தவர் இவர் எனலாம். 'கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பதை தமது பணியில் செயல்படுத்தி மாணவர்களுக்கு நற்சிறப்பு நல்கிய நல்லாசிரியர். இவரின் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள் தினகரன், வீரகேசரி, பாதுகாவலன், ஈழகேசரி, முரசொலி ஆகிய பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இவர் தனது எழுத்துப்பணியை 17வயதில் ஆரம்பித்துள்ளார்.

இவர் எழுதிய நூல்கள் பல. இவற்றுள் மாதா அஞ்சலி, நெஞ்சே நினை, சீவழிச் சென்ற இனிய மனிதன், காக்கும் கரங்கள், அன்னை திரேசா, அமுதுவின் கவிதைகள், மடுமாதா காவியம், அன்னம்மாள் ஆலயவரலாறு, இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளது.

**அ. சிவானந்தநாதன்**
**கனடா**

சொல்லில் செல்வர், புலவர்மணி, செந்தமிழ்த்தென்றல், முப்பணி வேந்தனார், கவியரசர், தமிழ்க்கங்கை, பாவேந்தர், மதுரகவி, மகாகவி, கலாபூஷணம், செவாலியர், இலக்கிய கலாநிதி ஆகிய கௌரவப்பட்டங்களையும் வாழும் காலத்தில் பெற்றுள்ளார். உரோமபுரி பாப்பரசர் அவரின் அன்பிற்குரியவர் இப்பெரியார். தமிழ் சான்றோர்கள் அறிஞர்கள், புலவர்கள் வரிசையில் நெடுந்தீவு அன்பர் தமிழ் அறிஞர் திரு. ச. அடைக்கலமுத்து அவர்களும் ஒருவராகத் திகழ்கின்றார் என்பது உண்மை. இவரின் அரிய நூல்களை நாமும் பெற்று அவரின் புலமைத்திறனை வியந்து இன்பம் பெறுவோமாக. இதுவே நாம் அவருக்கு செய்யும் கைமாறாக இருக்க வேண்டும். இறைவன் திருவடியைச் சேர்ந்த செவாலியர் கலாநிதி. திரு. ச. அடைக்கலமுத்து அவர்கள் தமிழ்மக்கள் உள்ளத்து அழியாகப் புகழை நிறைவாகப் பெற்றுள்ளார் என்பதில் ஐயமில்லை. இலக்கிய கலாநிதி தமிழ் அமுது திரு. ச. அடைக்கலமுத்து அவர்களின் இறுதியாத்திரை இலண்டனில் 06.03.2010 ஆம் திகதி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.




# ஒரு அதிகாலை மயக்கம்!

அண்மையில் ஒரு நாள் காலை கண்விழித்த போது, அதிகாலை வெளிச்சம், கொஞ்சம் தாராளமாகவே ஜன்னல் வழியே வந்து கொண்டிருந்தது. "போச்சு! லேட்டா போச்சு வேலைக்கு", என்று விழுந்தடித்துக்கொண்டு மணி பார்த்தால் வெறும் ஆறு மணி தான்! காலை ஆறு மணியா?, வெளிச்சமா? என்று நடு நடுங்கிப்(!) போய், இதெல்லாம் 'Out of My League' என்று, அடுத்த பக்கம் திருப்பியிருப்பார்கள் நிறையக் "கும்பகர்ணப்" பேர்வழிகள்! இன்னும் இதே பக்கத்தில் இருப்பவர்களுக்கு, இனி மிச்சக் கதை.

உங்களின் சந்தோஷமான கணம் எது என்ற கேள்விக்கு, சிங்கப்பூர் வானொலி (ஒலி) அறிவிப்பாளர் ஒருவர், "காலையில் கண் விழிக்கும் கணம்" தான் என்று சொல்லிருந்தார். அபூர்வமான பதில்! விழி திறந்தால் தான், அன்று வாழ்க்கையே ஆரம்பிக்கிறது! ("ஐயோ!, நாளைக்குக் காலம கண் முழிக்காமயே போய்ச் சேர்திர வேணும்", என்று மனச் சுமைகளுடன் துங்கப் போகிற கோடான கோடிப் பேர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்!)

கனடாவில் காலையில் கண் விழிப்பதும், இலங்கை, இந்தியா நாடுகளில் அதிகாலை விழி திறப்பதும் வெவ்வேறு அனுபவங்கள்! குளிர் கால நாடு என்று பொதுவாக அறியப்படும் கனடாவில் "கொஞ்சம்" காலை வெளிச்சம் பார்க்கக்கூடிய மாதங்கள் என்று சொல்லக் கூடியவை, மே முதல் செப்டம்பர். ஆனால், இம்முறை குளிர் காலம் நம்மை "ஐயோ, பாவம்" பார்த்து, "பொழைச்சுக்கோ" என்று விட்டதில், வசந்த காலம் வர முன்னேயே (காலேண்டர் படி மார்ச் 20, வசந்த காலத்தின் முதல் புன்சிரிப்பு!) இளம் காலை வெயில், ஜன்னல் வழியே வந்து உங்களைத் தட்டி எழுப்புகிறது! வரவேற்று, மனக்கதவு திறக்க நீங்கள் தயாரா?

காலைத் தென்றல் பாடி வரும்
ராகம் ஒரு ராகம் பறக்கவே தோன்றும்
சிறகுகள் வேண்டும்

உங்களில் எத்தனை பேருக்கு ஞாபகம் இருக்கும் என்று தெரியவில்லை, இலங்கை வானொலியில் 1970/80 களில் அதிகாலை வேளைகளில் (5:45), பக்திப் பாடல்களுக்குப் பின் "காலை" நேரப் பாடல்கள் ஒலிபரப்பாகும். நிகழ்ச்சியின் பெயர் மறந்து விட்டது. ஆனால் அந்தப் பாடல்களின் சுகந்தமும், காலை நேர



- கிறிஸ்ரி-

உற்சாகமும் இன்னும் மனதில்! இது ஒரு வகையில் தமிழ் சினிமாவின் (பாடல் காட்சிகள்) பாதிப்பாகக்கூட இருக்கலாம்!

"புதிய வானம், புதிய பூமி எங்கும் பனி மழை பொழிகிறது (புரட்சித் தலைவருக்கு நாம் "கனடா" வரப்போகும் விடயம் எப்படி அப்போதே தெரியும்?)

நான் வருகையிலே, என்னை வரவேற்க வண்ணப் பூ மழை பொழிகிறது..." என்ற "அன்பே வா" படப் பாடலின் "Feel Goodness" எத்தனை Tim Hortons காபி அருந்தினாலும் கிடைக்கப் பெறாதது.

"பிள்ளைக் கூட்டங்களைப் பார்க்கையிலே
பிஞ்சு மொழிகளைக் கேட்கையிலே
நல்லவர் எல்லாம் நலம் பெறுவார் என்ற நம்பிக்கை பிறக்கிறது
இவர் வர வேண்டும், புகழ் பெற வேண்டும் என்று ஆசை துடிக்கிறது.... "

என்ற அந்தக் "கணீர்" வரிகளை ஒரு "புத்தம் புதுக் காலையில்" கேட்கும் போது இன்னமொரு நாள் வாழ்ந்து விட வேண்டுமென்ற ஆவல் வருகிறது!

குயில்கள் மரக்கிளையில்
சுரங்கள் சேர்க்கும்
மலர்கள் பனித்துளியில்
முகங்கள் பார்க்கும்
தினந்தோறும் புதுக்கோலம்
எழுதும் வானம்
இரவிலே நட்சத்திரம்
இருந்ததே எங்கே? - பனித்
துளிகளாய்ப் புல்வெளியில்
விழுந்ததோ இங்கே
இந்த இன்பம் இதம் பதம்
இது ஒன்றே ஜீவிதம்

காலையில் வேலைக்குப் போகும் போது, "நல்ல நேரம்" படப் பாடல் கேளுங்கள், உற்சாகம் "பிச்சுக் கொண்டு"(!?) ஓடி வரும்.... ஓடி ஓடி உழைக்கணும், ஊருக்கெல்லாம் கொடுக்கணும், ஆடிபாடி நடக்கணும், அன்பை நாளும் வளர்க்கணும்...

காலையின் உற்சாகம் தான் எம்மை முழு நாளும் வழி நடத்திச் செல்லும். எனவே, அந்த அதிகாலையை இந்த வசந்த காலத்தில் கொஞ்சம் ரசிப்போம்.

உறங்கும் மானுடனே
உடனே வா வா
போர்வைச் சிறையை விட்டு
வெளியே வா வா
அதிகாலை உனைப் பார்த்து
வணக்கம் சொல்லும்
காலையின் புதுமைகள்
அறியவே இல்லை
இயற்கையின் பாஷைகள்
புரியவே இல்லை
இங்கு இன்பம் கொள்ளை கொள்ளை
நெஞ்சில் ஒரே பூ மழை

கட்டுரையின் "Background Song" ஆக வலம் வந்த பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர் "வைரமுத்து". படம் "உயர்ந்த உள்ளம்". சுகமான "காலைப் பாடல்" ஒன்று அது. கவிஞரின் வரிகள் போல "நீங்கள் வாழ வந்த வாழ்வில் ஒரு பகுதியை இழந்து விடாதீர்கள்"! நீங்கள் செய்ய வேண்டியது, கொஞ்சம் காலைப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள், அதிகாலை எழுந்து கொள்ளுங்கள் (எதுக்கு, என்னை அவ்வளவு கோபமாகப் பார்க்கிறீர்கள்?) .. பாடல் கேட்டுக்கொண்டு இயற்கையை ரசியுங்கள்! அனுபவம் பற்றிச் சொல்லி அனுப்புங்கள்!


**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

*Very respectfull instructor to ladies.*

உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்
நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்




**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

*Get your G licence through me.*
*If you fail G test, we will pay your test-booking fee.*
(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

சேவைகள்: *Brampton - Mississauga - Toronto*

***Road test available in out cities***



***விற்பனையாகின்றன!***
***கனி விமலநாதனின்***
***மூன்று நாவல்கள்***

1. வேற்றுக்கிரக மனிதர்கள்



யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்? அவர்களின் பின்னணி என்ன? வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா? வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

2. பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது? தோன்றியபோது எப்படி இருந்தது? எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது? பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

3. இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா? அவை எங்கிருந்து வருகின்றன? பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்
**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை**
**காரியாலயம் - 416.282.8059**
**முருகன் புத்தகசாலை**
***GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch***

# எந்தக்கணத்திலும் மனம் நாடுவது!
# எந்தப்பொழுதிலும் மனங்கள் விரும்புவது!






தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# புதிய தலைமுறைக்கு...

26ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பவரின் சீடனான மிருதங்க வித்வான் தஷிணாமூர்த்தி சாரி என்பவர் மிருதங்கத்தில் சிறப்பாகப் பயின்று 'அபினவ நந்திகேஸ்வரர்' புகழ் பெற்றிருந்தார். அவரை அணுகி தஷிணாமூர்த்தி பிள்ளை தியாகராஜனின் பாட்டுக்கு மிருதங்கம் வாசிக்குமாறு சொன்னார். ஒரு சிறுவனுக்கு மிருதங்கம் வாசிப்பதைத் தம் தகுதிக்குக் குறைவாகக் கருதி அவர் மறுத்த பொழுது, ஆசானே வற்புறுத்தி வாசிக்க வைத்தார். ஆக, தியாகராஜனின் முதல் இசை நிகழ்ச்சி, அவரது 16ஆம் வயதில் திருச்சி பெரிய கம்மாளத் தெருவில் உள்ள காளி கோவிலில், பிரபல வித்வான்களான மதுரை பொன்னு ஐயங்கார் பிடில் வாசிக்க, அபிநவ நந்திகேஷவரர் தட்சாணா மூர்த்திபிள்ளை கஞ்சிரா வாசிக்க, தட்சிணாமூர்த்தி ஆசாரி மிருதங்கம் வாசிக்க அமர்களத்துடன் நடைபெற்றது. மூன்று மணிநேரம் கானமழை, கட்டுக்கடங்காத கூட்டம் என தியாகராஜரின் அந்த முதல் அரங்கேற்றமே சிறப்புடன் இருந்தது. பாடல்களின் பொருளுணர்ந்து தியாகராஜார் பாடிய பாங்கு, ஆலாபனை, சுரப்பிர யோகம் கூடியிருந்த ஜனங்களை வெகுவாகக் கவர்ந்தது. கச்சேரி முடிந்ததும் தட்சிணமூர்த்தி பிள்ளை, "தியாகராஜர் கர்நாடக இசைக்கு முருகன் அளித்த வரப்பிரசாதம். இதுவரை நான் பல கச்சேரிகள் கேட்டிருக்கிறேன். இது மாதிரி ஒரு அற்புதமான கச்சேரி இது வரை கேட்டதில்லை. இன்று முதல் இந்தப் பிள்ளை வெறும் தியாகராஜன் அல்ல, தியாகராஜ பாகவதர்" என்று கூறினார். அன்று முதல் 'திருச்சி தியாகராஜர்' 'தியாகராஜ பாகவதர்' ஆகி தமிழிசை உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். நாளடைவில் பாகவதர் என்றால் அவரை மட்டுமே குறிப்பதாக அது மக்களிடம் அமைந்தது. அந்நிகழ்ச்சி முடிந்ததும் தக்ஷிணாமூர்த்தி, பொன்னு அய்யங்காரிடம் தான் முதலில் தியாக ராஜரின் திறமையை அறியாது மறுத்ததற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

1926இல் திருச்சி பொன்மலையில் முதன்முதலாகப் 'பவளக்கொடி' நாடகத்தில் அர்ஜுனனாக வேடமேற்று தியாகராஜ பாகவதர் நடித்தார். அதில் பெண் வேடத்தில் பவளக்கொடி வேடமேற்று டி.பி.இராமகிருஷ்ணன் நடித்தார். டி.பி. ராமகிருஷ்ணன் பின்னாளில் அகில இந்திய வானொலியில் சங்கீத வித்வானானார். இதனால் அவர் இடத்தை நிரப்ப சில வருடங்கள் கழித்து எஸ்.டி.சுப்பல'ஷ்மி பாகவதருடன் ஜோடி சேர்ந்தார். பாகவதர் - சுப்புலட்சுமி ஜோடி ஆரோக்கியமான, கூர்மையான வசனங்களாலும் ஒருவர்க்கொருவர் சளைக்காத நடிப்பினாலும் சரித்திரம் படைத்தனர். இந்தியத் தமிழர்கள் மட்டுமின்றி இலங்கை, பர்மா, மலேயா மற்றும் சிங்கப்பூர்த் தமிழர்கள் மத்தியிலும் இவர்கள் மிகப் பிரபலமடைந்தனர்.

எம்.கே.டி. தன்னை மற்றவர்களைப் போல் எந்த ஒரு குறிப்பிட்ட நாடகக் கம்பனியுடனும் ஐக்கியப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இதனால், அவருடைய நாடகங்கள் 'சிறப்பு நாடக'ங்களாக அறிவிக்கப்பட்டன. அவர் தன் விருப்பத்திற்கும் வருவாய்க்கும் தக்கவாறு வாய்ப்புகளைத் தேர்வு செய்தார். அவருக்கு ஒரு நாளுக்கு ஐம்பது ரூபாய்கள் கொடுக்கப்பட்டு வந்தது. அது அந்த நாளில் மிக உயர்ந்த தொகை. அவருடைய நாடகங்கள் இடைவெளியி ன்றித் தொடர்ந்து ரசிகர்களின் பேராதரவைப் பெற்றன. ஒரு முறை திருச்சி செங்கோட்டையில் எம்.கே.டி.யின் 'வள்ளி திருமணம்' நாடகத்தைக் எஸ்.ஜி.கிட்டப்பா காண நேர்ந்தது. அந்நாடகத்தில் 'கரஹரப்ரியா' ராகத்தில் எம்.கே.டி. பாடிய 'ராமா நீ எட' என்ற தியாகராஜ கிருதியைக் கேட்டு மெய் சிலிர்த்து நின்று விட்டார் கிட்டப்பா. தம்மை மறந்து கரவொலி எழுப்பி 'ஒன்ஸ் மோர்' கேட்டு மீண்டும் பாடச் செய்தார். எம்.கே.டி. அவருடைய விருப்பத்தை உடனே நிறைவேற்றினார். உடனே மேடை ஏறி அவருக்கு பவளங்களுடன் கூடிய பொற்சங்கிலியைப் பரிசளித்து அந்தச் சிறு பாகவதர் உண்மையிலேயே மஹா வித்வான் என்று ஒப்புதல் அளித்தார், கிட்டப்பா. பிற்காலத்தில் பாகவதர் கிட்டப்பாவிடமிருந்து தாம் பெற்ற பரிசும் பாராட்டும் தமக்கு மிகவும் மகிழ்ச்சியளித்ததாகத் தெரிவித்தார். ஏகலைவனைப் போன்று எஸ்.ஜி. கிட்டப்பாவைத் தன் மானசீக குருவாக வரித்தார்.



இரட்டை ஹார்மோனியம் வாசிப்பில் சிறந்து விளங்கிய தேவுடு ஐயர் எல்லா நாடகங்களிலும் எம்.கே.டி.க்கு ஹார்மோனியம் வாசிப்பது வழக்கம். சிறிது காலம் கழித்துப் பிரபல இசை இயக்குனர் ஜி.ராமநாதனும் எம்.கே.டி. யின் நாடகங்களுக்கு ஹார்மோனியம் வாசித்தார். பிறகு, இவர்கள் இருவரும் இணைந்து திரைப்படப் பின்னணி இசையில் ஒரு சகாப்தத்தைப் படைத்தார்கள்.

1934இல் 'பவளக்கொடி' நாடகத்தை லெட்சுமணன் செட்டியார் திரைப்படமாகத் தயாரித்தார். பாபநாசம் சிவன் பாடல்களுடன், கே.சுப்பிரமணி யம் இயக்கத்தில் இப்படம் வெளிவந்தது. இந்தப் படத்தில் நடித்ததுடன் 55 பாடல்களில் 22 பாடல்களை பாகவதர் பாடியிருந்தார். தமிழ்நாடெங்கும் திரைப்படக் கொட்டகைகளில் மக்கள் வெள்ளம் வரலாறு காணாத அளவுக்கு நிரம்பி பவளக்கொடிக்கு பெரிய வரவேற்பு இருந்தது. ஒன்பது மாதங்கள் தொடர்ந்து அப்படம் ஓடியது. 'பவளக்கொடி'யில் இருந்து தொடங்கி அடுத்துத் தொடர்ந்த பத்தாண்டுகள் தியாகராஜ பாகவதர் காலம்தான். அவருடைய திரையுலக வாழ்வு பொற்காலமாகத் தன்னிகரற்ற பெயரையும் புகழையும் அவர் வாழ்வில் கொண்டுவந்து சேர்த்தன. குறுகிய காலத்தில், ஒன்பதே திரைப்படங்களில் அவர் சிகரத்தை தொட்டார். இதில் முதல் ஆறு திரைப்படங்களில் அவர் பாடிய பாடல்கள் இன்றும் தம் பொலிவை இழக்காமல் ஒளிர்கின்றன. 'பவளக்கொடி' (1934), 'நவீன சாரங்கதரா' (1936), 'சிந்தாமணி' (1937), 'சத்தியசீலன்' (1938), 'அம்பிகாபதி' (1938), 'திருநீலகண்டர்' (1939), 'அசோக்குமார்' (1940), 'சிவகவி' (1942), 'ஹரிதாஸ்' (1944), 'ராஜமுக்தி' (1948), 'அமரகவி' (1952), 'சியாமளா' (1953), 'புது வாழ்வு' (1957), 'சிவகாமி' (1959) ஆகிய திரைப்படங்கள் மூலமும் தம் பக்தி ரசம் சொட்டும் தத்துவப் பாடல்களினாலும், கனிரசம் போன்ற காதல் பாடல்களாலும் தமிழ்த் திரையுலகில் தம் புகழை நிலை நிறுத்திக் கொண்டார்.

திரையுலகில் எம்.கே.டியின் பயணத்தைப் பார்ப்பதற்கு முன்னால் ஒரு விஷயம். அது அவருடைய திருமண வாழ்க்கை. 'பவளக்கொடி' திரைப்படம் எடுக்கும் முன்பே அவருக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது. மனைவி பெயர் கமலம். எம்.கே.டி.யின் முதல் திரைப்படமான 'பவளக்கொடி' வெளிவந்த பொழுது அவருடைய மூத்த மகள் சுசீலா பிறந்தாள். சில வருடங்கள் கழித்து இரண்டாவது மகள் சரோஜாவும், 1939ஆம் ஆண்டு அவருடைய மகன் ரவீந்திரனும் பிறந்தார்கள். பின்னாட்களில், கமலம் திருச்சியில் இருந்த நிலையில் சென்னையில் தன்னிடம் சினிமா வாய்ப்பு கேட்டு வந்த ஒரு இளம் நடிகையை இரண்டாவது மனைவியாக பாகவதர் மணந்தார்.

அதை அடுத்த இதழில் பார்ப்போம்.

தொடரும்.







# தமிழ் உச்சரிப்புத்தினம் தேவை

## Tamil Pronunciation Day

என் இனிய நண்பர்களே!

வாழ்த்துக்கள்
நலம்பெற பிரார்த்திக்கிறேன்

கடிதங்களைப் பெற்று அதனைத்திறந்து கூடப்பார்க்காது கிடப்பில் போடும் பஞ்சிப்பட்ட காலத்தில் எனது கடிதங்களைப் பார்ப்பதோடு மட்டுமல்லாது படித்து பதில் கேள்விகளையும் எழுப்பும் உங்களுக்கு நன்றி. நம்மைத் தொடர்புபடுத்தும் ஊடகக்கையான விளம்பரத்துக்கும் வாழ்த்துக்கள். ஈழத் தமிழியம், தமிழ்த்துவம், தனித்தன்மை, அடையாளம் தொடர்பான உங்கள் கேள்விகள் என்னை மானசீகமாய் ஈழத்துக்குத் துரத்தி உங்கள் கேள்விகள் என்னை மானசீகமாய் ஈழத்துக்குத் துரத்தி அவதானிக்க வைத்துச் சென்ற காலத்தில் பழுதிலாத் திறன்களையும் இனிவருங்காலத்தின் சிறப்பையும் உரத்த சிந்தனைகளில் ஊடாட வைக்கிறது.

உங்கள் கேள்விகளில் ஒன்று கனடாவில் பிறந்து வாழும் குழந்தைகளும் சிறிய வயதில் கனடாவுக்கு வந்த பிள்ளைகளும் பேசும் தமிழின் உச்சரிப்பு (Pronunciation) பற்றியது. ஈழத்து தமிழ் உச்சரிப்பு என்ற தனித் தன்மையும் இல்லாது, பொதுவான தமிழ் உச்சரிப்பு என்றும் இல்லாது, என்ன மொழி பேசுகிறார்கள் என்றே புரியாத நுனி நாக்கு தமிழ்ப் பேச்சுப்பற்றி கேட்டிருந்தீர்கள். தமிழ்த் தன்மை, இயல்பு, அடையாளம், முகவரி, தொனிப்பு என்பவற்றின் எதிர்காலம் பற்றிய பயம் உங்கள் கேள்விகளால் புலப்படுகிறது. புலம்பெயர்ந்த வாழ்வுப் புதிர்களில் இதுவும் ஒன்றே. ஈழத்து ஏக்கங்களோடும் உணர்வுகளோடும் புலம் பெயர்ந்து வாழும் அனைவருக்கும் உள்ள ஆதங்கமே இது.

உலக இனங்கள் அனைத்தும் தமது தனி அடையாளங்களை, தனித்தன்மைகளைத் தக்க வைக்கவே விரும்புகின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த முனைப்பைவிட இன்று நான், நமது என்ற எண்ண ஓட்டங்கள் தீவிரம் அடைந்துள்ளன. ஒரு கொள்கையின் அடிப்படையில், ஒரு இலட்சியத்தின் பாதையில், ஒரு சமயத்தின் நோக்கில் ஒன்றாதல் என்பது இரண்டாம் இடத்திலும், நான், நாம், நம்மவன், நமது என்பவை முதலாம் இடத்திலும் மிதக்கும் நிலை உருவாகி வளர்ந்துள்ளது.

றிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

மனிதகுலம் முதலாளிவர்க்கம், தொழிலாளிவர்க்கம் என்ற வர்க்க நிலைகூடமாறி வடிவம் எடுத்துள்ளது. இனம், ஊர், நாடு, தன்னகம், தாயகம் என்ற சுயதேடல்களும் சுயநிர்ணயங்களும் உருவாகி யுள்ளன. இவை நினைவு கூரப்படவும், நிலை நிறுத்தப்படவும், அடையாளப்படுத்தப்படவும் தினங்களை உருவாக்கி வருடாவருடம் அத்தினங்களில் ஒன்றுகூடி, கொண்டாடியும் கொண்டும் கொடுத்தும், கலந்து சிந்தித்தும், உரையாடியும், மகிழ்ந்தும், புத்துணர்வும், புத்துயிர்ப்பும் பெற்றுக்கொள்ளும் நிலைமை நடைமுறையில் இருக்கிறது.

இனம் இனத்தோடு, சனம் சனத்தோடு, தானாடா விட்டாலும் தசையாடும், தொப்புள் கொடித்தொடர்பு, ஊரும்வேரும், விழுதும் வேரும் என்ற சொற்தொடர்கள் பொருள் பொதிந்த அர்த்தமுடைய தொடர்களே என்பது உலகை உற்று நோக்குகிறபோது தெரிய வருகிறது. இத்தனையும் இனபலகலாச்சார சூழலில் புரிந்துணர்வுகளோடும், பேணுத லோடும் இயங்குநிலையில் இருப்பது உலக சமாதானவாழ்வுக்கு உதவுகின்றது. கொண்டாடப்படும் தினங்கள் சமய அடிப்படையிலும் உருவாகியிருக்கின்றன. இவை சமய உண்மைகளை, வரலாற்றை அறியவும், அறிவிக்கவும், ஆராதிக்கவும் உதவுகின்றன. தமிழ் இனத்திலே தைப்பொங்கல் பண்டிகை, தீபாவளி, வருடப் பிறப்பு போன்ற தினங்கள் நடைமுறையில் இருக்கின்றன. ஒரு காலத்தில் பொருள்தேடி இடம்பெயர்ந்து மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ், பீஜித்தீவுகளுக்குப் போன தமிழர்களும் பின்பு இனப்படுகொடுமை களாலும், கொலைகளாலும் கனடா, சுவிஸ், ஜேர்மனி, டெர்மார்க், இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய உலக நாடுகளுக்கு ஓடித் தஞ்சம் அடைந்த தமிழர்களும், தமது நெருக்கடிகள், சிக்கல்கள், அழுத்தங்கள் தீர்ந்த பின்பு தமது பாரம்பரியப் பெறுமதிகளுக்கும், உணர்வுகளுக்கும், அடையாளங்களுக்கும் இருப்பாய் விளங்கிய பண்டிகைகளையும், புனிதத்தினங்களையும் நினைவு கூர்ந்து கொண்டாடி வருகிறார்கள்.

இவற்றால் இனவேர்களும், ஊர்களும், உறவுகளும் இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுவதோடு போதனைகளும் செய்கிறார்கள். இப்போதனை முயற்சிகள் விழாக்களாகவும் வடிவம் கொள்கின்றன. இவை பார்வைக்கும் பங்களிப்புக்கும் பகிர்வுகளுக்கும் உதவுகின்றன. இனம், சமயம் என்றில்லாமல் மக்கள் அனைவரும் நினைவு கூரக்கூடியது பல தினங்கள் வருடாவருடம் எல்லாநாடுகளிலும் கொண்டாடப்படுகின்றன. தந்தையர் தினம், அன்னையர் தினம், காதலர் தினம், முதியோர் தினம் முதலியன மக்கள் அனைவருக்கும் வேண்டிய உரிய தினங்களாக்கப்பட்டுள்ளன. உலகத்திலே தேவை கருதி உருவாக்கப்பட்ட பல தினங்கள் உண்டு. இவை தேவைப்படுவனவற்றிற்காகத் தோற்றுவிக்கப்பட்ட தினங்களாகும். வாழ்க்கைப்போக்கில் தேவைகள் குறித்த சிந்தனையும் செயல்பாடும் முக்கியமானவை.

உணர்வுத்தேவை, உடுப்புத்தேவை, இருப்புத்தேவை, ஓய்வுத்தேவை, உறக்கத்தேவை, உறவுத்தேவை, உரையாடல் தேவை ஆகியனபற்றி யோசனைகள் மனிதர்களுக்கும், உணவு உறக்கத் தேவைகள் குறித்த தேடல்கள் மிருகங்கள், பறவை, பூச்சி, புழுக்களுக்கும் தவிர்க்க முடியாத தவிர்த்தால் அல்லது மறந்தால் அதனால் வரும் பாதிப்பு ஒரு நிலை குலைவை உண்டாக்கி விடுவதை அனைவரும் அனுபபூர்வமாக அறிந்தது தான்.

இதனாலேயே தேவை குறித்த தேடலும் முயற்சியும், சேகரித்தலும் காத்தலிலும் மூச்சை உள்இழுத்து வெளிவிடும் சுவாசம் போன்று சுழற்சிகளும், சுயசிந்தனைகளும், பொதுச்சிந்தனைகளும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. புலம்பெயர் தமிழர்களின் உணர்வுகள், உரிமைகள் கடமைகள் என்ற தளங்களில் நின்று சிந்திக்கும் போது நமது பண்டிகைத் தினங்கள் போன்று, பண்பாட்டுத் தினங்கள் போன்று திருவிழாத் தினங்கள் போன்று காதல் தினங்கள் போன்று தமிழ் தினம் என்னும் மொழித்தினம் போன்று தமிழ் மொழியை உறுப்புச்சிதையாமலும் தொனிப்புக் குறையாமலும் ஓசை கெடாமாலும் அறுத்து உறுத்து உச்சரிக்கும் தமிழ் உச்சரிப்பு தினம் என்ற (Tamil Pronunciation Day) ஒரு தினம் உருவாகி உலகு எங்கும் பரவிப் பயன்கொள்ள வேண்டும். இதனாலே தமிழ் பேச்சுவழக்கில் தமிழ்மொழியின் தனித்தன்மை தலைதூக்கும். அழகு, சுவை துலங்கப் பேசும் முறையும் ஆர்வமும் தோன்றும். இந்த தமிழ் உச்சரிப்பு தினத்தை கனடாவில் தொடங்கி நடத்தலாம். கனடாவில் தொடங்கப்படும் இந்த முயற்சி உலகம் எங்கும் வாழும் தமிழர் மத்தியில் பரவி மொழித்திறனுக்கும் மொழிவளர்ச்சிக்கும் துணையாக முடியும்.

இருபதாம் நூற்றாண்டில் இப்படியான பல பயன் உள்ள தினங்கள் உருவாகி நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சுவீடன் நாட்டில் கதை சொல்லும் தினம் உருவாக்கப்பட்டது. நமது தமிழ் இனத்தில் கதை சொல்லும் வழக்கம், கதைகள் மூலம் கருத்தை நிலைநாட்டும் முயற்சி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டது. கர்ணபரம்பரைக் கதை, பாட்டி சொன்ன கதைகள் எனப்பல கதைகள் வழக்கில் இருந்தன. கதை சொல்லும் முறையும் கேட்கும் முறையும் தாலாட்டுப்பாடல் போல வாழ்க்கைச் சுமைகள் காரணமாகவும், அழுத்தங்கள், சூழ்நிலைகள் காரணமாகவும் குறையத் தொடங்கிவிட்டன.

வீடுகளில் சுதந்திரமும் உரிமையும் வாய்க்கப்பெற்ற பாட்டன் பாட்டிகளுக்கு தினம், தினம் கதை சொல்லும் நேரங்களை உண்டாக்கி கதை சொல்லி வருகிறார்கள். நமது இனம் எப்பவோ தொடங்கியதை சுவீடன் இப்பொழுது தொடங்கி நமக்கும் புத்துணர்ச்சியை தருவது மகிழ்ச்சியே.

இது போன்றே நிறுத்தப்புள்ளிகளுக்கான தினமும் இருபதாம் நூற்றாண்டில் தொடங்கப் பட்டது. ஒரு மொழியை எழுதும்போது சரியான நிறுத்தக்குறிகளைப் போடாது போனால் கருத்துக்கள் அர்த்தங்கள் மாறி விபரீதப் பொருள்கள் தோன்றி குழப்பங்களும், சந்தேகங்களும் உருவாகி விடும்.

நிறுத்தக்குறிகள் என்ற Punctuation Mark's தமிழ் மொழிக்குப் பழைமையானதே. ஓலைச்சுவடிகளில் தமிழ்மொழியை எழுதியகாலத்தில் அது எழுத்தாணி என்னும் கருவியால் எழுதிய காரணத்தினால் குற்று, குறிகளையும், மெய் எழுத்துகளையும் புள்ளி போடாமல் எழுதினார்கள். காரணம் ஓலைச்சுவடி கிழிந்து விடும் என்பதாலேயே. இந்த வழக்கம் நமது தாயகத்தில் காண உறுதிகள் எழுதும் நொத்தாரிசுகள் இன்றும் கைக்கொள்ளுகிறார்கள். ஓலைச்சுவடிகளில் அல்ல. கடதாசித்தாள்களில்.

சீவகசிந்தாமணி என்னும் நூலை எழுதிய சீழ்த்தலைச் சாத்தனார் என்னும் புலவர் அக்காலத்தில் தமது மாணர்களுக்குப்பாடம் சொல்லிக்கொடுக்கும் போது அவர்கள் எழுத்துப் பிழையோ அன்றி, உச்சரிப்பு பிழையோ விட்டால் தான் கையில் வைத்திருக்கும் எழுத்தாணியால் தனது தலையிலே குத்திக்கொள்வாராம். அந்தக் காலத்தில் மாணவர்களைக் காயப்படுத்தக் கூடாது என்ற சட்டமோ விதிமுறையோ இருந்ததாகத் தெரியவில்லை. புலவர், மாணவர்களின் பிழைகளுக்கு தனது தலையை வருத்திக் கொண்டார். பாவம் அவர் தலையில் குத்திய காயங்களால் சீழ்வடி யுமாம். இதனாலேயே அவருக்கு சீழ்த்தலைச் சாத்தனார் என்று காரணப்பெயர் உண்டாகியது.

நிறுத்தப்புள்ளியின் வரலாறு தமிழ்மொழியில் சிறப்பான இடத்தைப் பெற்றது. தமிழ்மொழிக் குரிய நிறுத்தக்குறிகளை இந்தியத்தமிழ் நாட்டிற்கு சமயசேவை செய்ய வந்த பெஸ்க்கி என்ற பாதிரியார், வீரமாமுனிவர் என்ற தமிழ்ப்பெயர் தாங்கி மீண்டும் அறிமுகப் படுத்தினார். சீழ்த்தலைச் சாத்தனாருக்குப் பின்பு பல ஆண்டுகள் கழிய வீரமாமுனிவர் செய்த சேவை தமிழுக்குப் புத்துயிர்ப்பை வழங்கியது. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் நிறுத்தக்குறிகளின் அவசியத்தைக் கருதி தமது இலக்கண நூல்களில் விளங்கவைத்தார்.

ஆறுமுகநாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டலே செய்த தமிழ்ச் சேவைகளில் தமிழ் வசனநடையில் நிறுத்தக்குறிகளும், தமிழ்ப் பேச்சில் உச்சரிப்புச்சுத்தமும் மொழி இயலில் கணிப்புக்குரியதாகி தமிழ்ப் படிப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

National Punctuation Day என ஒருதினத்தை உருவாக்கியவர் பத்திரிகையாளரான ரூபின் என்பவரே. மொழி வளர்ச்சிக்கும், மொழித் திறன் நிலைப்புக்குத் தேவையான முயற்சி எடுக்கப்பட வேண்டியது காலத்தின் கடமை யும், கட்டாயமுமாகும். தமிழ் உச்சரிப்புத் தினம் புலம்பெயர்ந்த தமிழ் இனப்பாரம்பரியத் தினருக்கு அவசிய அவசரத்தேவையானதே. இன்றைய இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும், சூழ்நிலைத்தாக்கங்களால் கலப்புத் தன்மை தென்படுகிறது. இத்துடன் கலைத்திறன் வெற்றிபெறுவதற்காக மொழித் தூய்மையை பேணும் போக்கு குறைந்து வருகிறது. தமிழ்ப்பாடல்களைப் பாடும்போது, பொருள் விளக்கமும் தேவையில்லை. உச்சரிப்புச் சுத்தமும் தேவையில்லை. பின்னணி இசைகளுக்கு இணையாக ஓசை விளக்கத்தில் கவனம் இருந்தால் போதும் என்ற போக்கும் உருவாகியிருக்கிறது. இப்படியான நிலை ஏன் உருவாகியது என்று ஒரு இசையமைப்பாளரிடம் கேட்டபோது, தமிழ் அறிஞர்களும் தமிழ்ப்பற்றும், உணர்வும் உள்ள தமிழ் மக்களும் சும்மாயிருப்பது தான் காரணம் என்றார்.

நண்பா! இதனை நாம் சிந்தனையில் கொண்டு சும்மாயிருக்காமல் சில கடமை களைச் சுமப்போம். தமிழ் உச்சரிப்புச் சுத்தத்திற்கான முயற்சிகளைச் செய்வோம்.



வேறு என்ன
பிற பின்பு
அன்பு
ஈழத்துச்சிவானந்தன்

- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# மரண அறிவித்தல்

பிறப்பு
கார்த்திகை 18, 1927



இறப்பு
பங்குனி 13, 2010

## திருமதி விசுவலிங்கம் பாக்கியலட்சுமி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பாக்கியலட்சுமி அவர்கள் 13-03-2010 சனிக்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா (நீலயினார்) சீனிப்பிள்ளையின் அன்பு மகளும், சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகளும், விசுவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும்,

பத்மநாதன் (சுவிஸ்), ரஞ்சினிதேவி (கனடா), மல்லிகாதேவி (கனடா), குகராசன் (குகன் - சுவிஸ்), தவமணிதேவி (ரம்மணி - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

விமலினி (சுவிஸ்), மகேந்திரராசா (மகேந்திரன் - கனடா), ஜெயக்குமார் (கனடா), முத்தமிழ்ச் செல்வி (லதா - சுவிஸ்) மணிவண்ணன் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும்

காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், மனோன்மணி, இராமநாதன், அன்னபூரணி, செல்வரெத்தினம், ஆகியோரின் சகோதரியும், நாகராசா, துரைராசா (பரிஸ்) ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சின்னத்தங்கம், பரமேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும்,

பகீஷ், பிரதீஷ், அர்ச்சன், சனன், பவித்திரா, கிஷாந்தி, மாதங்கி, சுசாந், சிந்துஜா, சர்மியா, சாகித்யா, மதுஷாந், மயூரிகா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17-03-2010 புதன்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரையும், 18-03-2010 வியாழக்கிழமை காலை 9:00 மணி முதல் 11: 00 மணி வரையும் **4164 Sheppard Avenue East (Sheppard and Midland)** இல் அமைந்துள்ள **Ogden Funeral Home** இல் பார்வைக்காக வைக்கபபடும். தகனக்கிரியை நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு: **416-431-2181**
**647-864-0224**
**613-884-6831**

# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# நூற்றாண்டு விழா

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி, கொக்குவில் இந்துக்கல்லரி பழைய மாணவர் சங்கம் - கனடாவினால் நூற்றாண்டுவிழா இராப்போசன விருந்துடன் கொண்டாடப்படவுள்ளது.

காலம் : March 27th, 2010

இடம் : J & J Swagat Convention Centre,
415 Hood road, Markham, ON

நேரம் : மாலை 6 மணிக்கு

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கும், முன்கூட்டிய பதிவுகளுக்கும்

**905-472-4194** **416-431-1060**
**416-318-6195** **416-621-6308**


# APARTMENTS FOR RENT




## $250 Move In Bonus

*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*

**Pl. Call: 416.264.2818**


# வாழ்க்கைக்குள்ள...

**18ஆம் பக்கத்தொடர்ச்சி**

தாமிரா: சமீபமா ஜெயிக்கிற எல்லா படங்களையும் வச்சு சொல்றேன். வாழ்க்கைக்குள்ள இருந்து கதை வரணும். அதுதான் வெற்றி பெறும். அந்தச் சூழல்தான் ஆரோக்கியமா இருக்கும். சினிமாத்தனமா வர்ற படம் வெற்றி பெற்றா, அதே மாதிரி படங்கள்தான் வர ஆரம்பிக்கும். ஆனா, ஒரு சினிமா கதை, வாழ்க்கைல இருந்து வந்தா வெவ்வேற களம் கிடைக்கும். ஒரு யதார்த்தமான, நல்ல கதை கமர்ஷியலா ஹிட் ஆகும். அதே சமயம், கதை சுவாரஸ்யமா இருக்கணும். சினிமா ஆடியன்ஸ் எப்பவுமே ஓப்பனா இருக்காங்க. நீ என்ன தர்றேன்னு எதிர்பாத்துக்கிட்டு இருக்காங்க.




கேள்வி: நடிகர்களுக்காக பின்னப்படுற கதைகள் பத்தி உங்க கருத்து என்ன?

தாமிரா: இதுல இருக்குற சிக்கல் என்னன்னா, உங்க மனசுல இருக்குற கதையை பண்ண முடியாது. நடிகரோட போன படத்தை ரெ.ஃ.பரன்ஸா வச்சுத்தான் கதை பண்ண முடியும். இப்பிடி கொஞ்சம் கொஞ்சமா கதை மேல இருக்கற நம்பகத்தன்மை குறைஞ்சுக்கிட்டே வரும். ஒரு கட்டத்துல ரசிகன் சலிப்பாயிடுவான். விஜய்கூட 'காதலுக்கு மரியாதை', 'பூவே உனக்காக'ன்னு வெரைட்டியா படங்கள் பண்ணினவர்தான். ஒவ்வொரு நடிகனும் வெரைட்டியா நடிக்கலைன்னா, ரொம்ப நாளைக்கு சர்வைவ் பண்ண முடியாது.

கேள்வி: திரைக்கதையோட வலுக்கட்டாயமா திணிக்கப்படும், நகைச்சுவை, பாடல், ஆடல், சண்டைக் காட்சிகள் தேவையா?

தாமிரா: இந்த ஸ்கேல் எல்லாம் கதையோட பலவீனத்தால வர்றது. கதை பலமா இருந்தா அதெல்லாம் தேவையா இருக்காது. தமிழ் சினிமாவுல பாடல் காட்சிகளோட பழகிட்டோம். அதை அவ்வளவு சீக்கிரம் பிரிக்க முடியாது. அதுவும் உறுத்தாம இருந்தா பரவாயில்ல. நல்ல நகைச்சுவை இல்லாம போனதுக்குக் காரணம், அது தனி டிராக்கா ஆகிப்போனதுதான். கதையோட சேர்ந்த நகைச்சுவைதான் இயல்பா இருக்கும். காமெடிங்கறது தனி டிராக்கா, தனி பேட்டர்னா ஆயிடுச்சு. ஆடியன்ஸ், நீங்க என்ன குடுக்குறீங்களோ அதைப் பாக்குறதுக்குத்தான் வர்றான். அது நல்லா இருக்கணுங்கறதுதான் அவனோட ஆசையா இருக்கு. இப்பல்லாம், ஒரு படம் வெற்றியை நோக்கிப் போறது மிகக் கடினமான செயல். தோல்வி ரொம்ப ஈசியா வந்துடும். தியேட்டர்ல படம் பாக்கறவங்கள்ல குறைஞ்சது இருநூறு பேராவது, படம் முடிஞ்சதும் எஸ்.எம்.எஸ். அனுப்பிடுறாங்க. 'படம் நல்லா இருக்கு, நல்லா இல்லை'ன்னு. அதுவும், ரெண்டாவது ஷோ ஆரம்பிக்கறதுக்கு முன்னாடியே அனுப்பிடுறாங்க. அதனால, ரொம்ப கவனமா இயக்குநர்கள் படம் எடுக்க வேண்டியிருக்கு.

# தாய்த்திருநாடு

இன்னும் உறங்குகின்றது
அதிகாலை ஐந்து மணி

அன்புதான் இன்ப ஊற்று
எனப் போதிக்கும்
அரசமரத்தின் துளிர்ந்த
இலைகள்
வேலும் சங்கும் ஒன்றாய் ஒலிக்கும்
மணி நாக்கின் இசை வெள்ளம்

தேன் சிந்தும்
காற்றில் பிணைகின்றது
அக்பரின் நீண்ட இசை

உயர்ந்த கோபுரத்தின்
குருசின்மீது
உருகி வழியும்
மெழுகு வாசனை

பால் வணிகனின்
சயிக்கில் மணிஒலி
இளநீர் வியாபாரியின்
கடகடக்கும்
வண்டில் சில்லுச்சத்தம்

குதிக்காலில் அடிக்கும்
செருப்புக் காலடிகளுடன்
உற்பத்தி நிலையங்களுக்கு
உதிரம் கொடுப்பதற்கு
உணவுப் பொதிகளுடன்
ஓடுகின்ற வாலிபர் கூட்டம்

சாரம் கட்டித் துவாயால் போர்த்து
சிகரெட் புகையில் வளையம் உருட்டி
அதிகாலைப் புதினங்களை
அலசுகின்ற
தெரு ஒழுங்கை வாசிகள்

வேக நடையில் விரைகின்ற
கூலித் தொழிலாளர்
அரசப் பணியாளர்
சந்தை வியாபாரிகள்
தேநீர்க்கடைத் தட்டியைத் திறந்து
சிலர்
சாம்பிராணிப் புகை காட்டுகின்றனர்,

எதிர் ஒழுங்கையால்
கடமை உணர்வுடன்
ஓடிவந்த தம்பி
உடுத்திருந்த
சாரத்தைத் தூக்கி
மார்புக்குக்கீழே
வரிந்து கட்டிக்கொண்டு

இழுத்து ஆத்துகின்றார்
தேநீர் கோப்பி

எமை ஈன்ற மண்ணின்
கோப்பிச் சுவையில்
நனைந்த என் இதயத்தினுள்
புகுந்தது நாளிதழ்.



முத்துராஜா

# HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

# Another Project ...
# In Etobicoke



**Location: HWY 427 / Eva Road**

**Date: March 27 & 28, 2010**

**Time: 11:00am - 4:00pm**

## For early booking

**Pl. Call @ 416.321.6969 / 905.712.2666**

1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 29, Mississauga

# நான் இருக்கும் இடத்தில் தான் இப்போ நான் இருக்க வேண்டும்

வாழ்வு நீரோட்டத்தில் நான் கட்டாயம் இருக்க வேண்டிய இடத்தில் தான் நான் இப்போ இருக்கிறேன் என்பது தெரிந்ததும், எனக்குக் கூடிய புரிந்துணர்வு ஏற்படும்.

நான் ஏன் முன்னேறாது இப்படித் தேங்கி நிற்கிறேன் என நீ விசனப்படுகிறாயா? இவ்வாறு தடைப்படுவது உனக்குக் கோபத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தினால் நிச்சயமாகச் சரியான பாதையில் நீ பயணிக்கவில்லை என்பதுதான் அர்த்தம். நீ எங்கே போயிருக்க வேண்டும் என நினைக்கிறாய்? நீ இப்போ இருக்கும் இடத்தில் என்ன பிழை? நீ இப்போ தரித்திருக்கும் இந்த இடத்திலிருந்து நீ முன்னேறுவது உன் விடாமுயற்சியில் தான் தங்கி உள்ளது. தற்போது நீ உள்ள இடத்திலிருந்து உனது குறிக்கோளைக் கற்றுத் தேறாவிடின் உனது இலட்சியத்தையும், போகவேண்டிய இடத்தையும் அடைய உன்னால் முடியாது. சுய அலசலை நீ மேற்கொள்ளும் போது உன்னைப்பற்றிக் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய வியப்பூட்டும் பல தகவல்களைக் காண்பாய். நீ கட்டாயம் கற்றுத் தேறவேண்டிய பாடங்கள் வேறெங்கும் இல்லை. உன்னைப்பற்றி நீ படித்துப் புரிந்து கொள்ள வேண்டிய சகலதும் நீ இப்போ தரித்திருக்கும் இடத்தில்தான் உள்ளன.

உன்னைப்பற்றிய சகலதும் உனக்கு நன்கு தெரியும் என நீ நினைக்கலாம். ஆனால் உனது நம்பிக்கை, சந்தேகம், தாங்கும் திறன், நடக்கும் முறை, பொறுமை போன்றவற்றைப் பற்றி நம்பத்தகுந்த தகவல்கள் நீ இப்போ இருக்கும் இடத்தில் உன்னைச் சூழ்ந்திருக்கின்றன. நீ மறந்த, கவனிக்காது புறக்கணித்த, எதிர்த்த, மறுத்த முக்கியமான விடயங்கள் பல உனக்கருகே இருக்கின்றன. உனது வலப்பக்கத்திலோ இடது புறத்திலோ நீ ஏற்றுக் கொள்ளாத ஆசீர்வாதங்கள், மன்னிக்காத குற்றங்கள், புண்படுத்திய இதயங்கள், போஷித்து வளர்க்கப்படாத




திறன்கள், நீ செய்ய வேண்டிய நன்மைகள் பல இருக்கின்றன. நீ இப்போ நிலைகொண்டுள்ள இடத்திலுள்ள ஒவ்வொருவரும், ஒவ்வொன்றும் உனக்கு ஏதாவது ஒன்றைக் கொடுக்கவோ, கற்பிக்கவோ காத்துக்கொண்டிருக்கின்றனர். நீ விரும்பும் இன்னுமொரு இடத்திற்குப் போக முயற்சித்திருப்பதால் தான் இங்கு உனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பரிசுகளையும் இங்கு படிக்க வேண்டிய பாடங்களையும் உதாசீனப்படுத்தி நீ தவறவிட்டு விடுகிறாய்.

உனக்காகக் காத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் புறக்கணித்து, படிக்க வேண்டிய பாடங்களைப் படிக்காது, வாழ்வில் உண்மையாக எங்கே நீ இப்போ இருக்கிறாய் என்பதை இன்றுவரை நீ மறுதலித்து வந்திருக்கலாம். இப்போது பின்வரும் கேள்விகளுக்கு மறுக்காது பதில் சொல். வாழ்வில் நான் இப்போ எங்கே இருக்கிறேன் என நம்புகிறேன்? இப்போ நான் இருக்கும் இடத்தைப் பற்றி என்ன நினைக்கிறேன்? எனது தற்போதைய நிலையைப் பற்றி நான் இப்போ உணர்வது என்ன? இந்தக் கேள்விகளிற்கு உனது பதில்களே நீ போகவிரும்பும் இடத்திற்கு உனது பயணச் சீட்டுக்கள்.

**நான் இப்போ இருக்கும் இடத்தைப் பற்றிய சகலதையும் தெரிந்து கற்றுக்கொள்ளும் முயற்சியில் இன்றுமுதல் ஈடுபடுகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 166

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTeK COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX

For Sale
$950,000

• Warden/Lawrence
• Commercial Condo Factory/ Manufacturing
• All Existing Light Fixtures, Some Chattels Included.

Houdr for Sale
$379,900

• Portunion / 401
• 3+1 bedroom
• 4 washrooms
• Detached house 2-Storey
• Stove ,Fridge ,Washer ,Dryer ,Dishwasher ,All Elf ,All Window Coverings.

House FOR SALE
$294,900

• Finch/Markham/Tapscott
• 2-Storey detached
• 3 +1 bedroom • 3 Washrooms
• 2 Fridges , 2 Fridges , Washer, Dryer , Cac

FOR SALE
$139,900

• Woodbine / Hwy 7
• Restaurant Business for sale • Prime Location • Low Rent • All The Chattels Including All Granite Tables ,Equipments And Signage And More. • Motivated Vendor

Sale Of Business

$99,800
Simcoe/Beatrice, Oshawa, ON. Busy Convienience Store In A Busy Intersection ,Very Affordable Rent Of $1650/ Month (Incl Tmi), Income From Lottery Can Pay Off Your Rent ,Opportunity To Improve Your Business , Movie Rental Brings Extra Money , Very Rarefind , Price Includes Business And Goodwill Only , Stock (Approximately 20K) Comes Extra , Lease Term Is 5+5Years.

House for Sale
$409,900

• Taunton/Baycliffe, Whitby, Ontario
• 4 bedrooms • 3 washrooms
• Stove ,Fridge, Washer, Dryer, All Elf, All Window Coverings.

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

AVM
MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. E #250
(GTA Square Mall)
Toronto, ON M1S 0C2
For More Information
Please Contact Paddy at:
(416) 609-2542
paddy-avmmax2000@hotmail.com
www.avmmax2000.ca
East Coast Tours
⇒ June (25th - July 4th)
⇒ July (30th - August 8th)
⇒ August (27th - September 5th)
9 Days Trip Starting From: $695.00/Person
• New Brunswick (Reversing Falls, Bay of Fundy)
• Nova Scotia (Cape Breton Island - Cabot Trail)
• Prince Edward Island (Anne of Green Gables, Beaches)


